www.padippakam.com

# புதிய ஜனநாயகம்




நீதிமன்ற

ஊழல்கள்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

1-15 ஜூலை '90 5/16 விலை ரூ.2/-



# ஈழம்: துரோகத்தின் விலை - சாவு

படிப்பகம்

www.padippakam.com

கிழக்கு ஐரோப்பிய போலி கம்யூனிச நாடுகளில் முதலாளித்துவ 'ஜனநாயகம்' வெற்றி பெற்றவுடன் இலைமறை காயாக இருந்த சீரழிவுகள் வெளிப்படையாக பெருகக் தொடங்கிவிட்டன. ஹங்கேரியின் தலைநகரம் புடாபெஸ்டில் மஸாஜ் பார்லர் என்ற பெயரில் விபச்சார விடுதிகள். ஓரினச் சேர்க்கை விடுதிகள் பெருத்துவிட்டன. பெர்லின் சுவரின் வீழ்ச்சிக்கும் பிறகு கிழக்கு ஜெர்மனியில் விபச்சார விடுதிகள் கேளிக்கை விடுதிகளில் கூட்டம் அலைமோதுகிறதாம். தங்களது குறைந்தபட்ச கட்டணம் 50 மார்க்குகள் (ஜெர்மன் நாணயம்) என்றும், தற்போது கிழக்கு ஜெர்மன் விபச்சாரிகள் 20 மார்க்குகளுக்கு தங்களை விற்றுக் கொள்வதால் தங்கள் தொழிலில் பெரும் நெருக்கடி தோன்றி விட்டதாகவும் மேற்கு ஜெர்மன் விபச்சாரிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. ''என் பெற்றோர் இருவரும் வேலைக்குப் போய் ஒரு மாதத்தில் வாங்கிய சம்பளத்தை ஒரே நாள் இரவில் நான் சம்பாதித்து விடுகிறேன்'' என்று பெருமையடித்துக் கொள்கிறாள் விபச்சாரத்தில் இறங்கியுள்ள 21 வயது கிழக்கு ஜெர்மனி பெண். மணமான குடும்பப் பெண்களைப் போல நடிக்கும் செக்கோஸ்லோவாகிய விபச்சாரிகள் ''பீர் அருந்திச் செல்வோமா? என்று வீதியில் போகும் இளைஞர்களை விபச்சாரத்திற்கு அழைப்பதும் 10 டாலர்களுக்குத் தங்களை விற்றுக் கொள்வதும் சகஜமாகிவிட்டது. ருமேனியாதான் இதன் உச்சியில் நிற்கிறது. இரண்டு பாக்கெட் சிகரெட் அல்லது ஒரு ஜோடி நைலான் காலுறைகளுக்கு தங்களை விற்கத் தயாராயிருக்கின்றனர்' பல பெண்கள்.

கிழகக்கு ஐரோப்பாவில் வீசிய ஜனநாயகப் புயல் கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த ஒழுக்கம் கட்டுப்பாடுகளையும் அடித்துக் கொண்டு போய்விட்டது.




''சாத்தானின் கவிதைகள்'' என்ற நூலை எழுதியதற்காக ஈரானின் முன்னாள் மதவெறித் தலைவர் கொமெய்னியால் மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரிட்டிஷ் எழுத்தாளர் சால்மன் ருஷ்டி. இப்போது பாகிஸ்தானில் தினமும் மூன்றுமுறை கொல்லப்படுகிறார். பிரபல பாக். நட்சத்திரங்கள் நடிக்கும் விறுவிறுப்பான ஒரு திரைப்படத்தில் கதைப்படி ருஷ்டி கடைசியில் கொன்றொழிக்கப்படுகிறார். இப்படம் தினசரி 3 காட்சிகளாக 65 திரையரங்குகளில் ''ஹவுஸ் ஃபுல்'' ஆக ஓடுகிறது. மதவெறிக்குத் தீனி போடும் இப்படத்தை எதிர்த்து மேலைநாட்டுக் கல்வியும் நாகரீகமும் கொண்ட பிரதமர் பெனாசிர் வாயே திறக்கவில்லை. ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள அவரும் மதவெறியின் காலடியில்தான் விழுந்து கிடக்கிறார்.

ருமேனியாவில் போலிக் கம்யூனிச சர்வாதிகாரி சியேசெஸ்கூவுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்த போது வாழ்த்தி வரவேற்று ஊக்குவித்த ஏகாதிபத்தியவாதிகள், இப்போது மீண்டும் அங்கே சர்வாதிகாரம் தொடர்வதைக் கண்டு விழி பிதுங்கி நிற்கிறார்கள். உடனடியாக ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டாவிட்டால் பொருளாதார உதவிகளை நிறுத்திவிடுவோம் என்று அமெரிக்க மாமா எச்சரிக்குமளவுக்கு அங்கே இடைக்கால அதிபர் இலியெஸ்கூவின் சர்வாதிகார காட்டாட்சி தலைவிரித்தாடுகிறது. சுரங்கத் தொழிலாளர்களில் ஒரு பிரிவினரை பாசிச குண்டர் படையாக வளர்த்து. அவர்களைக் கொண்டே அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடக்கி வருகிறது. அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை இரும்புத்தடிகள் கோடாரிகளுடன் வந்து பகிரங்கமாக வீதிகளில் தாக்குகிறது. எதிர்ப்பாளர்களின் வீடு புகுந்து சூறையாடி, 50க்கும் மேற்பட்டோரை ரகசியமாக கொன்றொழித்துள்ளது. போலி சோசலிச சர்வாதிகாரத்துக்கு முதலாளித்துவ ஜனநாயகம் ஒருக்காலும் தீர்வாகிவிடாது; அது மீண்டும் சர்வாதிகாரத்துக்கே இட்டுச் செல்லும் என்பதை ருமேனிய விவகாரம் விரைவிலேயே நிரூபித்துக் காட்டி விட்டது.

ரஷியக் குடை நிழலில் காலம் தள்ளிவந்த கியூபாவில் இப்போது கடும் பொருளாதார நெருக்கடி. தன் நாட்டு மக்களுக்கு சோறு போட முடியாத கோர்ப்பசேவ் கியூபாவுக்கு கையை விரித்துவிட்டார். எந்திரங்களுக்குப் பதில் உடல் உழைப்பு. சமையல் எரிவாயுக்குப் பதிலாக விறகு - என்று கற்காலத்திற்கு திரும்புகிறது கியூபா. மின்சாரம், சிமெண்ட் உற்பத்தி பாதியாகக் குறைக்கப்பட்டுவிட்டது. எண்ணெய் இறக்குமதி 12 மில்லியன் டன்களிலிருந்து 4 மில்லியன் டன்னாக குறைக்கப்பட்டுவிட்டது. புதிய பள்ளிகள், மருத்துவமனைகள், வீடுகள் கட்டுவது நிறுத்தப்பட்டுவிட்டது.

இதற்கிடையில் கியூபாவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் ஐ.நா மனித உரிமைக் கமிஷன் இது குறித்து விசாரிக்க வேண்டுமென்றும் ஐ.நாவில் பேசி கியூபாவை மறைமுகமாக மிரட்டியிருக்கிறது அமெரிக்கா. பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவாகியா, போலந்து போன்ற முன்னாள் 'கம்யூனிஸ்டு' நாடுகள் அமெரிக்காவை ஆதரித்துள்ளன. இந்நாடுகளை கடுமையாகச் சாடியதுடன், இத்தனை நாள் சோசலிச பரிவர்த்தனை என்ற பெயரில் காயலாங்கடை சரக்குகளை இவர்கள் கியூபாவின் தலையில் கட்டியிருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டியிருக்கிறார், கியூபாவின் அதிபர் காஸ்ட்ரோ. குறுக்கு வழி சோசலிசத்தில் சறுக்கி விழுந்தால் இதுதான் கதி!

முதலாளித்துவ உலகம் மிகவும் கொடியது. கடந்த ஓராண்டில் மட்டும் உலகெங்கும் 250 தொழிற்சங்க முன்னோடிகள் முதலாளிகளின் அடியாட்படையால் கொல்லப் பட்டுள்ளனர். 13,000 ஊழியர்கள் விசாரணையின்றி சிறையிடப்பட்டுள்ளனர். பல பத்தாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு உள்ளனர். ஏகாதிபத்திய நாடுகளில் முதலாளிகளின் ரகசிய குண்டர்படையும், சர்வாதிகார ஆட்சி நிலவும் மூன்றாம் உலகநாடுகளில் போலீசுப் படையும் தொழிற்சங்க இயக்கத்தை மிருகத்தனமாக நசுக்கி வருவதாக சர்வதேச தொழிற்சங்க கூட்டமைப்பு தனது அறிக்கையில் அம்பலப்படுத்தியுள்ளது. கிழக்கு ஐரோப்பாவின் ஜனநாயக உரிமைக்காகப் போர்க் கொடி தூக்கிய முதலாளித்துவ உலகத்தின் முகவிலாசம் இதுதான்!

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

5-16

1-15 ஜூலை '90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# கட்டுப்பாடற்ற கொள்ளைக்கு கதவு திறந்தது!

தரகு முதலாளிகளே, தட்டுங்கள் திறக்கப்படும்; ஏகாதிபத்தியங்களே, கேளுங்க கொடுக்கப்படும் என்கிற பாசிச ராஜீவின் பழைய கொள்கைக்குப் போட்டியாக தட்டாமலே தருகிறோம்; கேட்காமலேயே கொடுக்கிறோம் என்பதையே தமது புதிய தொழிற்கொள்கையா அண்மையில் அறிவித்துள்ளது தேசிய முன்னணி அரசு. ஏற்கனவே பட்ஜெட்டில் மேலும் புதி வரிச்சலுகையோடு, கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கிக் கொள்ளவும் அனுமதித்து தர முதலாளிகளுக்கு தாராள சேவை செய்தார் நிதிமந்திரி. அதுவும் போதாது என்று, கட்சியிலே ஆட்சியிலோ பாராளுமன்றத்திலோ விவாதம் ஏதுமின்றி, பன்னாட்டு பகாசுர கம்பெனிகளுக் நாட்டை விற்பதையே புதிய தொழிற்கொள்கையாக அறிவித்து அமுலாக்கத் துடிக்கிறது வி. சிங் அரசு.

தொழில்நுட்பம் குறைந்த சாதாரண துறைகளிலும், சிறு தொழிலுக்கென ஒதுக்கப்பட் துறைகளிலும் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு தாராள அனுமதி, எந்த நிபந்தனையுமின்றி எ துறையிலும் 40% அன்னிய முதலீட்டுக்கு உடனடி அங்கீகாரம், அன்னிய பொருட்களுக்கா இறக்குமதி தீர்வையைக் குறைப்பது; இதுதவிர நூற்றுக்கு நூறு ஏற்றுமதி அடிப்படையிலா தொழில் நிறுவனங்களில் 100% அன்னிய முதலீட்டுக்கு தாராள அனுமதியளிப்பது என் கட்டுப்பாடற்ற கொள்ளைக்கு கதவை அகலத் திறப்பதையே தமது கொள்கையாக அறிவித்துள் னர். இதோடு முன்னுரிமை தரப்படும் துறைகளில் 51% ஏகாதிபத்திய முதலீடுகளுக்கு தாரா அனுமதி வழங்கப்படும். தொழில்நுட்ப முக்கியத்துவமிக்க துறைகளில் 74% வரை அன்னி முதலீடு அனுமதிக்கப்படும். தனியார் துறை மட்டுமின்றி அரசுத்துறை நிறுவனங்களிலும் அன் யக்கூட்டுக்கு கதவு அகலத் திறக்கப்படும். தொழில்நுட்பத் துறைகளில் அவசியமான ஏகாதிபத் யக் கூட்டுக்களை ஏற்படுத்திக் கொள்ள அரசுத்துறை நிறுவனங்களுக்கு சுதந்திரமளிக்கப்படு எல்லாவற்றுக்கும் மேலாக, எந்தவொரு அன்னியக்கூட்டு விவகாரத்திலும் அதிகாரவர்க்க இடு தடிப்புகளோ, சிவப்பு நாடாத்தனமோ, கட்டுப்பாடுகளோ இனி இருக்காது. முதலீடு செய் முன்வந்தாலே போதும்; உடனே நேரடியாக ஒப்புதல் அளிக்கப்படும் என்று பன்னாட்டு பகாசு கம்பெனிகளுக்கு பாய் விரித்து வரவேற்கிறது வி.பி.சிங் அரசு.

அன்னிய நாடுகளிடம் கடன்வாங்கி நமது பழைய தொழில் நுட்பத்தைக் கொண்டு தயாரி கப்படும் பொருட்களுக்கு வெளிநாட்டில் சந்தை இல்லை; இதனால் உற்பத்தித் தேக்கமு நெருக்கடியும் ஏற்பட்டு கடனை அடைக்க முடியாமல் மேலும் சுமையாகிறது. எனவே நேரடியா அன்னிய கூட்டுக்களுடன் தொழில் தொடங்குவதன் மூலம் குறிப்பாக, கிழக்கு ஐரோப்பி மாற்றங்களைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள புதிய சந்தையில் நாமும் போட்டியிட முடியும், கட வாங்கி திவாலாவதைத் தடுக்க முடியும் என்று இக்கொள்கையை நியாயப்படுத்துகிறது அரசு

ஏற்றுமதி அடிப்படையிலான இப்புதிய கொள்கையின் மூலம் நாட்டில் தொழிற்துல வளர்ந்து வேலையின்மை ஒழியும் என்று வேறு நம்பச் சொல்கின்றனர். ஆனால் இது ஏற்கனவே பாசிச ராஜீவ் கும்பல் கொண்டுவந்து தோல்வியில் முடிந்த புதிய பொருளாதாரக் கொள்கையி மறுபதிப்புதான். முக்கியமாக, உலகவங்கியின் உத்திரவும், சூப்பர் 301 சட்டத்தைக் காட் அமெரிக்கா கொடுக்கும் நிர்பந்தமுமே இப்புதிய தாராளவாதக் கொள்கைக்குக் காரணம். முன் ராஜீவ் ஆட்சியில் உலக வங்கியின் கையாளாக இயங்கிய, நிதித்துறை செயலர்களில் ஒருவரா அலுவாலியாதான் இப்போது இக்கொள்கையை வகுத்துள்ளார். ராஜீவ் காலத்தில் பொறுப்பி இருந்த கோபி அரோரா, பிமல் ஜலான் முதலான அதே அதிகார வர்க்க கும்பல்தான் புதி ஆட்சியிலும் பொருளாதாரக் கொள்கையின் சூத்திரதாரிகளாக உள்ளனர். நாட்டைச் சுடுகாடா கும் இக்கொள்கையின் விளைவாக இதுவரை இந்தியா பின்பற்றி வந்த பெயரளவிலான சோ லிச, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகள் எல்லாம் ஒரு வழியாக குழிதோண்டி புதைக்கப்பட் விட்டது. வாழைப்பழ குடியரசு நாடுகளைப் போலவே இந்தியாவின் பொருளாதாரக் கொள்ள யும் இனி ஏகாதிபத்திய நாடுகளில் முடிவு செய்வதாக மாறிவிட்டது.

இப்புதிய தாராளவாதக் கொள்கையின் மூலம் நாட்டை பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்துவிட்டதாக பாசிச ராஜீவ் கும்பலும், ஜனதா தளத்திலேயே சந்திரசேக - தேவிலால் கோஷ்டியும் கடுமையாகச் சாடுகின்றனர். ஆனாலும் இக்கேடுகெட்ட கொள்கைக் மாற்றான கொள்கை எதுவும் அவர்களிடம் கிடையாது. எதிர்ப்பு தெரிவிக்கும் போலிக் கம்யூ னிஸ்டுகள் கூட தாங்கள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் இதே கொள்கையைத்தான் பின்பற்றுகி றனர். காந்தீய சோசலிசவாதியாகச் சித்தரிக்கப்படும் நிதிமந்திரி மதுதண்டவதேயும், திட்டக்கமி ஷனின் எல்.சி.ஜெயின், ரஜினிகோத்தாரி ஆகியோரும்கூட இக்கொள்கைகளை நியாயப்படு தவே செய்கின்றனர்.

தேசிய மூலதனத்தைப் பெருக்கி தேசியப் பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்கும் நோக் லான பொருளாதாரக் கொள்கை எதுவும் இந்திய ஆட்சியாளர்களிடம் கிடையாது. எதிர்த்தரப் என்ற முறையில் ஆளுங்கட்சியின் கொள்கைகளைச் சாடுவதும் ஆட்சிக்கு வந்ததும் அதே கொள்கையை தீவிரமாக்கி நாட்டை போண்டியாக்குவதும் தான் ஓட்டுக்கட்சிகளின் நடைமுறை யாக உள்ளது. ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும் வீழ்த்தி உழுபவனுக்கே நில தைச் சொந்தமாக்குவது, அதன் மூலம் மக்களின் வாங்கும் சக்தியையும் உள்நாட்டு மூலதனத்ை யும் பெருக்குவது, சுயதேவை அடிப்படையிலான தேசியப் பொருளாதாரத்தைக் கட்டி வளர் பது, விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு முன்னுரிமை, இலகுரக உற்பத்திக் இரண்டாம்பட்ச முக்கியத்துவம், கனரகத் தொழில்களுக்கு மூன்றாவது முக்கியத்துவம் என் வகையில் திட்டமிட்ட பொருளாதாரத்தைக் கட்டியமைக்காமல் நாட்டின் பொருளாதார நெருக் டிகளை ஒருக்காலும் தீர்க்க முடியாது. புதிய ஜனநாயகப் புரட்சியை சாதிக்காமல் அதை நிறை வேற்றவும் முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

## ஹெக்டே:

# கலைந்தது பரிசுத்த பிரமை!

திருவாளர் 'பரிசுத்தம்' ராஜீவின் முகவிலாசத்தை போபர்ஸ் ஊழல் வெளி காட்டியது போல, தென்னாட்டு 'பரிசுத்தம்' ஹெக்டேவின் யோக்கியதையை டெலி போன் ஒட்டுக் கேட்கும் விவகாரம் மீண்டும் திரைகிழித்துக் காட்டிவிட்டது.

இராம கிருஷ்ண ஹெக்டே — கொள்கை பூர்வ அரசியல்வாதி, ஊழல் கறைபடியாதவர், நேர்மையின் மறு அவதாரம், தனது தூய்மையான நடத்தையால் ஜனதா கட்சிக்கும் பின்னர் ஜனதாதள கட்சிக்கும் பெருமை சேர்த்தவர் என்று துக்ளக், இந்தியன் எக்ஸ்பிரஸ் முதலான முதலாளித்துவ ஏடுகளால் போற்றப்பட்டவர்.

ஈராண்டுகளுக்கு முன்பு ஹெக்டே கர்நாடக முதல்வராக இருந்தபோது, காங்கிரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகள் ஐக்கியத்துக்கான நடவடிக்கைகளில் இறங்கி அகில இந்திய தலைமையில் இடம் பிடிக்க முயற்சித்து வந்தார். அவருக்கு எதிரான சந்திரசேகர் - பகுகுணாகும்பல் அதிருப்தியாளரான தேவ கௌடாவுக்கு முதல்வர் பதவி தருவதாக ஆசைகாட்டி போட்டி கும்பலை உருவாக்கி வளர்த்தனர். இக்கும்பலுடன் சுப்பிரமணிய சாமி, அஜித்சிங் ஆகியோர் கூட்டுச் சேர்ந்து ஹெக்டேவை வீழ்த்தும் சதிவேலைகளில் இறங்கினர். இதை அம்பலப்படுத்தி முறியடிக்க தேவகௌடா — அஜித்சிங் உரையாடலை ஒட்டுக்கேட்டு அதை எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் ஹெக்டே வெளியிட்டார். ஆத்திரமடைந்த சுப்பிரமணிய சாமி — சந்திரசேகர் கும்பல் ராஜீவின் உதவியுடன் ஹெக்டேவுக்கு எதிரான ஆதாரங்களைத் திரட்டுவதில் இறங்கியது.

ஒட்டுக் கேட்பது, உளவு பார்ப்பது, ரகசியமாக பத்திரிக்கைகளுக்கு செய்தி கொடுத்து எதிரியை சிக்கவைப்பது என மிகவும் கீழ்தரமான முறையில் ஹெக்டே செய்து வந்த அரசியல் சாணக்கியத் தனங்கள் அம்பலப்பட்டன. தமது கட்சிக்குள்ளேயே உள்ள அதிருப்தி எம்.எல்.ஏக்கள், மந்திரிகள், பத்திரிக்கையாளர்கள் உட்பட 49 பேர்களது டெலிபோன்களை ஒட்டுக் கேட்குமாறு தலைமைச் செயலர் மூலம் ஹெக்டே உத்திரவு போட்ட விவகாரம் நாடாளுமன்றத்திலே வெளியாகியது. இதைத் தொடர்ந்து ராஜீவ் கும்பலும் சந்திரசேகர் - சுப்பிரமணிய சாமி கோஷ்டியும் ஹெக்டேவை பதவி விலகுமாறு பெருங்கூச்சல் போட்டனர். வேறு வழியின்றி "தார்மீகப் பொறுப்பேற்பதாக"க்கூறி 1988 ஆகஸ்டில் ஹெக்டே ராஜினாமா செய்தார். டெலிபோன் ஒட்டுக்கேட்ட விவகாரம் தனக்கு தெரியாமலே நடந்துள்ளதாகவும், "இந்த விவகாரத்தில் நான் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறும் சுப்பிரமணிய சாமி தன்னுடைய குற்றச்சாட்டை நிரூபித்தால் அரசியலிலிருந்தே விலகத் தயார்" என்றும் சவால் விட்டார் ஹெக்டே. அவரது நேர்மையையும் தூய்மையையும் பத்திரிக்கைகள் பாராட்டின.

பின்னர் ஹெக்டே ஜனதா தளத்தின் அகில இந்திய தலைவர்களில் ஒருவராக உயர்ந்து இன்று திட்டக் கமிஷனின் துணைத் தலைவராகவும் உள்ளார். அவர் ஆட்சியில் நடந்த டெலிபோன் ஒட்டுக் கேட்கும் விவகாரத்தைப் பற்றி ஆய்வு செய்த பாராளுமன்ற விவகார துணைக் குழு கடந்த மாத துவக்கத்தில் தனது அறிக்கையைச் சமர்பித்துள்ளது. ஹெக்டே அனுமதியுடன் அவரது அங்கீகாரத்துடன் தான் டெலிபோன் ஒட்டுக் கேட்கப்பட்டது என்றும் யார் யாருடைய டெலிபோன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டன என்றும் முன்னாள் கர்நாடகத் தலைமைச் செயலரின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களுடன் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிசுத்தம் ஹெக்டேவின் பகல் வேஷம் முற்றாக அம்பலப்பட்டதும் ஜனதா தலைவர் சுப்பிரமணிய சாமி, "எனது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு விட்டது. நேர்மையான அரசியல்வாதி ஹெக்டே பதவி விலகுவாரா?" என்று குத்திக் காட்டுகிறார். இதற்கு சுருதி சேர்க்கும் அஜித்சிங் - சந்திரசேகர் கோஷ்டியோடு இப்போது தேவிலால் — சௌதாலா கோஷ்டியும் சேர்ந்து கொண்டு ஹெக்டேவின் யோக்கியதையை நாறடிக்கின்றனர். ஏனெனில் ஹெக்டே, மேஹம் தொகுதி வன்முறையை வன்மையாகக் கண்டித்து சௌதாலா பதவி விலக வேண்டுமென கூப்பாடு போட்டார். அந்த ஆத்திரத்தில் ஹெக்டேவைப் பழிவாங்க இந்த தருணத்தை தேவிலால் — சௌதாலா கும்பல் சாதமாக்கிக் கொண்டது.

"அவர் யோக்கியமான — கொள்கை பூர்வ அரசியவாதி. அவர் எங்களுக்கு புத்தி சொல்லலாம். நாங்கள் அவருக்கு புத்தி சொல்லமுடியுமா?" என்று நக்கல் செய்கிறார் சௌதாலா. ஹெக்டேவை பதவி விலகுமாறு கோருவீர்களா என்று தேவிலாலிடம் கேட்டபோது, "நேர்மையான அரசியல்வாதியான அவருக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியாதா?" என்று கிண்டலாக பேட்டியளிக்கிறார். ஜனதாதள பொதுச் செயலாளரான யஷ்வந்த் சின்ஹா "நீங்கள் பதவியிலிருந்து விலகி உங்கள் மீதான களங்கத்தைப் போக்கி பரிசுத்தத்தை நிரூபித்துக் காட்டுங்கள்" என்று ஹெக்டேவுக்கு கடிதம் எழுதி நிர்ப்பந்திக்கிறார்.

இருப்பினும் ஹெக்டே பதவி விலக மறுத்து விட்டார். "பாராளுமன்றக் குழுவின் அறிக்கையில் நேரடியாக என்மீது குற்றம் சாட்டப்படவில்லை. முன்னாள் தலைமைச் செயலரை பொய்யான வாக்குமூலம் தருமாறு நிர்பந்தித்து காங்கிரசார் செய்துள்ள சூழ்ச்சி இது" என்று நியாய வாதங்களை அடுக்கிவிட்டு பதவி நாற்காலியின் பசையாக ஒட்டிக் கொண்டிருக்கிறார். முன்பு ஹெக்டே பதவி விலகியபோது அவரைப் பாராட்டி எழுதிய பத்திரிக்கைகள் இன்று வாய்மூடிக் கிடக்கின்றன.

யோக்கிய சிகாமணி ஹெக்டே டெலிபோன் ஒட்டுக் கேட்ட விவகாரத்தில் மட்டுமா சிக்கியுள்ளார்? அவர் கர்நாடக முதல்வராக இருந்தபோது நடந்த நிலபேர ஊழல் விவகாரத்திலும் வகையாக சிக்கிக் கொண்டு தவிக்கிறார். அந்த ஊழலை ஆராய ராஜீவ் அரசால் நியமிக்கப்பட்ட குல்தீப் சிங் கமிஷன் தனது விசாரணையை முடித்து அறிக்கை சமர்பித்துள்ளது.




படிப்பகம்

www.padippakam.com

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் முதலீடு செய்யும் பலகோடி ரூபாய் மதிப்புடைய அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டத்திற்கு பெங்களூரின் முக்கியமான பகுதியில் 110 ஏக்கர் நிலத்தை ஹெக்டே அற்ப விலைக்கு தாரைவார்த்துக் கொடுத்து ஆதாயமடைந்தார். பம்பாயிலுள்ள ஒரு கட்டுமான நிறுவனம் ஹெக்டேவின் மருமகன் மனுநிசானி மூலம் இந்தப் பேரத்தை நடத்தியது. இது உத்தேச திட்டம்தானே தவிர நிலம் யாருக்கும் ஒதுக்கப்படவில்லை என்று ஹெக்டே நம்பச் சொன்னார். ஆனால் அந்த நிலத்தில் கம்பிவேலி போட்டு, கட்டுமான நிறுவனத்தின் பெயர்ப் பலகையும் உள்ளதை எதிர்க்கட்சியினர் போட்டோ படத்துடன் அம்பலப்படுத்திக் காட்டினர். பம்பாய் கட்டுமான நிறுவனமும் ஹெக்டே மருமகனும் அடிக்கடி டெலிபோனில் பேசியதற்கான ஆதாரங்கள கமிஷன் முன்பு சாட்சியமளிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர 1985 விருந்து 1988 வரை ஹெக்டே முதல்வராய் இருந்த காலத்தில் 153 முக்கிய பிரமுகர்களுக்கு பெங்களூரின் முக்கிய பகுதிகளில், 4000' சதுர அடி நிலத்தை அற்பவிலைக்கு தாரைவார்த்துக் கொடுத்துள்ளார். இதில் இவர்கள் யாருமே பெங்களூர்வாசிகள் அல்ல. அதே சமயம் லட்சக்கணக்கான பெங்களூர் மக்கள், நகர வளர்ச்சிக் குழுமத்திடம் வீட்டு வசதிக்காக விண்ணப்பித்து ஆண்டுக் கணக்கில் துண்டு நிலத்துக்காக தவம் கிடக்கிறார்கள்.

ஹெக்டேவின் யோக்கியதை கேள்விக் குறியாகி விட்ட இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பெங்களூருக்கு சென்று இயற்கை வைத்தியம் செய்து கொள்வதாகக் கூறிக்கொண்டு தேவிலால் அதிருப்தி கோஷ்டியினரை உசுப்பி விடுகிறார். ஜூன் 28 அன்று நடைபெற உள்ள கர்நாடக ஜனதா தள தேர்தலில் ஹெக்டே கோஷ்டியை வீழ்த்தி, அவருக்கு கர்நாடகத்தில்கூட செல்வாக்கு இல்லை என்று நிரூபிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறார். இதே நேரத்தில், கர்நாடக சட்டமன்றத்தில் ஹெக்டேவின் டெலிபோன் ஒட்டுக்கேட்ட விவகாரத்தைக் கிளப்பி காங்கிரசார் மேலும் நாறடிக்கின்றனர். இச்சட்டமன்ற கூட்டத்தில் கலந்து கொண்டு தன்னிலை விளக்கம் அளித்த ஹெக்டேவால் தனது நேர்மையை நிரூபிக்க முடியவில்லை.

காங்கிரசாரும் ஜனதாதள கோஷ்டிகளும் இப்படி அனைத்து முனைகளிலும் நெருக்கடி கொடுப்பதன் மூலம் கொள்கை பூர்வ அரசியலை உயர்த்திப் பிடிப்பதல்ல அவர்களின் நோக்கம். எல்லோருமே அயோக்கியர்கள், நீ மட்டும் எப்படி உத்தம வேடம் போடலாம் என்று மிரட்டிப் பணிய வைக்கும் உத்தியோடுதான் கூட்டு சேர்ந்து ஹெக்டே விவகாரத்தை உசுப்பி விடுகிறார்கள். ஒருவழியாக, முன்னுதாரணமிக்க — யோக்கியமான - கொள்கை பூர்வமான அரசியல்வாதி ஒருவரைக்கூட காட்ட முடியாத அளவுக்கு நாடாளுமன்ற ஜனநாயகம் அதன் இழிந்த இறுதிநிலையை எட்டிவிட்டது. ஹெக்டே விவகாரம் மீண்டும் இதை நிரூபித்துக் காட்டிவிட்டது.

● பாலன்

## இ.பி.ஆர்.எல்.எப். தலைவர்கள் கொலை:

# துரோகிகள் சாவில் பசப்புகளுக்கு இடமில்லை

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்ற குழுவின் தலைவரும் பாசிச ராஜீவ் கும்பலின் ஈழ் துரோக ஒப்பந்தத்தை கட்டிக் காத்த தூண்களில் ஒருவருமான பத்மநாபாவும் அக்குழுவின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் 10 பேரும் சென்னையில் ரகசிய கூட்டம் நடத்திக் கொண்டிருந்த போது விடுதலை புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். வடக்கு - கிழக்கு மாகாண பொம்மை அரசாங்க நிதி அமைச்சர் கிருபாகரன் யாழ்ப்பாணம் நாடாளுமன்ற உறுப்பினர் யோகசங்கரி உட்பட மாகாண சபை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அக்குழுவின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்கள் 2 பேர் 18 பேர் கொல்லப்பட்டனர்.

சிங்கள அரசு தற்போது ஈழத்தில் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் போரை இலங்கை கட்சிகளுடன் சேர்ந்து இக்குழுவும் அதிகாரப்பூர்வமாக ஆதரித்து இம்மாதம் ஜூன் 15ல் அறிக்கை வெளியிட்டது. மேலும் விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கும் யுத்தத்தில் இலங்கை அரசுக்கு செயல்பூர்வமான ஒத்துழைப்பு கொடுப்பதற்கு முடிவெடுப்பதற்காகத்தான் சென்னையில் கூடினார்கள்.

தமிழ்நாட்டில் ஆயுதங்களுடன் புலிகள் நடமாடவில்லையென்று ஏற்கனவே புளுகிய கருணாநிதி இக்கொலைகளையடுத்து பல பொய்களை அவிழ்த்துவிட்டார். அதே குழுவில் இருக்கும் வரதராஜ பெருமாளோ பிரிந்துச் சென்ற டக்ளஸ் தேவானந்தமோ அதிகார போட்டிக்காக இக்கொலையைச் செய்திருக்கலாம் என்று துரை போன்ற உயர் போலீசு மூலமும் தனது பத்திரிக்கைகள் மூலமும் வதந்தியைப் பரப்பினார்.

ஆனால், 'விடுதலைப்புலிகள் தமிழக போலீசு, அரசு உளவுப்படை, சுங்க இலாக்கா, கள்ளக்கடத்தல், உள்ளூர் கிரிமினல் பேர்வழிகளுடன் கூட்டுவைத்துக் கொண்டு கையூட்டுக் கொடுத்து தமிழகத்தில் அனைத்து வசதிகளுடன் ஆயுதங்களுடன் நடமாடும் 'உரிமை' பெற்றிருக்கிறார்கள். இக்கொலைகளை செய்தவர்கள் ஈழத்திற்கு தப்பித்து போனதும் தமிழகத்தில் தங்கியிருந்த புலிகள் உடனடியாக 'காணாமல் போன'தும் மேற்கூறிய கும்பல் செய்த உதவியே காரணம். தமிழக போலீசு ரகசியமாக புலிகளுடன் வைத்திருந்த நெருக்கமான உறவு இப்போது 'நடவடிக்கை' எடுக்க வேண்டிய அளவு அம்பலமாகி உள்ளது.

### ஓட்டுப்பொறுக்கிகளின் கூச்சல்

'புலிகள், இந்தியாவின் பாதுகாப்பில் இருந்த தலைவர்களை குரூரமாக அழித்தது, குடியிருப்பு பகுதியில் வெறித்தனமாக துப்பாக்கி பிரயோகம் செய்தது. தமிழ்நாட்டின் அமைதியை சீர்குலைத்தது' - இவையெல்லாவற்றிருக்கும் பொறுப்பேற்று கருணாநிதி உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று கோரியது காங்கிரசு, அ.தி.மு.க.! பாரதீய ஜனதாவும், 'கம்யூனிஸ்ட்' கட்சிகளும், ''புலிகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்... தமிழ்நாட்டில் இவற்றிற்கு (புலிகளுக்கு) ஆதரவாக செயல்படும் அமைப்புகளின் மீதும்... பாரபட்சமின்றி உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்'' எச்சரித்தன!

கொலை செய்யப்பட்ட அத்தலைவர்களுக்கு இப்படி எல்லா ஓட்டுக்கட்சிகளும் சேர்ந்து கண்ணீர் வடிக்குமளவு, ஈழ தமிழர்களுக்கு அவர்கள் செய்த ஒப்பற்ற பணிகள் தான் என்ன...? கொலை செய்யப்பட்ட அத்

பத்மநாபா: துரோகக் கும்பலின் தலைவன்



படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப் புலிகளால் அழித்தொழிக்கப்பட்டவர்கள்

தலைவர்களின் தலைமையிலிருந்த இலங்கை தமிழ் மாநில அரசாங்கம் செய்த பணிகள் இதோ...

**ஈழத் துரோகிகளின் முகவிலாசம்**

★ இந்திய ஆக்கிரமிப்பு, ராணுவத்தின் துணையுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பொம்மை ஆட்சியை நிறுவி விடுதலை புலிகளை ஒழிக்க தமிழ்த் தேசிய ராணுவத்தைக் கட்டியமைத்தது. ★ அதற்காக 3000க்கும் மேற்பட்ட தமிழீழ இளைஞர்களை பலாத்காரமாகப் பிடித்து போய் இந்திய ராணுவத்தின் மூலம் போர்ப் பயிற்சி கொடுத்தது. ★ தமது சொந்த மக்களை விடுதலை புலிகள் ஆதரவாளர்கள் என்று இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்துக்குக் காட்டிக் கொடுத்தது. ★ இந்திய ராணுவத்துடன் சேர்ந்து கொண்டு, தமது மக்களையே கற்பழித்தது. அவர்களின் உடமைகளைக் கொள்ளையடித்தது. ★ சொந்த மக்கள் இந்திய ராணுவத்தை எதிர்த்து போராடிய போது இத்தலைவர்கள் இந்திய ராணுவ அதிகாரிகளுடன் குடித்துக் கும்மாளமடித்தனர். ★ இந்திய ராணுவம் ஈழத்தில் விடுதலை புலிகளைத் தேடிப் படுகொலை செய்த போது சகலவசதிகளுடன் இத்தலைவர்கள் இந்திய ராணுவத்தின் தனி விமானங்களில் உல்லாசமாக இந்தியாவுக்கு வந்து போய்க் கொண்டிருந்தனர்.

ஈழத்திலிருந்து இந்திய ராணுவம் துரத்தியடிக்கப்பட்ட போது இத்தலைவர்களும் அதனுடன் இந்தியாவுக்கு ஓடி வந்துவிட்டார்கள். இத்தலைவர்கள் உருவாக்கிய விடுதலை புலிகள் அழிப்பு தமிழ்த் தேசிய ராணுவத்தை இந்திய அரசு பாதுகாப்போடு கப்பலில் கொண்டு வந்து ஒரிசாவிலும் கேரளாவிலும் வைத்து பராமரிக்கிறது. அதே போல் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தனது பொம்மையாட்சியின் முதல்வரான வரதராஜ பெருமாளை அண்டைநாடு லட்சத்தீவில் வைத்து பாதுகாத்தது. இப்போது அவர் ஆஸ்திரேலியாவில் உள்ளார்.

இறந்த பத்மநாபா இந்தியாவில் தலைமறைவாகத் தங்கியிருந்தார். மீண்டும் சிங்கள ராணுவம் விடுதலைப்புலிகளை அழிக்க யுத்தம் துவங்கியிருப்பதை பயன்படுத்தி இந்திய உளவுபடை 'ரா' இவர்களை ஒருங்கிணைக்கிறது. இவர்களைப் பயன்படுத்தி திரும்பவும் ஈழத்தில் மூக்கை நுழைக்க முயற்சிக்கிறது.

**துரோகிகளின் சாவில் பசப்புகளுக்கு இடமில்லை**

இப்படி சொந்த இன மக்களையும் நாட்டையும் இந்திய ஆக்கிரமிப்பு ஆதிக்க வெறியர்களுக்கும் சிங்கள இனவெறி அரசுக்கும் காட்டிக் கொடுத்து பிழைப்பு நடத்திய இந்த அரசியல் கிரிமினல்கள் "குரூரமாக" கொலை செய்யப்பட்டதற்கு பரிதாபமோ, பசப்புகளுக்கோ இடமில்லை! இக்கொலைகளை கண்டு ஓட்டுப் பொறுக்கிகள் வைக்கும் ஒப்பாரியும் கிளறிவிடும் அனுதாபமும் நகைக்கத்தக்கது.

புலிகளால் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டது. ஜனநாயக சக்திகளுக்கு ஆபத்து என்று கூச்சல் போட ஓட்டுப் பொறுக்கிகளுக்கு எந்த உரிமையும் யோக்கியதையும் இல்லை. ஈழ மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் சக்திகளுக்கு தோள் கொடுப்பதோ துரோகிகளுக்கு எதிராக போராடுவதோ இவர்களது நோக்கமல்ல.

**பகடைக்காய்களாக தமிழீழக் குழுக்கள்**

ஈழ இயக்கங்களை ஆதரிப்பதாகக் காட்டி தம ழக மக்களின் இனப்பற்றைக் கேடாக பயன்படுத்துவதுதான் இவர்களின் நோக்கம். அதற்காக ஆளுக்கொரு தமிழீழக் குழுக்களை வளர்க்க, பராமரிக்க போட்டி போடுகின்றனர். அத்தமிழீழக் குழு சந்தர்ப்பவாத, துரோக, பாசிச குழுவாக இருந்தால் அது இன்னும் இவர்களுக்கு வசதியாக இருக்கிறது.

உதாரணத்திற்கு காங்கிரசு, அ.தி.மு.க. கும்பல்தான் புலிகளை முதலில் வளர்த்து பராமரித்தது. இந்திய ஆதிக்க நோக்கத்திற்கு புலிகள் தேவையென்றபோது, அவர்களுக்கு தமிழ்நாட்டில் தலைமறைவாக தங்க முகாமும் அமைத்துக் கொடுத்தது. தமிழ் மக்களின் உயிருக்கு ஆபத்து வருமா, வராதா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், அவர்களுக்கு ஏராளமான நவீன ஆயுதங்களும் இந்திய ராணுவ அதிகாரிகள் மூலம் ஆயுதங்களை கையாள்வதற்கு பயிற்சியும் கொடுத்தார்கள்.

இவ்வாறு பல குழுக்களை வளர்த்து இலங்கையின் உள்விவகாரத்தில் போலீசுக்காரன் போல மூக்கை நுழைத்து தமிழீழத்தில் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்தது, காங்கிரசு ஆட்சி. இப்போதும் இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட மாட்டோம் என்று கூறிக்கொண்டே பாசிச ராஜீவ் கும்பலால் வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசிய ராணுவத்தை இந்தியாவில் வைத்துப் பராமரிக்கிறது, வி.பி.சிங் அரசு.

**பச்சோந்தி கருணாநிதி**

ஈழத்திலிருந்து இந்திய ராணுவத்தால் அழைத்து வரப்பட்ட 'தலைவர்'களை தமிழகத்தில் தங்க வைத்தால் சட்டம் - ஒழுங்கு சீர்கெடும் என்றார். அதே நபர்கள் இப்போது இறந்தவுடன் சகோதரர்கள்! தம்பிகள்! என்று உருகி போனார். இக்கொலைகளுக்கு காரணமான குற்றவாளிகள் என்று கருதும் நபர்களையோ, இயக்கங்களையோ நேரடியாக எதிர்க்காமல் அல்லது விசாரித்து தண்டிக்காமல் இதுதான் சமயமென்று, ஈழ போராளிகளுக்கு இனி தார்மீக ஆதரவும் இல்லையென்று ஈழப் போராட்டத்தையே காட்டிக் கொடுத்தார். போலீசிடம் அறிவிக்காமல் ஈழத்தமிழர்களுக்கு தங்க இடம் கொடுத்தால், ஆதரவளித்தால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று உத்திரவு பிறப்பித்து, போலீசுக்கு தேவாரம் தலைமையில் ஏ.கே.47 நவீன ஆயுதங்கள் வழங்குகிறார்.

**பொறுப்பேற்காத புலிகள்!**

மறுபுறம் இக்கொலைகளில் ஈடுபட்ட புலிகளோ அதற்கு பொறுப்பேற்கும் நேர்மையின்றி "நாங்கள் இக்கொலையை செய்யவில்லை" என்று புளுகினர். கொலையுண்ட ஈழத் துரோகிகளான இந்த அரசியல் கிரிமினல்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைக்குக்கூட உரிமை பாராட்ட முடியாத அளவு பாசிஸ்ட்டுகளாக சீரழிந்து போயுள்ளனர். கொல்லப்பட்டவர்கள் அரசியல் கிரிமினல்கள் என்பதை விட ஈழத்தில் தங்கள் ஏகபோக தலைமைக்கு சவாலாக இருந்தார்கள், ஆதிக்கத்தில் பங்கு கோரினார்கள் என்பதால் தான் புலிகள் அவர்களை கொலை செய்தனர். எனவேதான் தமது கொலைகளுக்கு அரசியல் ரீதியில் முகங் கொடுக்காமல் ஒளிந்துக் கொண்டனர்.

இதற்கு என்ன காரணம்? துரோகிகள், எதிரிகளை மட்டுமல்ல, தமது இறுதிகாலம் வரையில் சொந்த மக்களின் மீது விசுவாசத்தோடு இருந்து ஈழத்தின் வெளியேயும் உள்ளும் ஆதிக்க சக்திகளை எதிர்த்து போராடிய டாக்டர் இராஜாணி திரணகம போன்ற எண்ணற்ற ஜனநாயகவாதிகளையும் இயக்கங்களையும் அழித்தவர்கள்தான் புலிகள். இந்திய பாசிச ராஜீவ் கும்பலின் துணையுடன் ஈழத்தை ஆதிக்கம் செய்வதற்காக சொந்த மக்களையே கொன்றவர்கள். எனவே புலிகளின் இம்மாதிரியான கொலைகள் அரசியல் கிரிமினல்கள், கடைந்தெடுத்த இன துரோகிகளோடு முடிந்துவிடும் என்ற பிரமை நமக்கு இல்லை.

★ தேச விரோதிகளாகவும், மக்கள் விரோதிகளாகவும் சீரழிந்த துரோகிகள் சாவில் பசப்புகளுக்கு இடமில்லை!

★ பிணத்தை காட்டி அரசியல் பிழைப்பு நடத்தும் ஓட்டுப் பொறுக்கிகளை தோலுரிப்போம்!

★ ஈழமக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்க, பாசிச புலிகளின் தலைமையை அகற்ற, ஜனநாயக சக்திகளுக்குத் தோள் கொடுப்போம்!



படிப்பகம்

www.padippakam.com

# ரெளடித்தனத்தில் போலிகள் வெற்றி

வங்கத்தை ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகள் ஒரு 'வன்முறைப் புரட்சி'யைச் சாதித்து விட்டார்கள். அண்மையில் நடந்த கல்கத்தா நகராட்சித் தேர்தலில் தில்லுமுல்லு, மோசடி, வன்முறையில் இறங்கி பிற்போக்கு முதலாளித்துவக் கட்சிகளை முறியடித்து வெற்றியை ஈட்டியுள்ளார்கள்.

141 தொகுதிகளைக் கொண்ட கல்கத்தா நகராட்சிக்கான தேர்தல் கடந்த ஜூன் 17ந் தேதியன்று நடந்தது. மேஹம் தொகுதி பாணியில் கூட்டணிக் கட்சிகளுடன் சேர்த்து மோசடி வன்முறையில் இறங்கிய போலிக் கம்யூனிஸ்டுகள், கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து 99 இடங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளனர்.

'மார்க்சிஸ்டு' குண்டர்கள், தேர்தல் நாளன்று ரிவால்வர், குழாய் துப்பாக்கி, இரும்புத்தடி, நாட்டு வெடி குண்டுகளுடன் பகிரங்கமாக வீதிகளில் வலம் வந்து பீதியூட்டினர். வாக்குச் சாவடிகளை முற்றுகையிட்டு வாக்காளர்களை விரட்டிவிட்டு கள்ள ஒட்டுப் போட்டனர். போலீசார் கைகட்டி நின்று வேடிக்கை பார்த்ததைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை. எதிர்க்கட்சியினரான காங்கிரசின் தேர்தல் ஏஜெண்டுகளை வாக்குச் சாவடிக்குள் அடைத்து வைத்து 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் தாக்குவதாக செய்தி வந்தது. உடனே பத்திரிக்கை நிருபர்கள் விரைந்தோடி வந்து புகைப்படம் எடுத்ததும் அவர்களையும் இக்குண்டர்கள் வெறியோடு தாக்கினர்.

மத்திய கல்கத்தாவின் போபஜார், முன்சிபாரா பகுதிகளிலும் ஆமெர்ஸ்ட் தெருவிலும் காங்கிரசு — 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் நாட்டு வெடிகுண்டுகளுடன் மோதிக் கொண்டனர். மதன்தத்தா தெருவில் இக்குண்டர்கள் நவீன ஆயுதங்களுடன் வன்முறையில் இறங்கி அப்பகுதியையே பய பீதிக்குள்ளாக்கினர். குறிப்பாக, எங்கெல்லாம் வெற்றி பெறும் வாய்ப்பு இழுபறியில் உள்ளதோ அங்கெல்லாம் வன்முறை தலைவிரித்தாடியது.

இருப்பினும், தில்லுமுல்லு - மோசடி - வன்முறை ஏதுமின்றி அமைதியான முறையில் தேர்தல் நடந்தது என்று 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு கூசாமல் புளுகினார். போலீசார் முன்னிலையில் வாக்குச்சாவடி அருகே ஆயுதங்களுடன் குண்டர்கள் திரிவதை கல்கத்தாவிலிருந்து வெளிவரும் நான்கு நாளேடுகள் படம் பிடித்துக் காட்டின. நகர போலீசு கமிஷனரே இத்தேர்தலின் போது நடந்த வன்முறைச் சம்பவங்களைப் பற்றி நீண்ட பட்டியலை வெளியிட்டு ஜோதிபாசுவின் அண்டப் புளுகுக்கு ஆப்பறைந்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் சிவப்பு விளக்குப் பகுதியிலுள்ள விபச்சாரிகள் ஓட்டைக் கைப்பற்றுவதற்காக காங்கிரசு - மார்க்சிஸ்டு குண்டர்கள் பெரும் யுத்தத்திலேயே இறங்கினர். முன்சிபாரா பகுதி கல்கத்தாவின் சிவப்பு விளக்கு மையமாகும். காங்கிரசுக் கட்சியின் பிடியிலிருந்த இப்பகுதியிலிருந்து சில விபச்சாரத் தரகர்கள், ரௌடிகளைத் தமது கட்சியின் தோழர்களாக்கிக் கொண்டு, மொத்த பகுதியையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர காங்கிரசு பேட்டை ரௌடிகளுடன் 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் கடந்த ஆண்டில் ஒருவார காலத்திற்கு வீதிகளில் 'வீரப்போர்' புரிந்தனர். இப்போது அதே நோக்கத்தோடு விபச்சாரிகளின் ஓட்டுக்களைக் கைப்பற்றுவதற்காக நாட்டு வெடி குண்டுகளுடன் 'வன்முறைப் புரட்சியில்' இறங்கினர்.

கொள்கை - லட்சியங்களைப் பேசி ஓட்டுப்பொறுக்குவதை மூட்டை கட்டி வைத்துவிட்டு கிரிமினல் - வன்முறை அரசியலில் இறங்கிவிட்ட போலிக் கம்யூனிஸ்டுகளின் யோக்கியதையை தி ஸ்டேட்ஸ் மேன், தி டெலிகிராப், ஆனந்த பஜார் பத்திரிகா, பர்டமான் ஆகிய நாளேடுகள் அம்பலப்படுத்திக் காட்டின. மார்க்சிஸ்டு குண்டர்கள் துப்பாக்கியுடன் வீதிகளில் திரிவதையும், சமூக விரோத சக்திகளுடன் வாக்குச்சாவடி அருகே ஆயுதங்களுடன் நிற்பதையும், போலீசார் வேடிக்கை பார்ப்பதையும் புகைப்படங்களுடன் வெளியிட்டன. ஆத்திரமடைந்த 'மார்க்சிஸ்டுகள்' தமது கட்சி நாளேடான ''ஜனசக்தி''யில் இதற்கு கண்டனம் தெரிவித்து, புகைப்படத்தில் காணப்படுபவர்கள் காங்கிரசு குண்டர்களே என்று அவர்களின் பெயர் மற்றும் முகவரிகளை வெளியிட்டனர்.

மூன்று நாட்களுக்குப் பிறகு, ஆனந்த பஜார் பத்திரிக்காவின் நிருபர், ஜனசக்தியில் குறிப்பிடப்பட்ட முகவரிகளுக்கு சென்று விசாரித்து ஒரு செய்திக் கட்டுரை எழுதினார். இம்முகவரியில் இருப்பவர்கள் புகைப்படத்தில் காணப்படும் குண்டர்கள் அல்ல; நீண்டகாலமாக இப்பகுதியில் குடியிருக்கும் காங்கிரசு ஆதரவாளர்கள்; ஆனால் சமூக விரோதிகள் அல்ல என்பதை பகுதி வாழ் மக்களிடம் பேட்டிகண்டு நிரூபித்துக் காட்டினார். ஏதோ ஒரு முகவரியை வெளியிட்டு தமக்கும் சமூக விரோதிகளுக்கும் சம்பந்தமில்லை என்று காட்ட முயன்ற போலிக் கம்யூனிஸ்டுகள் ஆப்பசைத்த குரங்காக மாட்டிக் கொண்டனர். அதன் பிறகு ''ஜனசக்தி'' இந்தப்போலி முகவரி விவகாரத்தைப் பற்றி வாயே திறக்கவில்லை.

**ஒரு கையிலே வெடி குண்டு மறு கையிலே துப்பாக்கி. 'ஜனநாயகம்' கொடி கட்டி பறக்கிறது!**



புகைப்படத்தில் காணப்படும் குண்டர்கள் எந்தக் கட்சியினர் என்ற வாதப் பிரதிவாதங்களில் காங்கிரசாரும் 'மார்க்சிஸ்டுகளும்' இப்போது இறங்கி பரஸ்பரம் சாடிக் கொள்கின்றனர். குண்டர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு இரு கட்சியினருமே போலீசுக்கு அறைகூவல் விடுக்கின்றனர். ஆனாலும் இன்றுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

காங்கிரசுக்கும் 'மார்க்சிஸ்டு'களுக்கும் மாற்றாக வங்கத்தில் காலூன்ற முயலும் பாரதீய ஜனதா கட்சியினர் ''வரலாறு காணாத வன்முறைத் தேர்தல்; மார்க்சிஸ்டுகளின் பாசிச ஆட்சியைக் கலைக்க வேண்டும்'' என்று கவர்னரிடம் மனு கொடுத்து தர்ணா போராட்டம் நடத்தினர். கிரிமினல் அரசியலின் புதிய கதாநாயகன் சௌதாலா, ''மேஹம் தொகுதியில் நடந்த வன்முறையைக் காட்டி என்னைப் பதவி விலகச் சொல்லி கூப்பாடு போட்டீர்களே! இப்போது நீங்கள் பதவி விலகத் தயாரா?'' என்று போலிகளைப் பார்த்து நக்கல் செய்கிறார்.

வங்கத்தில் பெருகிவரும் கிரிமினல் - பயங்கரவாத அரசியலின் வெளிப்பாடுதான் இத்தேர்தல் வன்முறைகள். இத்தேர்தலுக்கு சிலநாட்கள் முன்புதான், பண்டாலா எனுமிடத்தில் மூன்று சமூகநல பெண் ஊழியர்கள் சமூக விரோதிகளால் கொடூரமாகத் தாக்கப்பட்டு அதில் ஒருவர் மாண்டு போனார். இதற்கு முந்திய மாதம் நடந்த மாவட்ட முனிசிபாலிடி தேர்தலிலும் வன்முறை தலைவிரித்தாடியது.

ஊழல் செய்யாமல் ஆட்சி நடத்த முடியாது; வன்முறை - மோசடி இல்லாமல் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதை இத்தேர்தல் மூலம் போலிக் கம்யூனிஸ்ட்டுகளும் பொதுவிதியாக்கி விட்டனர். ஆளும் வர்க்க கட்சிகளுக்குப் போட்டியாக, முதலாளித்துவ கட்சிகளின் கொள்கைகளையே செயல்படுத்தி வரும் 'மார்க்சிஸ்டுகள்' அண்மைக்காலமாக முதலாளித்துவக் கட்சிகளைப் போலவே குண்டர்படை - கிரிமினல் அரசியலிலும் இறங்கிவிட்டார்கள். அவர்களின் போலி சோசலிசக் கொள்கைகள் உலகெங்கும் மரண அடி வாங்கி ஆட்சி அதிகாரத்திலிருந்தே தூக்கியெறிப்பட்டுவிட்டது. இனிமேலும் இக்கொள்கை - லட்சியங்களைப் பேசி ஓட்டுப் பொறுக்க முடியாத பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள அவர்கள், இனி வன்முறை — கிரிமினல் — பயங்கரவாத அரசியலில் இறங்குவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

● குமார்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

உத்திரப் பிரதேச மாநிலம், மீர்சாபூர் - வாரணாசி வட்டாரத்திலுள்ள தரைவிரிப்பு கம்பளம் தயாரிக்கும் பட்டறைகளில் 1.5 லட்சம் இளஞ்சிறுவர்கள் கொத்தடிமைகளாக உழல்கின்றனர். நாளொன்றுக்கு 20 மணி நேரம் வேலை செய்யும் இச்சிறுவர்களுக்கு சோறு போட்டு 2 ரூபாய் கூலியாகத் தரப்படுகிறது. பிஞ்சு விரல்களால் பின்னிப் பின்னி தயாரிக்கும் இக்கம்பளங்கள் ஜெர்மனிக்கு ஏற்றுமதியாவதன் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு 400 கோடி ரூபாய்க்கு மேல் அன்னியச் செலவாணி கிடைக்கிறது.

குழந்தை உழைப்பைப் பயன்படுத்தவில்லை என அரசு அங்கீகார முத்திரை பெற்று சில ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து காபி ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதைப் போல இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கம்பளத்திற்கும் அவ்வாறு செய்ய நிர்பந்திக்குமாறு ஜெர்மன் இறக்குமதியாளர்களிடம் கோரியுள்ளார், கொத்தடிமை மீட்பு இயக்கத் தலைவரான சுவாமி அக்னிவேஷ். சொரணைகெட்ட இந்திய ஆட்சியாளர்களைவிட ஏகாதிபத்தியக் கொள்ளையர்களிடம் முறையிடுவதே மேலானது என்று அவர் கருதுமளவுக்கு குழந்தை உழைப்புச் சுரண்டல் இங்கே கொடூரமாக உள்ளது.

பஞ்சாப் மாநில எல்லைப்புற பகுதிக்கு திக்விஜயம் செய்த உள்துறை மந்திரி மஃப்டி முகமது சையது, அட்டாரி எனும் கிராமத்தில் விவசாயிகளிடம் சிறிது நேரம் அளவளாவினார். பயங்கரவாதத்தை முறியடிக்க தமது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பற்றி பெருமையாகக் குறிப்பிட்ட அவர், அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டார். ''காங்கிரசு ஆட்சிக்கும் உங்கள் ஆட்சிக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லை; எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை'' என்று அக்கிராம மக்கள் பதிலுரைத்து மந்திரி மூஞ்சியில் கரி பூசினர். ஒவ்வொரு மந்திரியும் இதுபோல் மக்களிடம் நேரில் வந்து கருத்து கேட்டால் அவர்களின் யோக்கியதை புரிந்துவிடும்.

மத்தியப் பிரதேசம் — பஸ்தார் மாவட்டத்திலுள்ள ஜடிஸ்பூர் கிராமத்தில், பால்தேவ் ராஜா என்ற கொடிய நிலப் பிரபுவுக்குச் சொந்தமான 16 ஹெக்டேர் நிலத்தை பழங்குடி மக்கள் கைப்பற்றி உழுது பயிரிட்டு வருகின்றனர். இதுபோல இந்த வட்டாரத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களையும், நிலப்பிரபுக்கள் - கந்து வட்டிக்காரர்களின் நிலங்களையும் நக்சல்பாரி புரட்சியாளர்களின் உதவியுடன் கைப்பற்றி பழங்குடி மக்கள் பயிரிட்டு வருகின்றனர். பீதியடைந்த ஆட்சியாளர்கள் போலீசு ராணுவத்தைக் குவித்து அடக்கத் துடிக்கின்றனர்.

மணிப்பூர் மாநிலம் போதை மருந்து விபச்சார மையமாகச் சீரழிந்துவிட்டது. தலைநகரில் மட்டும் 40,000 போதை மருந்து அடிமைகளும், 210 எய்ட்ஸ் நோயாளிகளும் உள்ளனர். சுயநிர்ணய உரிமைப் போராளிகளை ஒடுக்கிவரும் எல்லைப் பாதுகாப்புப் படையினரே போதை மருந்து கடத்தலில் ஈடுபடுகின்றனர். தலைநகர் இம்பாலில் பள்ளி ஒன்றை நடத்திவரும் மாத்யூ என்ற பாதிரியார் போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு, சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிவரும் மக்கள் விடுதலைப் படை போராளிகளால் கடந்த மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார். எச்சரித்தும்கூட திருந்தாத அப்பாதிரிக்கு போராளிகள் இவ்வாறு தண்டனை அளித்தனர். நியாயமான தண்டனைதான்! புரட்சிகர இயக்கம் முன்கை எடுத்தாலன்றி சீரழிவுகள் ஒழியாது.

பஞ்சாப் காஷ்மீர் பிரச்சினைகளுக்கு அரசு பயங்கரவாதத்தையே தீர்வாகக் கொண்டுள்ள புதிய ஆட்சியாளர்கள் அடக்குமுறை எந்திரத்தை மேலும் விரிவுபடுத்தி வருகிறார்கள். பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளோடு இப்போது வட கிழக்கு மாநிலங்களில் பற்றிப் படரும் தேசிய சுயநிர்ணய உரிமைப் போரையும் சமாளிக்க போதிய போலீஸ் ராணுவப் படைகள் இல்லை என்று காரணம் காட்டி மேலும் 30 பட்டாலியன் மத்திய ரிசர்வ் போலீஸ் படையை விரிவாக்கவுள்ளனர். இதோடு மேலும் 100 குண்டு துளைக்காத ஜீப்புகள், நவீன கைத்துப்பாக்கிகள், எந்திரத் துப்பாக்கிகளைக் கொண்டு இப்படையை வலுப்படுத்தவும் தீர்மானித்துள்ளனர்.

கேரளாவின் 'மார்க்சிஸ்டு' சபாநாயகரான வர்கலா ராதாகிருஷ்ணன், தமது கட்சியின் அதிகாரபூர்வ நாளேடான ''தேசாபிமானி'' மீது சட்டமன்றத்தில் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பியுள்ளார். எதிர்க் கட்சியினரின் அராஜகத்துக்கு சபாநாயகர் துணை போகிறார் என்று இப்பத்திரிக்கை செய்தி வெளியிட்டதைக் கண்டித்து, இது சட்டமன்றத்தையே அவமானப்படுத்துவதாகும் என்று அவர் சாடியுள்ளார். சபையின் 159வது விதிப்படி உரிமைக் கமிட்டி விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளார். கட்சி ஏட்டையே கண்டிக்குமளவுக்கு சட்டமன்ற புனிதத்தைக் காப்பதில் முதலாளித்துவக் கட்சிகளை விட முன்னணியில் நிற்கிறார் 'மார்க்சிஸ்டு' சபாநாயகர். நல்ல முன்னேற்றம் தான்!

இவ்வாண்டு கோடைப் பருவத்தில் மட்டும் குஜராத்தில் 50,000 டன் பால் பவுடர் விற்பனையாகாமல் முடங்கிக் கிடக்கிறது. இதேபோல் டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பெரு நகரங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்ட பால் பொருட்கள் லட்சக்கணக்கில் தேங்கி கெட்டழுகிப் போய்விட்டன. கோடை காலத்திலேயே இந்த நிலைமை என்றால் இனிவரும் பால்பெருகும் மாதங்களில் என்ன செய்வது என்று புரியாமல் அதிகாரிகள் கையைப் பிசைகின்றனர். எனவே நட்டத்துக்கு பால்பவுடரை வெளிநாட்டுக்கு விற்று ரூ.50 கோடி மதிப்புக்கு பாமாயில் இறக்குமதி செய்ய அரசு முடிவு செய்துள்ளது. கடைசியில், நமது வரிப்பணத்தை விழுங்கி விரயமாக்கியதற்கு மேல் வெண்மைப் புரட்சித்திட்டம் வேறொன்றையும் சாதிக்கவில்லை.

கிராமப் புறங்களில் 43% சிறுவர்களும் 69% சிறுமிகளும் நகர்ப்புறங்களில் 17% சிறுவர்களும் 36% சிறுமிகளும் வறுமை காரணமாக பள்ளிக்குச் செல்ல முடிவதில்லை. படிக்கும் மாணவர்களில் ஐந்து பேருக்கு ஒருவர் பள்ளிப் படிப்பைக்கூட முடிக்காமல் பாதியிலேயே விலகி விடுகிறார். ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்களில் 8% பேருக்கு பள்ளிக்கூட வசதியோ, கரும்பலகை - பெஞ்சுகள் வசதியோ இல்லை என்று 1987-88ம் ஆண்டுக்கான 42வது சுற்று தேசிய சர்வே அறிக்கை அம்பலப்படுத்திக் காட்டுகிறது. புதிய கல்விக் கொள்கை மூலம் மாபெரும் புரட்சி நடந்துவிட்டதாக பம்மாத்து செய்த ராஜீவ் கும்பல் பட்ஜெட்டில் கல்விக்கென 4% தொகைகூட ஒதுக்கவில்லை. ராஜீவின் கொள்கையை எதிர்க்கும் தே.மு. அரசும் அதேபோல கல்விக்கு அற்பத் தொகையையே ஒதுக்கிவிட்டு, ராணுவச் செலவைப் பூதாகரமாக்கியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# நீதிமன்ற ஊழல்கள்

**"உயர்நீதி மன்ற படிகட்டும் லஞ்சம் கேட்பதைச் சொன்னோமானால், 'நிரூபிக்க முடியுமா?' என்று எதிர்க்கேள்வி போடுவார்கள். இப்படி மடக்கிக் கேள்வி போடுபவர்களின் மண்டையில் ஆப்பறைந்தது போல வந்திருக்கிறது பம்பாய் உயர்நீதிமன்ற ஊழல் விவகாரம்."**

இந்திய நீதித்துறை வரலாற்றில் முதன்முறையாக ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியின் மீது ஊழல் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நீதிமன்றமும் ஊழலும் உடன்பிறப்புகள் என்பது எழுதப்படிக்கத் தெரியாத ஒரு எளிய விவசாயிக்கும் கூடத் தெரிந்த உண்மைதான் என்றாலும் இதுவரை நடவாத ஏதோவொரு விபரீதம் இப்போதுதான் நடந்துவிட்டது போன்ற பாவனையோடும், செயற்கையான கவலையோடும் பத்திரிக்கைகள் இதை வெளியிடுகின்றன. அரசியல் சட்ட வல்லுனர்களும், ஓய்வு பெற்ற நீதிபதிகளும் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளுகிறார்கள்.

இறுக்கமாக மூடிவைக்கப்பட்ட முடை நாற்றம் வெடித்துத் திறந்து கொண்டது பற்றிக்கூட ஆளும்வர்க்க அறிஞர்கள் கவலைப்படவில்லை; அது 'அதிகாரபூர்வமாக' வெடித்துத் திறந்து கொண்டதை எண்ணித்தான் புழுங்குகிறார்கள். ஒரு நீதிபதி லஞ்சம் வாங்கிவிட்டார் என்று பத்திரிக்கைகள் குற்றம் சாட்டினால் பரவாயில்லை; வாதியோ, பிரதிவாதியோ, யாரோ ஒரு வழிப்போக்கனோ குற்றம் சாட்டினால் பரவாயில்லை. சக நீதிபதியே குற்றம் சாட்டிவிட்டார்.

பல கோடி ரூபாய் சொத்துக்களுக்காக அப்பனுக்கும் மகனுக்கும் பம்பாய் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த ஒரு சிவில் வழக்கை எஸ்.கே.தேசாய், கேனியா ஆகிய இரு நீதிபதிகள் விசாரித்து வந்தனர். வழக்கு இறுதிக் கட்டத்தை அடையும் தருணத்தில் தான் நீதிபதி கேனியா குண்டைத் தூக்கிப் போட்டார். கடந்த ஏப்ரல் 23ம் தேதியன்று விசாரணைக்காக கோர்ட் கூடிய போது "இந்த வழக்கில் தமக்கு சாதகமாகத் தீர்ப்பு சொல்லும்படி எனக்கு லஞ்சம் கொடுக்க சிலர் முயன்றனர். நான் மசியாததால் என்னை மிரட்டுகின்றனர். எனவே நான் இந்த விசாரணையிலிருந்து விலகிக் கொள்கிறேன்" என்று பகிரங்கமாக அறிவித்தார் நீதிபதி கேனியா. தெல்மா மெனசிஸ் என்ற பெண் தன்னை மிரட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

"தான் இந்த வழக்கு விசாரணையிலிருந்து விலகிக் கொள்ள விரும்புவதாக ஏப்ரல் 18ம் தேதியன்று கேனியா என்னிடம் கூறினார். விசாரணை முடிந்து தீர்ப்பு சொல்ல வேண்டிய தருணத்தில் இவர் இவ்வாறு கூறியது எனக்கு குழப்பமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. ஆனால் லஞ்சம், மிரட்டல் ஆகிய விவகாரங்கள் பற்றியெல்லாம் அன்று அவர் என்னிடம் எதுவுமே கூறவில்லை" என்று தன்னுடைய தரப்பை நியாயப்படுத்தினார் தேசாய்.

அது மட்டுமல்ல: தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்நோக்கமும் இருப்பதாகவும் கூறுகிறார் நீதிபதி தேசாய். ஏற்கனவே தான் பொறுப்பு தலைமை நீதிபதியாக (Acting Chief Justice) பணியாற்றிய போது அரவிந்த ஷா என்ற இன்னொரு நீதிபதியின் மீது விசாரணையொன்றை நடத்தி வந்ததாகவும், அவ்விசாரணையிலிருந்து அரவிந்த் ஷாவைக் காப்பாற்றுமாறு நீதிபதி கேனியா கோரியதை தான் ஏற்காததால் அவர் தன்மீது ஆத்திரமுற்று இவ்வாறு பழிவாங்கியிருக்கக்கூடும்-எல்கிறார் தேசாய். இது குறித்து நீதி விசார்ணை நடத்த வேண்டுமென்றும் கோருகிறார்.

விசாரணையிலிருந்து விலகுவதாக பகிரங்கமாக அறிவித்ததுடன் நிற்காமல் நீதி கோரி உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார் நீதிபதி கேனியா. மகாராஷ்டிர மாநில அட்வகேட் ஜெனரல், கவர்னருக்கு எழுதிய கடிதத்தில் நீதிபதி தேசாய்க்கும் தெல்மா மெனசிஸ் என்ற பயண ஏஜெண்டுக்கும் உள்ள தொடர்பை உறுதி செய்தார். கேனியாவின் குற்றச்சாட்டைப் பற்றி ஏதும் குறிப்பிடாமல் நீதிபதி தேசாயை பம்பாய் உயர் நீதி மன்றத்திலிருந்து மாற்றக் கோரினார். பம்பாய் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும் மாற்றலுக்கான தனது சிபாரிசை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு அனுப்பினார்.

டெல்லி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் ஒப்புதலுடன் நீதிபதி தேசாய்க்கு மாற்றல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஊழல் குற்றம் சாற்றப்பட்ட ஒரு நீதிபதி தங்களது உயர் நீதி மன்றத்திற்கு மாற்றப்படுவதையும், தங்கள் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியைக் கலந்தாலோசிக்காமலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் கேரள உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் கண்டித்தது. ஆனால் அதற்கு முன்னரே மாற்றல் உத்தரவை நிராகரித்து தனது பதவியை ராஜினாமா செய்தார் நீதிபதி தேசாய். விவகாரம் இத்துடன் முடியவில்லை. அடுத்த பூதம் உடனே கிளம்பியது

ஏப்ரல் 23ம் தேதி நீதிமன்ற அறையில் நீதிபதி கேனியா தனது அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னரே - டிசம்பர் மாதத்திலேயே - வேறொரு சம்பவம் நடந்திருக்கிறது. நீதிமன்ற அலுவல்கள் முடிந்து அனைவரும் சென்ற பின்னர் கேனியாவின் அறைக்குள் இருந்த அவரது தனிப்பட்ட கழிவறையில் 1.5 லட்சம் ரூபாய் நோட்டுக்கற்றைகள் நிரம்பிய பெட்டியொன்றைக் கண்டெடுத்த நீதிமன்ற காவல்காரர் அதை நீதிமன்ற பதிவாளரிடம் ஒப்படைத்திருக்கிறார். அந்தப் பெட்டி மறுநாள் காலை கேனியாவின் உதவியாளரிடம் ஒப்படைக்கப்பட்டி

**தெல்மா மெனசிஸ்: இவளுக்காக நீதியை வளைத்தார் தேசாய்**




படிப்பகம்

www.padippakam.com

ருக்கிறது. கேனியாவின் உதவியாளர் முந்தின நாள் மாலை அந்தப் பெட்டியைத் தேடி பைத்தியம் பிடித்தது போல அலைந்தார் என்பதையும் அந்தக் காவல்காரர் உறுதி செய்கிறார். சாதகமான தீர்ப்புக்களுக்காக உதவியாளர் மூலம் நீதிபதி கேனியாவிற்கு இத்தகைய 'பெட்டிகள்' அளிக்கப்படுவது வாடிக்கைதான் என்றும் பல வழக்கறிஞர்கள் கூறுகின்றனர்.

இச்சம்பவம் குறித்து ஏன் விசாரணை நடத்தப்படவில்லை என்று தேசாய் கேள்வி எழுப்பியவுடனே கேனியாவுக்கும் மாற்றல் உத்தரவு வந்துவிட்டது.

அடுத்தது, அட்வகேட் ஜெனரல் பாப்டே. உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அட்வகேட் ஜெனரலின் அறை விபச்சார விடுதியைப் போலப் பயன்படுத்தப்படுகிறது என்றும் தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி பம்பாய் நகரில் 47 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு வீட்டை அவர் 9 லட்சம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார் என்றும் குற்றம்சாட்டி அவரை உடனே ராஜினாமா செய்யக் கோரினார், பம்பாய் வழக்கறிஞர் கஸ்நூரே. ஆனால் இவ்விஷயத்தில் நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

மேலும் இரண்டு உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஊழல் பேர்வழிகள் என்றும் அவர்களும் உடனே மாற்றப்பட வேண்டுமென்றும் பம்பாய் வழக்கறிஞர்களில் ஒரு பிரிவினர் கோருகின்றனர்.

நீதிபதி தேசாய் மாற்றல் விவகாரத்தில் பம்பாய் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் இருபிரிவுகளாகப் பிளவுபட்டு நிற்கின்றனர். ''சட்டமே தெரியாமல் அபத்தமாக வாதாடும் வழக்கறிஞர்களை கோர்ட்டிலேயே அவர் மட்டம் தட்டிவிடுவார். அப்படி மட்டம் தட்டப்பட்டவர்கள்தான் இன்று அவருக்கெதிராகத் திணறிக் கொண்டிருக்கின்றனர்'' என்றும், தொழிலாளர்க்கு ஆதரவாகவே அவரது தீர்ப்புகள் எல்லாம் அமைந்திருப்பதால் முதலாளிகளின் கையாட்களான வழக்கறிஞர்கள்தான் தேசாயைக் குற்றம் சாட்டுகின்றனர்'' என்றும், ''ஜூலை மாதம் பம்பாய் உயர்நீதி மன்ற ஊழல் குறித்து அவர் விசாரிப்பதாக இருந்தது. அதற்கு முன்பே திட்டம்போட்டு அவரை ஒழித்துவிட்டார்கள்'' என்றும் தேசாய்க்கு ஆதரவான வழக்கறிஞர்கள் வாதாடுகின்றனர்.

எந்த ஊழல் விவகாரத்திலும் குற்றச்சாட்டுகள் எதிர் குற்றச்சாட்டுகள் என்று வாரியிறைக்கப்படும் சகதியில் மக்களைத் திசைதிருப்பிவிடுவது ஒரு கலை என்பதால் நாம் நமது பார்வையை பிரச்சினையின் மையத்திற்குத் திருப்புவோம்.

ஒ ஒ ஒ

இந்திய 'ஜனநாயகத்தின்' நான்கு பெரும் தூண்களான மக்களவை, அரசு (அதிகாரவர்க்கம்), பத்திரிகைகள், நீதித்துறை ஆகியவற்றில் முதல் மூன்று நிறுவனங்களைப் பற்றிய மாயைகள் தவிர்க்க இயலாமல் தகர்ந்து விழுந்துவரும் நிலையில் தங்களது நம்பிக்கை நட்சத்திரமாக ஆளும் வர்க்க அறிஞர்கள் கருதுவது நீதித்துறையைத் தான். போலீசு அராஜகத்தாலும், மக்கள் பிரதிநிதிகளின் அதிகார துஷ்பிரயோகங்களாலும் மக்கள் வெறுப்படைந்து இந்த அரசியலமைப்பின் மீது நம்பிக்கையிழக்கும் போதெல்லாம் ''நமது அரசியல் சட்டம் புனிதமானது, உன்னதமானது; அதன் காவலனாக நீதித்துறை இருக்கிறது; அங்கே சென்று முறையிடுங்கள்'' என்று அவர்கள் மக்களுக்கு வழிகாட்டுகிறார்கள்.

'அடிப்படை உரிமை' 'அரசியல் சட்டம்' போன்ற வார்த்தைகளெல்லாம் சாதாரண மக்களுக்கு எட்டாத ஆடம்பரமான வார்த்தைகள். அந்த 'உரிமைகளின்' ஆலயமான உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் ஆகிய மன்றங்களுக்கும் அவர்களுக்கும் காததூரம். அவர்களுக்குத் தெரிந்த கோர்ட்டு மாசிருட்டு கோர்ட்டுதான்! (மாஜிஸ்டிரேட் கோர்ட்).

ஏனென்றால் அன்றாடம் பொய்க் குற்றம் சாட்டப்பட்டு போலீசுக்காரனால் இழுத்துச் செல்லப்பட்டு அவர்கள் அங்கேதான் நிறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டவுடன் மாசிருட்டு கேட்கும் கேள்விக்கு - அது என்ன என்று புரிந்தாலும் புரியாவிட்டாலும் மறுத்துப் பேசாமல் ''ஆமாங்கய்யா... தப்பு தாங்கய்யா'' என்று மட்டும்தான் சொல்ல வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்; குனிந்த தலை நிமிராமல் மாசிருட்டு விதிக்கும் அபாரதத்தை கூர்ந்து கேட்டு எதையாவது அடகு வைத்து பணத்தைக் கட்டவேண்டும் என்பது தெரியும்; இல்லையென்றால் கோர்ட் வாசலிலேயே வாடகைக்கு கிடைக்கும் ஜாமீன்காரர்களைப் பிடித்து ஜாமீன் வாங்க வேண்டும் என்பது தெரியும். மொத்தத்தில் காக்கிச் சட்டையுடன் சேர்ந்து பணம் பிடுங்கும் கூட்டுக் களவாணிகள் என்றுதான் கறுப்பு அங்கிக்காரர்களைப் பற்றி மக்களுக்குத் தெரியும். வரப்புத் தகராறுக்கும், வாய்க்கால் தகராறுக்கும் 'நீதி' கேட்கப் போனவர்களைக் கேட்டால் நீதியின் விலைபற்றி இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்வார்கள்.

''இதெல்லாம் தெரிந்த கதைதான்; மாஜிஸ்டிரேட் கோர்ட்டும் உயர்நீதி மன்றமும் ஒன்றாகிவிடுமா?'' என்று வக்கணை பேசுபவர்களிடம் உயர்நீதிமன்ற படிக்கட்டும் லஞ்சம் கேட்பதைச் சொன்னோமானால், குமாஸ்தா லஞ்சம் வாங்கக்கூடும்; நீதிபதிகள் நேர்மையானவர்கள் என்று தாவுவார்கள். 'அதுவும் அப்படித்தான்' என்றால் 'நிரூபிக்க முடியுமா' என்று எதிர்க்கேள்வி போடுவார்கள்.

இப்படி மடக்கிக் கேள்வி போடுபவர்களின் மண்டையில் ஆப்பறைந்தது போல வந்திருக்கிறது பம்பாய் உயர்நீதிமன்ற ஊழல் விவகாரம்.

நீதிபதி கேனியாவுக்கு லஞ்சம் தருவதாக ஆசைகாட்டிய, மிரட்டிய நபர் மீது அவர் ஏன் போலீசில் புகார் கொடுக்கவில்லை? அதற்கு உடந்தையாயிருந்ததாக அவர் குற்றம் சாட்டும் நீதிபதி தேசாய் மீது ஏன் கிரிமினல் வழக்கு தொடரப்படவில்லை? கேனியாவின் அறையில் கண்டெடுக்கப்பட்ட 1.5 லட்ச ரூபாய் விவகாரத்தில் லஞ்சம் கொடுத்தது யார்? அது ஏன் கேனியாவிடம் ஒப்படைக்கப்பட்டது? கொடுத்தவர் மீதும் வாங்கியவர் மீதும் ஏன் கிரிமி




## நீதியின் விலை என்ன?

ஊருக்கு நீதி சொல்லும் நீதிபதிகளின் உண்மை சொரூபத்திற்கு இதோ மேலும் சில சான்றுகள்!

● விலைமாதர்கள் சிலருடைய வழக்கை எடுத்து வாதாடிக் கொண்டிருந்த காதரின் ஜோசப் என்ற பெண் வழக்கறிஞரிடம் தனக்கு ஒரு பெண்ணை அனுப்பி வைக்க முடியுமா என்று கேட்டாராம் ஒரு மாஜிஸ்டிரேட். ஆத்திரமடைந்த அந்த வழக்கறிஞர் மாஜிஸ்டிரேட் மீது உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். மாஜிஸ்டிரேட் தண்டிக்கப்படவில்லை. உயர்நீதிமன்றம் சமரசம் பேசி அனுப்பி வைத்தது. இது நடைபெற்றது பம்பாயில்.

● கேரள உயர்நீதிமன்ற நீதிபதி பத்ம நாபனின் மகன், சுஜாதா என்கிற தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட்டின் பெண்ணை திருமணம் செய்ய விரும்பினார். பெண்ணுக்கு விருப்பமில்லை. பையனின் தந்தைக்கு ரோஷம் வந்துவிட்டது. மாஜிஸ்டிரேட் வழங்கிய தீர்ப்புகள் மேல்முறையீட்டில் உயர்நீதிமன்றத்திற்கு வரும்போது அதற்கு நேரெதிராகத் தீர்ப்பு சொன்னார். அது மட்டுமல்ல; மாஜிஸ்டிரேட் சுஜாதாவின் மீது கண்டனங்களையும் (STRICTURES) பதிவு செய்தார். ''தன் மகனுக்கு என் பெண்ணைக் கொடுக்கவில்லை என்பதற்காக என்னை இப்படிப் பழிவாங்குகிறார்'' என்று பத்மநாபன் மீது உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார், மாஜிஸ்டிரேட் சுஜாதா.

● பணிக்காலத்தை நீட்டிப்பதற்காக தனது பிறப்பு சான்றிதழிலும், பள்ளிச் சான்றிதழ்களிலும் பிறந்த தேதியை திருத்தி போர்ஜரி வேலை செய்தார் கேரள உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி.சி.ராகவன். இது கண்டுபிடிக்கப்பட்டும் அவர் தண்டிக்கப்படவில்லை. இன்னொரு உயர்நீதிமன்ற நீதிபதியான பி.பாஸ்கரன் என்பவர் இதே வேலையைச் செய்தார். அவருக்கும் தண்டனை கிடையாது. ஹைதராபாத்துக்கு மாற்றப்பட்டார். அவ்வளவுதான்!

படிப்பகம்

www.padippakam.com

னல் வழக்கு தொடரப்படவில்லை? அட்வகேட் ஜெனரலின் அதிகார துஷ்பிரயோகம் குறித்து பகிரங்கமாக ஒரு வழக்கறிஞர் குற்றம் சாட்டியுள்ளாரே. அதற்கு என்ன பதில்? என்ன நடவடிக்கை?

எல்லாவற்றிற்கும் அரசு தரப்பிலிருந்து வரும் ஒரே பதில் மவுனம்தான். இரண்டு நீதிபதிகளுக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ள மாற்றல் உத்தரவும் கூட ''தண்டனை அடிப்படையிலானது அல்ல'' என்று விளக்கம் கொடுத்திருக்கிறார் மத்திய சட்ட அமைச்சர்.

மேற்கூறிய குற்றங்களுடன் ஏதோவொரு விதத்தில் சம்பந்தப்பட்டிருந்தால் கூட ஒரு சாதாரண குடிமகனைக் கைது செய்யவும், வழக்கு தொடரவும் போலீசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் இதே குற்றங்களை உயர்நீதிமன்ற நீதிபதிகள் செய்தால் அவர்களைத் தண்டிக்க - ஏன் விசாரிக்கக் கூட இயலாது. இந்த நீதியின் காவலர்கள் சட்டப்படி தவறுகளுக்கு அப்பாற்பட்டவர்கள். ஒரு வேளை இவர்களைத் தண்டித்தே தீரவேண்டும் என்றால் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தான் அதைச் செய்யமுடியும். இத்தனை ஆண்டுகளில் இவ்வாறு எந்த ஒரு நீதிபதியும் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டது கிடையாது.

நீதிபதிகளின் மாற்றல் பற்றி பரிசீலித்த சட்டக் கமிஷன், சந்தேகத்திற்குரிய நபர்களை நடத்துவது போல ஒரு நீதிபதியை இடமாற்றம் செய்யக்கூடாது என்று கூறுகிறது. ஒரு குறிப்பிட்ட ஊரில் அல்லது மாநிலத்தில் நீண்ட காலம் தொடர்ந்து பணியாற்றுவதன் மூலம் ஏற்படும் செல்வாக்கு, பழக்கம் ஆகியவை லஞ்ச ஊழலுக்கும், அதிகார முறைகேடுகளுக்கும் ஒரு அரசு ஊழியரைத் தூண்டும் என்பதால் அவர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் இடமாற்றம் (Rotational Transfer) கொடுக்கும் அரசின் கொள்கை நீதிபதிகளுக்குச் செல்லாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் மற்றும் அதிகார வர்க்கம் ஆகியவற்றின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டதாக - சுதந்திரமானதாக - நீதித் துறை இயங்க வேண்டுமென்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு என்று அரசியல் சட்ட வல்லுநர்கள் விளக்கம் தருகிறார்கள்.

ஆளும் கட்சியும், அதிகார வர்க்கமும் நீதித்துறை நியமனங்களிலும், மாற்றல்களிலும் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதும், நீதித்துறைக்கும் இவர்களுக்கும் உள்ள கள்ள உறவும், அந்த உறவிலிருந்து பிறந்த தலையாட்டி நீதிபதிகளின் வரலாறும் தனிக்கதை. இவையெல்லாம் தவறு என்றும் அரசியல், அதிகாரவர்க்கத் தலையீடு இல்லாத முற்றும் முழுதான சுதந்திரம் வாய்ந்த நீதித்துறை வேண்டுமென்பதுதான் தார்குண்டே, ஏ.ஜி.நூரானி போன்ற நீதித்துறைப் புனிதவாதிகளின் கோரிக்கை.

ஆளும் கட்சியும், அதிகார வர்க்கமும் தலையிடும்போது, நீக்குப் போக்காக நடந்துகொள்ளும் நீதிபதிகள், பத்திரிக்கைகள் மற்றும் மக்கள் விசயத்தில் மட்டும் கறாராக நடந்து கொள்கின்றனர். ஒரு நீதிமன்றத் தீர்ப்பை சட்டப்படி தவறு என்று விமரிசிக்கலாமே தவிர நீதிபதி 'பெட்டியை' வாங்கிக் கொண்டு தீர்ப்பெழுதியதைக் கண்ணால் பார்த்திருந்தால்கூட அதை எழுதவோ பேசவோ யாருக்கும் உரிமை கிடையாது. அவ்வாறு பேசுவது கோர்ட்டை அவமதிக்கும் குற்றமாகும். அவ்வளவு ஏன்? 'வெளிப்படையான' விசாரணை நடைபெறுகின்ற நீதிமன்ற அறையில் நடக்கும் விவாதங்களை நீதிபதியின் அனுமதியின்றி பதிவு செய்வதோ எழுதுவதோ கூடாது.

இத்தனை மதிற்சுவர்களாலும், அகழிகளாலும் பாதுகாக்கப்படும் நீதிபதிகள் நாணயமாக நடந்து கொள்வதற்கு என்ன உத்தரவாதம்? நீதிபதிகள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்? அரசியல் செல்வாக்கு, லஞ்சம், சிபாரிசுகள் மூலம் ஏராளமான நியமனங்கள் நடைபெறுகின்றனவே, அவற்றின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதில்லையே - ஏன்? லஞ்சம் வாங்கிக் கொண்டு நிரபராதியைப் பிடித்து வழக்கு போடும் போலீசுக்காரனைப் போலவே நிரபாரதிகளுக்கு தண்டனையும், குற்றவாளிகளுக்கு விடுதலையும் வழங்கும் 'நீதி'பதிகளுக்கு என்ன தண்டனை? எதுவும் கிடையாது.

காவல் துறையினர், அரசியல்வாதிகள், மந்திரிகள், காண்டிராக்டர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர்தான் ஊழலின் உறைவிடமாக இருக்கிறார்களென்றும் அவர்களை விசாரித்துத் தண்டிக்கும் அதிகாரம் படைத்த நீதித்துறை புனிதமானது என்றும் பரப்பப்படும் மாயையை, அவர்களே உடைத்து வருகிறார்கள். தாங்களும் அவர்களுடைய கூட்டாளிகள்தான் என்பதை நிரூபித்து வருகிறார்கள்.

இந்திராவுக்குத் தாளம் தட்டி பதவி உயர்வு பெற்ற நீதிபதிகளும், ராஜீவின் விசுவாசிகளான உச்சநீதிமன்ற நீதிபதிகள் தாக்கரும் நடராசனும், கணக்குகளில் தில்லுமுல்லு செய்து நீதிபதிக்குரிய விசேட சலுகைகள் என்ற பெயரில் லட்சக்கணக்கில் மக்களின் வரிப்பணத்தைக் கையாடல் செய்த உச்சநீதிமன்ற நீதிபதி ராமசாமியும், இன்னும் எண்ணிலடங்காத உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் கடைசியாக தற்போது பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதிகளும் இந்திய நீதித்துறையின் யோக்கியதைக்கு சாட்சியங்கள்!

■ அஜித்.

## திருடனும் நீதிபதியாகலாம்

தற்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ராமசாமி ஏற்கனவே பஞ்சாப் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தபோது செய்த ஊழல்கள் அதிர்ச்சி தரத்தக்கவை. உயர்நீதிமன்ற நீதிபதிகள் தங்களது சொந்த உபயோகத்திற்கென நாற்காலிகள், சோபா போன்றவை வாங்கிக் கொள்வதற்கென நிதி ஒதுக்குகிறது அரசு. அதிகபட்சம் 38,500 ரூபாய் இதற்காக செலவு செய்ய சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் இதைப்போல 35 மடங்கு அதிகமாக (ரூ.13,41,544) செலவு செய்திருக்கிறார் ராமசாமி.

சண்டிகார் நிர்வாகத்தின் தணிக்கை அறிக்கை இந்த ஊழலை அம்பலப்படுத்தியுள்ளது. அதிகமாகச் செலவு செய்தது மட்டுமல்ல, அதை நியாயப்படுத்தவும், கணக்கை சரிக்கட்டவும் 'நீதி'பதி செய்த தில்லுமுல்லுகளும் வெளியாகிவிட்டன.

எடுத்துக்காட்டுக்கு ஒரு சில:

பிப்ரவரி'89 இல் மட்டும் 3 லட்சம் ரூபாய்க்கு 'தட்டுமுட்டு சாமான்கள்' வாங்கியிருக்கிறார் ராமசாமி. ஒரு நேரத்தில் ரூ.6000த்துக்கு மேற்பட்டு செலவு செய்யக்கூடாது என்று சட்டம் இருப்பதால் ரூ.6000 மதிப்புள்ள 50 பில்களை வெவ்வேறு தேதிகளில் போட்டு வாங்கியிருக்கிறார்.

பல லட்ச ரூபாய் விலைமதிப்புள்ள தரைவிரிப்பு ஒன்றை வாங்கிவிட்டு, அதன் மதிப்பை 15 ஆகப்பிரித்து, 15 தனித்தனி பில்கள் கொடுத்திருக்கிறார்.

போர்வை, துண்டு, சமையல் பாத்திரங்கள், ஹாங்கர்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் எல்லாம் வாங்கி விட்டு அதற்கான செலவை மேசை நாற்காலி வாங்குவதற்கான நிதியிலிருந்து எடுத்திருக்கிறார். இவையல்லாமல் நீதிபதியின் வீட்டில் இருக்கும் பல ஆடம்பரப் பொருட்கள் வாங்கியதற்கான பில் எதுவுமே இல்லை.



அரசு சொத்துக்களை திருடிய நீதிபதி ராமசாமி

அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போன்று வீட்டிலிருந்த அவருடைய தொலைபேசிக்கு மட்டும் 12,95,390 ரூபாய் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, சென்னையில் அவரது குடும்பத்தினர் தொலைபேசிக்காகச் செலவு செய்த 76,150 ரூபாயையும் அலுவலகக் கணக்கில் காட்டியிருக்கிறார்.

இந்த ஊழல்களெல்லாம் அம்பலமான பின்னும் இன்னமும் ராமசாமி உச்ச நீதிமன்ற நீதிபதியாக நீடிக்கிறார். சட்டத்தை மீறும் குற்றவாளிகளுக்கு சட்டப்படி தண்டனை வழங்கி தீர்ப்பு சொல்லிக் கொண்டிருக்கிறார் இந்த உத்தமர்!



படிப்பகம்

# போலீசு பயங்கரத்துக்குப் பணிய மறுத்த உழைப்பாளிச் சிறுவன்



அடங்கி நடப்பது அடிமைகளின் கடமை ஆதிக்கம் செலுத்துவது எங்கள் உரிமை என்று கொக்கரிக்கின்றன அதிகார வர்க்கமும் ஆளும் வர்க்கங்களும். உரிமை என்ற சொல்லை தங்களைத் தவிர யாரும் பயன்படுத்துவதை ஆதிக்க வர்க்கங்கள் என்றைக்குமே சகித்துக் கொண்டதில்லை.

அவன் பெயர் குண்டு; 10 வயதான காஷ்மீரி சிறுவன்: ஜம்மு பகுதியில் ஒரு குக்கிராமத்தில் கஞ்சிக்கும் வழியற்ற ஏழைக் குடும்பத்தில் பிறந்த அதிருஷ்டக்கட்டை. தன்னுடைய வயிற்றைக் கழுவிக் கொள்ளவும், தனது குடும்பத்திற்குச் சோறு போடவும் பிஞ்சுப் பருவத்திலேயே உழைக்கத் தொடங்கும் லட்சக்கணக்கான சிறுவர்களில் ஒருவன் என்ற முறையில் அவன் ஒரு இந்தியன்.


''நாள் **முழுவதும் வேலை**; சம்பளம் - மாதம் 50 ரூபா**யும் எஜமான்** வீட்டில் எஞ்சிய சோறும், **என்று பேசி** ஓய்வு பெற்ற போலீஸ் டி.எஸ்.பி ஒருவரது வீட்டில் குண்டுவை வேலைக்கு சேர்த்துவிட்டார் அவன் தாய்மாமன். சம்பளம், மிகவும் குறைவுதான் என்றாலும் 18 வயதானவுடனே போலீசில் வேலைக்கு சேர்த்து விடுவதாக ஆசை காட்டினார் டி.எஸ்.பி.

பிஞ்சு வயதின் ஆசைகளையெல்லாம் நெஞ்சில் புதைத்துவிட்டு குண்டு வேலை செய்தான். காலம் நேரம் கணக்கில்லாமல் நாள் முழுவதும் எலும்பை முறிக்கும் வேலை. 5 மாதங்களுக்கு மேல் அந்த நரக வேதனையை அவனால் அனுபவிக்க இயலவில்லை. வேலையிலிருந்து நின்று கொள்கிறேன் என்று சொன்னால் டி.எஸ்.பி. என்ன செய்வாரோ என்று பயம் வேறு. ஊரில் ஒரு திருமணத்திற்கு செல்வதாகச் சொல்லி 250 ரூபாய் சம்பள பாக்கியில் 200 ரூபாயை மட்டும் வாங்கிக் கொண்டு ஊர் திரும்பினான் குண்டு.

காத்திருந்து பார்த்து அவன் வரமாட்டான் என்று தெரிந்தவுடனே அவனை வரவழைக்க போலீசு மூளை வேலை செய்தது. 35,000 ரூபாய் பணத்தையும் 110 கிராம் தங்க நகைகளையும் திருடிக் கொண்டு ஓடி விட்டதாக குண்டு மீது புகார் கொடுத்தார் டி.எஸ்.பி.

## சிகரெட்டுத் தீயால்

www.padippakam.com



குண்டுவைக் கைது செய்து அவன் கிராமத்திலிருந்து ஜம்மு நகர காவல் நிலையத்துக்கு கொண்டு வந்தது போலீசு. அடுத்த பத்து நாட்கள் அந்தச் சிறுவனை பட்டினி போட்டது. குல்பீர் சிங் என்ற ஏட்டு எஜமான விசுவாசம் மிக்க நாய் - அவனைக் குதறினான். எரியும் சிகரெட்டை அச்சிறுவனின் முழங்காலில் வைத்துத் திருகினான். பத்து நாட்கள் பட்டினி போட்டுக் கொன்ற போதும், தீக்காயங்களால் முழங்காலில் சீழ் பிடித்த போதும், செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ள மறுத்தான் அந்தச் சுயமரியாதை மிக்க உழைப்பாளி சிறுவன்.

காக்கி உடைக் கொலைகாரர்கள் அவனைக் கொன்று கொல்லைப் புறத்திலேயே புதைத்திருப்பார்கள் - தற்செயலாக ஒரு ஜனதாதளக் கட்சிக்காரர் தலையிட்டதால் குண்டு உயிர் பிழைத்தான். **மருத்துவ பரிசோதனை செய்த மருத்துவர்கள் மிகச் சாதாரணமான சில தீக்காயங்கள் மட்டுமே முழங்காலில் இருப்பதாகக் கூறி போலீசுக்கு பக்கமேளம்** வாசித்தார்கள். "அந்தச் சிறுவனைக் கைது செய்தோமே தவிர அவன் சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறுவதெல்லாம் பொய்; அரசியல்வாதிகள் வேண்டுமென்றே இதைப் பெரிது படுத்துகிறார்கள்" என்று சிறிதும் கூசாமல் புளுகினார் ஜம்மு நகர போலீசு சூப்பிரண்டு.

முதுகெலும்பற்ற புழுக்களைப் போல கூனிக்குறுகி குழைந்து கும்பிடாதவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் ரத்தத்தைச் சுவைக்கத் தவறுவதில்லை போலீசு மிருகங்கள். முதியவர்கள், பெண்கள், தாய்மார்கள், இளைஞர்கள் யாரும் இதற்கு விதிவிலக்கில்லை - குழந்தைகளும் கூடத்தான்.

ஏட்டுப் படிப்பு படிக்காத போதும் வியர்வை கற்றுத்தந்த பாடத்திலிருந்து கற்று உரிமை கேட்டான் குண்டு. உழைப்பை விற்பதும் விற்க மறுப்பதும் உழைப்பாளியின் உரிமையல்லவா! இனத்தின் உரிமையைக் கேட்டதற்காக இந்திய அரசின் துப்பாக்கிகளை சந்திக்கும் காஷ்மீரத்தின் சிறுவன் தனது வர்க்கத்தின் உரிமையைக் கேட்டான். உரிமையை யார் கேட்டாலென்ன, அதற்கு ஆளும் வர்க்கமும் அதிகார வர்க்கமும் தரும் பதில் ஒன்று தானே. அதுவும் கேவலம் ஒரு தாழ்த்தப்பட்ட சிறுவன் கேட்கும் போது!

◻ பஷீர்.

படிப்பகம்

www.padippakam.com




**● முன்னோடி பத்திரிக்கையினர் புதிய ஜனநாயகத்தின் அவதூறுகள் என்று தங்கள் மீது விமர்சனம் வைத்திருக்கிறார்கள் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அதற்கான விளக்கத்தை புதிய ஜனநாயகத்தில் வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன்.**

**அதாவது புதிய ஜனநாயகம், மக்கள் யுத்தம் (முன்னோடி) மக்கள் யுத்தம் (போல்ஷ்விக்) என இரண்டும் ஒரே கட்சியாகி இருப்பதாக வாசகர்களைக் குழப்புகிறது என முன்னோடியினர் கூறுவது பற்றித் தங்கள் விளக்கம் யாது?**

**— மா.சுதன், மதுரை.**

○ புதிய ஜனநாயகத்தின் கடந்த ஜனவரி இதழ்களில் மக்கள் யுத்தக்குழு மற்றும் தமிழரசன் பற்றிய சில கேள்விகளுக்குப் பதில் எழுதியிருந்தோம். அவற்றுக்கு எதிராக ''புதிய (ஜனநாயகம்) 'அரசுவின்' பொழிப்புரைகள்!'' என்கிற விமர்சனம் கட்டுரை ஒன்றை 1990 மே-ஜூன் 'முன்னோடி' வெளியிட்டிருக்கிறது. அதற்குத்தான் தோழர் மா.சுதன் பதிலளிக்கும்படி கேட்கிறார்.

''தமிழகத்திலேயே மக்கள் யுத்தம் (முன்னோடி), மக்கள் யுத்தம் (போல்ஷெவிக்) என இரண்டு பிரிவினர் உள்ளனர்'' என்று நாம் எழுதியதன் மீதான விமர்சனம் பற்றி: மக்கள் யுத்தம் இரண்டு பிரிவாக இல்லை; தெரிந்தும், வேண்டுமென்றே திரித்து அப்படிக் கூறுகிறது புதிய ஜனநாயகம்; மக்கள்யுத்தம் கட்சியின் அரசியல் நிலைப்பாடுகளில் வேறுபாடு கொண்டு, புதிய அரசியல் நிலைப்பாட்டோடு போல்ஷெவிக் கட்சி என்ற பெயரில் இயங்குபவர்களை மக்கள் யுத்தம் என்று குறிப்பிடுவது அயோக்கியத்தனம்; நேர்மையற்ற செயல், திட்டமிட்டே குழப்பத்தை உண்டாக்கும். ஈனச் செயலாகும் என்று பு.ஜ.வைச் சாடும் முன்னோடி ''மக்கள் யுத்தம் கட்சி இரண்டல்ல; ஒன்றுதான்'' என்று வாதிடுகிறது.

சம்பந்தப்பட்ட கேள்வி மக்கள் யுத்தக்குழு ஒன்றுபட்டிருந்த காலத்தின் அரசியல் விவகாரம் என்பதாலும், அதிலேயே இரண்டு போக்குகள் எழுந்துள்ளன என்பதாலுமே ம.யு.(முன்னோடி), ம.யு.(போல்ஷெவிக்) என்று குறிப்பிட்டிருந்தோம. பிளவுபட்டுப்போன இன்னொரு பிரிவினர் முன்னோடி குறிப்பிடுவதைப் போல போல்ஷெவிக் கட்சி என்கிற பெயரில் இயங்கவில்லை. இ.பொ.க (மாலெ) மக்கள் யுத்தம் (போல்ஷெவிக்) என்கிற பெயரில் தான் இயங்குகின்றனர். மக்கள் யுத்தமும், மக்கள் யுத்த (போல்ஷெவிக்)மும் ஒரே அமைப்பில் இயங்கும் இருபிரிவினர் என்கிற பொருள் நமது பதிலில் எங்கேயும் இல்லை.

ஒரு மாநிலத்தில் இயங்கும் அமைப்பைக் குழுவென்றும், ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் இயங்கும் அமைப்பைக் கட்சி என்றும் ம.யு.வினர் வரையறுத்துள்ளனர். எவ்வித கோட்பாடுமின்றி அரசின் நிர்வாகப பிரிவின் அடிப்படையிலான இந்தக் கண்ணோட்டத்தை நாம் ஏற்கவில்லை. அரசியல் — சித்தாந்த அடிப்படைகளை வைத்துப் பார்க்கவேண்டும். அதன்படி இந்திய மார்க்சிய - லெனினிய இயக்கம் என்பது பிளவுபட்டிருக்கும் சில குழுக்களைக் கொண்ட இ.பொ.க (மா-லெ) கட்சியைக் குறிக்கிறது. (வெவ்வேறு குழுக்களாக இருந்தபோதும் ருஷ்யாவில் அவை சமூக ஜனநாயக வாதம் என்றழைக்கப்பட்டது போல). அதாவது இ.பொ.க (மா-லெ) என்கிற ஒரு கட்சியே மார்க்சிய - லெனினிய இயக்கமே சில பிரிவுகளாக - குழுக்களாகப் பிளவுபட்டிருக்கின்றன. இந்தப் பொருளில்தான் மக்கள் யுத்தம், மக்கள் யுத்தம் (போல்ஷெவிக்) என இரண்டு பிரிவினரையும் கருதுகிறோம்.

ம.யு.வில் ஏற்பட்டது பிளவு அல்ல, ஒரு பகுதியினர் சதி செய்து, தலைமையைக் கைப்பற்ற முயன்று, தோற்று, விலகிப் போய் விட்டனர்; ஆகவே ம.யு என்பதற்கு உரிமையுடையவர்கள் தாங்கள் மட்டுமே என்று முன்னோடியினர் வாதிடுகின்றனர். இதை நாமும் அங்கீகரிக்கவேண்டும் என்கிற ரீதியிலேதான் புதிய ஜனநாயகம் மீதான இந்த விமர்சனம் எழுதியுள்ளனர். ஆனால் இதையும் நாம் ஏற்கவில்லை. ம.யு. அமைப்பில் ஏற்பட்ட பிளவுக்கு இருதரப்பினருமே பொறுப்பாவார்கள் என்றும் ம.யு. பாரம்பரியத்துக்கு இருதரப்பினருமே உரிமை உடையவர்கள் என்றும் கருதுகிறோம். இதிலே முன்னோடி எழுதுவதுபோல அயோக்கியத்தனம், நேர்மையற்ற — யோக்கியமற்ற ஈனச்செயல், திட்டமிட்டே குழப்பத்தை உண்டாக்குவது எதுவும் இல்லை.

அமைப்புக் கமிட்டி என்கிற பெயரில் ஒற்றுமை இருப்பதாலேயே மா.அ.க.வும், த.நா.அ.க.வும் ஒரே கட்சியின் இருபிரிவுகள் என்று சொல்லமுடியுமா? என்று முன்னோடி கேட்கிறது. த.நா.அ.க.வும் மார்க்சிய - லெனினிய இயக்கத்தின் ஒரு பகுதி என்று முன்னோடி கருதுமானால் அப்படிச் சொல்லிக் கொள்ளட்டும். நாம் அப்படிக் கருதவில்லை.

**மக்கள் யுத்தம் (முன்னோடி) என்று பத்திரிக்கையின் பெயரால் கட்சியைக் குறிப்பிட்டது மீதான விமர்சனம் பற்றி:** ம.யு தலைமையை ஏற்றுக்கொண்டுள்ள மு.மா.ச. மற்றும் மு.இ.அ. ஆகிய இரு மக்கள்திரள் அமைப்புகளின் பத்திரிக்கை முன்னோடி; இதைவிடப் பரந்து விரிந்த பரிமாணம் - பணிகளை உடைய கட்சியை இவ்வாறு குறிப்பிட்டது அரைவேக்காட்டுத்தனம்; ஒரு கட்சியைக் கொச்சைப்படுத்துவது; மேற்கண்ட தவறோடு சேர்ந்து இது மிகவும் மோசமான நேர்மையற்ற செயல் என்று புதிய ஜனநாயகத்தைச் சாடுகிறது, முன்னோடி.

ஒரு கட்சியை மக்கள் திரள் அமைப்புகளின் பத்திரிக்கையின் பெயரால் அழைப்பது அதன் பரிமாணம் - பணிகளைக் 'கொச்சைப் படுத்துவது' என்பது கோட்பாடு ரீதியில் சரிதான். ஆனால் இதையே வறட்டுத்தனமாகப் பார்க்ககூடாது. சில சமயம் ஒரு கட்சியினால் தலைமை தாங்கப்படும் சம்பவமோ, மக்கள் திரள் அமைப்போ, பத்திரிக்கையோ கட்சியின் பெயரை விடப் பிரபலமாகி, அதையே அடையாளமாகக் கொண்டு இனங் காணப்படுவதும், அழைக்கப்படுவதும் உண்டு. அப்படி அழைக்கப்பட்டாலும் அதன் முழுப்பரிமாணம் - பணிகளைக் குறிப்பதாகவே புரிந்து கொள்ளப்படும். உதாரணமாக நக்சல்பாரிகள், நக்சலைட்டுகள், நக்சல்கள் ஆகியவை இப்போது ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்களைக் குறிப்பிடுவதில்லை. மார்க்சிய - லெனினிய இயக்கத்தையே குறிக்கின்றன. அதை மா-லெ புரட்சியாளர்கள் யாரும் கொச்சைப்படுத்துவதாகக் கருதவில்லை. ''நக்சல்பாரிகளே தேசபக்தர்கள்!'' என்பது ம.யு.வின் பிரபலமான சொந்த முழக்கம். அவ்வளவு ஏன்? ரேடிக்கல்ஸ் (RADICALS) என்று மு.இ.அ.வின் பெயரை வைத்து மக்கள் யுத்தக் குழுவை அழைப்பது ஆந்திரப் பத்திரிக்கைகள், மக்கள், அணிகளிடையே பிரபலமாகி உள்ளது. ம.யு. குழுவும் அதைக் கொச்சையாகக் கருதவில்லை. அவர்களே அப்படிப் பேசுவதும் எழுதுவதும் உண்டு. அதைப்போல பிரபலமடைந்துள்ள ஒரு குறியீடு என்கிற முறையில் தான் அவ்வாறு எழுதினோம்.

**'பாசிசமா? பாயாசமா?' என்ற விவகாரம் குறித்து முன்னோடியின் கேள்விக்குப் பதில்:** 'பாசிசமா? பாயாசமா?' என்று தாங்கள் கேவலமாகக் கிண்டலடிக்கவில்லை. போல்ஷெவிக் கட்சிப் பிரிவில் உள்ளவர்களே அவ்வாறு செய்தனர்; ஆனால் முன்னோடியினர் மீது முதலாளித்துவப் பத்திரிக்கையைப் போல கற்பனை செய்து, அவதூறு எழுதுகிறது, புதிய ஜனநாயகம் என்று சாடுகின்றனர். 'பாசிசமா? பாயாசமா?' என்று கேட்டது மக்கள் யுத்தக் குழு ஒன்றுபட்ட அமைப்பாக இருந்தபோது என்று நிச்சயமாகக் கூறமுடியும். ஏனெனில் பிளவுபடும்போதே ம.யு. (போ) தலைமை ''பாசிச எதிர்ப்பு'' என்ற முழக்கத்தை ஏற்றுக் கொண்டனர். எனவே அதன்பிறகு அவர்கள் இப்படிச் சொல்வதற்கான அடிப்படையோ அவசியமோ இல்லை. இன்னும் சொல்லப் போனால் பிளவுக்கான காரணங்களில் ஒன்றாக இந்த முழக்கமும் இருந்தது.

'பாசிசமா? பாயாசமா?' என்ற கேள்வி எழுவதற்கான அடிப்படை, பாசிசம் பற்றி மக்கள் யுத்தக்குழுவினரது அரசியல் - சித்தாந்த நிலைப்பாடுதான். அதைப் பார்க்காது யார் யார் இப்படிக் கேட்டனர்; இப்போது அவர்கள் எந்த அமைப்பில் இருக்கின்றனர்,



படிப்பகம்

www.padippakam.com

என்று பார்ப்பது சரியாகாது. குறிப்பாக மக்கள் யுத்தத்தின் பாரம்பரியத்துக்கு ஏகபோக உரிமை பாராட்டும் முன்னோடியினர் இதற்கான பொறுப்பை மட்டும் தட்டிக் கழிப்பதும், வேறொரு பிரிவினர் மீது கைகாட்டுவதும் எந்த விதத்தில் நியாயமாகும். "ம.யு. (முன்னோடி) யினர் இன்னமும் 'பாசிசமா? பாயாசமா?' என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்று நாம் எழுதியதற்கு காரணம் இன்னமும் அவர்கள் 'பாசிசம்' பற்றிப் பழைய முடிவில் தொடர்வதைக் குறிப்பதற்குத்தான். 'கிண்டலடிப்பது' என்பது அதைச் சொல்லும் வடிவம் பற்றிய பிரச்சினைதான். அதைவிட 'பாசிச எதிர்ப்பு' என்கிற முழக்கத்தின் அரசியல் முக்கியத்துவத்தை முன்னோடியினர் உணராதிருப்பதாகும்.


"தம்மீது தாக்குதல் வந்தால் மட்டும் பாசிசத் தாக்குதலை முறியடிப்போம் என்று ம.யு. வினர் முழங்கத் தவறுவதில்லை" என்று புதிய ஜனநாயகம் எழுதியிருந்தது. இது அவதூறு: அவர்கள் கட்சியோ, முன்னோடியோ, மக்கள் திரள் அமைப்புகளோ எந்த கட்டத்திலும் இது போன்ற முழக்கத்தை வைத்ததில்லை. இதை ஆதாரத்துடன் குறிப்பிட்டால் முன்னோடியினர் சுய விமர்சனம் ஏற்கத் தயார். இல்லையானால் அவதூறுக்கு புதிய ஜனநாயகம் சுயவிமர்சனம் செய்யத் தயாரா? என்று கேட்கிறார்கள்.

சரி! மக்கள் யுத்தக்குழு மையக்குழுவின் அதிகாரபூர்வ ஏடாக சில காலம் வெளிவந்தது 'வாய்ஸ் ஆ∴ப் வேன்கார்டு' (முன்னணியில் குரல்) என்ற ஆங்கில ஏடு. அதில் பின்வருமாறு இருக்கின்றது.

"பாசிச ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடு!" என்பதுதான் வாய்ஸ் ஆ∴ப் வேன்கார்டு 1985 ஜூன் இதழின் முன் அட்டைத் தலைப்பு. அதன் நான்காம் பக்கத் தலைப்பு. "பாசிச அரசை எதிர்த்துப் போராடு!" "படிப்படியாகவும் திட்டமிட்ட முறையிலும் இந்த நாட்டில் பாசிச ஆட்சி அறிமுகப்படுத்தும் அதே சமயம். நாடாளுமன்ற 'எதிர்த்தரப்பு' அந்த நிகழ்ச்சிப் போக்குக்கு தூண்டுதலாகவும் முழு வசதி செய்தும் கொடுக்கிறது" (ஷை பக்-5

"தங்களுடைய ஆட்சியை நீட்டிக்கவும் இலாபத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் அதிருப்தியுற்று எழும் மக்களை ஒடுக்கவும் ஏகாதிபத்திய எஜமானர்களின் துணையோடு இந்திய மக்கள் மீது பாசிசக் கொள்கைகளைத் திட்டமிட்டு திணிக்கின்றன. இந்திய ஆளும் வர்க்கங்கள்" (வாய்ஸ் ஆ∴ப் வேன்கார்டு 1985 நவ-டிச. பக் 15) "இந்த நாட்டிலே வளர்வது என்னவென்றால் மிகமிக ஆபத்தானதொரு பாசிச அரசு... இட்லர் பாணி ஆட்சி" (ஷை பக்-17) இவ்வாறு ம.யு. மையக்குழுவின் அதிகாரபூர்வ ஏடு எழுதியபோதே 'பாசிச எதிர்ப்பு' முழக்கத்தை அவர்கள் கேலிசெய்து வந்தார்கள்.

ஒரு புறம் ம.யு மீது விமர்சனம், மறுபுறம் அதன் இயக்கத்தைப் புகழ்ந்து எழுதுவது பற்றி: "பு.ஜ.விற்கு நாவுகள் ஒன்றா, இரண்டா" என்கிற கேள்வி பற்றி: ஜனநாட்டிய மண்டலியின் மாநாடு உட்பட ஆந்திர ம.யு. இயக்கங்களை மக்கள் வெள்ளம், புரட்சி அலை என்றும், லட்சக்கணக்கான மக்கள் திரண்டனர் என்றும் எழுதுகிறது புதிய ஜனநாயகம். அதே சமயம் ம.யு.வை தனிநபர் பயங்கரவாதிகள். போர்க் குணமிக்க பொருளாதாரவாதம், இடது தீவிரவாதப் பாதை என்று எழுதுகிறது. ஆளும் கட்சியினர் ம.யு.வைப் பார்த்து பயங்கரவாதிகள், மனிதாபிமானமற்றவர்கள் என்று அவதூறுப் பொய் பிரச்சாரம் செய்வதாகவும் எழுதுகிறது. இவை




முன்னுக்குப்பின் முரணாக இல்லையா? கரம்சேடு தாழ்த்தப்பட்ட மக்களைக் கொன்ற செஞ்சு ராமய்யாவை அழித்தொழித்ததை மட்டும் வரவேற்கலாமா? ம.யு. வின் இயக்கத்தைப் புகழுபவர்கள் போர்க் குணமிக்க பொருளாதாரவாதம், பயங்கரவாதிகள், இடது தீவிரவாதிகள் என்று எழுதலாமா? அப்படி இருந்தால் லட்சக்கணக்கில் மக்கள் திரளுவார்களா? போலிக் கம்யூனிஸ்டுகள், போலிப் புரட்சியாளர்கள் செய்வதைப் போலவே ம.யு.வைப் பயங்கரவாத அமைப்பு என்று பு.ஜ.வும் அவதூறு செய்கிறது — என்று முன்னோடி எழுதுகிறது.

ம.யு வினரைப் பயங்கரவாதிகள், ம.யு. குழு பயங்கரவாத அமைப்பு என்று நாம் ஒருபோதும், எங்கேயும் எழுதவில்லை. தனிநபர் பயங்கரவாதச் செயல்களை அரசியல் போராட்ட வழிமுறையின் ஒரு கட்டமைப்பாகக் கொள்ளும் நபர்கள், அமைப்புகளைத்தான் அப்படிச் சொல்ல முடியும். ம.யு. அவ்வப்பொழுது அரசியல் பழிவாங்கும் தனிநபர் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகிறது: அது அதிகரித்தும் வருகிறது: இந்தப் போக்கே ம.யு.வின் அரசியல் போராட்ட வழிமுறையாக மாறுமானால் அதைப் பயங்கரவாத அமைப்பு என்று வரையறுப்போம். இப்போதே அப்படி நாம் கருதவில்லை.

தனிநபர் பயங்கரவாதத்துக்கும், புரட்சிகர பயங்கரவாதத்துக்கும் வேறுபாடு உள்ளது. குறிப்பிட்ட சூழ்நிலை, பிரச்சனைகளைப் பொருத்து புரட்சிகரப் பயங்கரவாதச் செயல்கள் அவசியமானவைதான். கரம்சேடு, கீழ் வெண்மணி கொலைகாரன்களை அழித்தொழித்தவை, புரட்சியாளர்களின் விடுதலைக்கான செயல்கள் போன்றவைகளை இந்த அடிப்படையில்தான் சரியென்கிறோம். ஆனால் ம.யு.வைப் பயங்கரவாத அமைப்பு என்றோ, அவர்களை பயங்கரவாதிகள் என்றோ பு.ஜ. எழுதாததை முன்னோடி இட்டுக்கட்டி எழுதுகிறது.

அதே சமயம் இ.பொ.க. (மா-லெ)யின் அடிப்படை நிலைப்பாடுகளை ம.யு. ஏற்றாலும் "அவற்றை அமுல்படுத்துவதற்கான அரசியல் கோட்பாடுகளோ, அரசியல், இராணுவ யுத்த தந்திரங்கள், போர்த் தந்திரங்களோ, அமைப்புமுறைகளோ எதுவும் அதனிடம் கிடையாது: அதற்கான அரசியல் இராணுவப் போராட்டங்களும் கிடையாது: மக்களுடைய அன்றாடக் கோரிக்கைகளுக்கான போர்க் குணமிக்க பொருளாதாரவாதப் போராட்டங்களையே மக்கள் யுத்தமாக வளர்த்தெடுத்துவிட முடியும் என்கிற மார்க்சிய - லெனினிய விரோத இடது சந்தர்ப்பவாத வழிமுறையையே பின்பற்றுகிறது" என்கிற நமது விமர்சனத்துக்கு ம.யு. முன்னோடி பதில் கூறவே இல்லை. லட்சக்கணக்கான மக்கள் திரளுவதாலேயே நமது விமர்சனங்கள் தவறானவை ஆகா. வலது திரிபுவாத பொருளாதாரவாதிகளுக்குக் கூட திரளுகிறார்கள்: அதே நாணயத்தின் இன்னொரு பக்கம் தான் 'இடது' திரிபுவாதமாகும். இரண்டுமே அரசியல் - சித்தாந்த அடிப்படையற்றவை. ஒரு வேறுபாடு: ம.யு.வினர் இ.பொ.க.(மா-லெ)யின் திட்ட அடிப்படைகளை ஏற்றுக் கொண்டிருப்பதால் எதிர்கால நடைமுறையாக மார்க்சிய - லெனினியக் கோட்பாடு - சித்தாந்த அடிப்படையைப் பெறமுடியும் என்று நம்புகிறோம்.

ஜனநாட்டிய மணடலியும், ம.க.இ.க.வும் அகில இந்திய புரட்சிப் பண்பாட்டுக் கழகத்தில் இணைந்துள்ள தோழமை அமைப்புகள். எனவே அதன் மாநாட்டில் ம.க.இ.க. பிரதிநிதிகளும் தோழமை அமைப்புகள் என்கிற அடிப்படையில் ரயத்துக் கூலி சங்க மாநாட்டில் வி.வி.மு. பிரதிநிதியும் கலந்து கொண்டு அனுப்பிய அறிக்கைகளை பு.ஜ. வெளியிட்டது. "வைத்தால் குடுமி - சிரைத்தால் மொட்டை" என்கிற கொள்கை நம்மிடம் இல்லை. புரட்சிகர இயக்கங்களை, ஈழம், காஷ்மீர் போன்ற இன விடுதலை இயக்கங்களை, பம்பாய் மில் தொழிலாளர் போராட்டம் போன்ற தன்னெழுச்சியான போராட்டங்களைக் கூட ஆதரிக்கும் அதே சமயம் அவற்றை விமர்சனப்படுத்தவும் செய்கிறோம். இரண்டையும் எதிரெதிராக நிறுத்துவது சரியல்ல. விமர்சனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பு.ஜ. வை ஓட்டுப் பொறுக்கிகளோடு ஒப்பிடுவதும் கூட அவர்களது 'இடது' திரிபுவாதப் போக்கையே காட்டுகிறது.

 o o o o

முத்திரை குத்துவது, பட்டம் சூட்டுவதைக் கைவிடுங்கள் என்று உபதேசிக்கும் அதே முன்னோடியில் அரைவேக்காடு, குமுதம் - புதிய அரசு போன்ற பல வசவுகள் இருக்கின்றன. தெரிந்தால் எழுதுங்கள், இல்லையானால் எழுதாதீர்கள் என்று எச்சரிக்கிறார்கள். தெரிந்து எழுதுகிறோமா? தெரியாமல் எழுதுகிறோமா? என்பதை இந்த பதிலே தெளிவுபடுத்தும் என்று நம்புகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

## சுயநிதிக் கல்வி நிறுவனங்கள்:-

# ஒட்டுப் பொறுக்கிகளின் கொழுத்த வியாபாரம்

'லட்சம் ரூபாய் பணம் கட்டி பையனை சேர்த்து விட்டால் நாளை டாக்டராகவோ, எஞ்சினியராகவோ ஆகி லட்சம் லட்சமாக சம்பாதிக்கப் போகிறான்; தயங்காம கட்டுங்க சார்; அடுத்தவங்க தயாரா இருக்காங்க; சீக்கிரம் முடிவு எடுங்க' என்று 'வை ராஜா வை' பாணியில் கல்வி வியாபாரம் செய்யும் சுயநிதிக் கல்லூரிகள் பத்தாண்டுகளுக்கு முன் எம்.ஜி.ஆர். காலத்தில்தான் புற்றீசல்கள் போல் கிளம்பின. குறிப்பாக ஜானகி அமைச்சரவை இருந்த 30 நாட்களில் 3 பொறியியற் கல்லூரிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டன.

இக்கல்வி வியாபாரம் ஏனைய தொழிலை விட உழைப்பு அதிகமில்லாமல் அரசின் பல சலுகைகளுடன் லாபம் தரக்கூடியதாக இருக்கவே அரசியல்வாதிகளும், கிரிமினல்களும் இதில் அதிகம் நுழைந்தனர். இக்கல்வி வியாபாரத்தில் செல்வாக்கு செலுத்திவந்த சாதி, மத டிரஸ்டுகள், மடாலயங்கள் - நிலப் பிரபுக்கள், தரகு முதலாளிகளைக் காட்டிலும் இன்று அரசியல்வாதிகளும் கிரிமினல்களும் செல்வாக்கு செலுத்துபவர்களாக மாறியிருக்கிறார்கள். சுயநிதிக் கல்லூரிகள் நடத்திவரும் நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் மு.தம்பித்துரை, ஏ.சி.சண்முகம், ஜேப்பியார், ஜி.விசுவநாதன், தாமரைக்கனி, சாராய உடையார், வாழப்பாடி ராமமூர்த்தி, கி.வீரமணி, எஸ்.ஏ.ராஜா முதலானவர்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இக்கல்லூரிகளை ஆக்கிரமித்துள்ள சமூக விரோதிகளும், அரசியல்வாதிகளும் தனக்கேயுரிய தொழில்முறை பாணியில் ஒருவரை ஒருவர் காலைவாரிவிட்டுக் கொள்வதும் நடைபெறுகிறது. இதற்கு சமீப காலமாக பத்திரிக்கைகளில் அடிபட்டு வந்த வேலூர் பொறியியல் கல்லூரி பிரச்சினை மேலும் ஒரு சான்றாக அமைகிறது.

வடஆற்காடு கல்வி தரும அறக்கட்டளையின் தலைவரும், வேலூர் சுயநிதி பொறியியல் கல்லூரியின் தாளாளரும், மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் எம்.பி.யுமான ஜி.விசுவநாதன், எம்.ஜி.ஆர். காலில் விழுந்து தமது கல்லூரிக்கு 1985-ல் சுமார் 150 ஏக்கர் அரசு நிலத்தைப் பெற்றார்.

'ஒரு தனியார் கல்வி அறக்கட்டளை, பொறியியல் கல்லூரியைத் தொடங்க வேண்டுமானால் அதற்கு சொந்தமாக 75 ஏக்கர் நிலம் இருக்கவேண்டும். ஆனால் இக்கல்லூரிக்கு சொந்த நிலமே இல்லை. நிலம் அனைத்தும் எம்.ஜி.ஆர். அரசால் கொடுக்கப்பட்டு முறைகேடு நடந்துள்ளது' என்றும், 'நில உச்சவரம்பு சட்டப்படி 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் மட்டுமே ஒரு தனியார் அறக்கட்டளை வைத்துக் கொள்ள முடியும். வரம்புக்கு மேல் நிலம் வைத்துக் கொள்வதற்கு அரசிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் இக்கல்லூரி அனுமதி எதுவும் பெறவில்லை' என்றும் கூறி இக்கல்லூரியின் நிலத்தைக் கைப்பற்ற - மீட்க கல்லூரிக்கு மே 27ந் தேதி 'சீல்' வைத்தது தி.மு.க. அரசு.

இவை ஒவ்வொன்றிற்கும் மறுப்பு தெரிவித்து தமது தரப்பு பதில் கொடுத்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார், விஸ்வநாதன். உயர்நீதி மன்றமும் மே 30ம் தேதி கல்லூரிக்கு வைக்கப்பட்ட 'சீலை' அகற்ற உத்தரவு பிறப்பித்தது. ஆனால், தி.மு.க. அரசோ போலீசைக் குவித்து கல்லூரிக்குள் ஆசிரியர்களையும், மாணவர்களையும் அனுமதிக்க மறுத்து கோர்ட் உத்தரவை மீறியது.

இக்கல்லூரியின் ஆசிரியர் - பெற்றோர் சங்கம் தி.மு.க. அரசின் நடவடிக்கையை கண்டித்தது. அதன் தலைவர் பி.எஸ்.சுப்ரமணியன் உயர்நீதி மன்றத்தில் அரசுக்கு எதிராக வழக்குத் தொடுத்தார். உயர்நீதிமன்றம் இப்பிரச்சினையை தனியாக 'டிவிசனல் பெஞ்சுக்கு' விட்டது. நீதிமன்றம் ஜூன் 22ந் தேதி அரசு, கல்லூரி நிலத்தை கையகப்படுத்துவதற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது. தி.மு.க. அரசோ கோர்ட் உத்தரவை காண்பித்தால் தான் கல்லூரியை நடத்த அனுமதிப்போம் என இரண்டுநாள் இழுத்தடித்து பின்னர் கல்லூரியை நடத்த அனுமதித்தது. அதன்பிறகு கருணாநிதி தம்மீது 'ஊசிமுனைத்' தாக்குதல பலமுனையில் தொடுத்து வருவதாகக் கூறுகிறார், விசுவநாதன்.

"ஜெயலலிதா கார் விபத்து நடந்த சமயத்தில் விசுவநாதன், கருணாநிதியின் கொடும்பாவியை எரித்து கருணாநிதியின் சதிச் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்தார். மலிவு விலை மதுத் திட்டத்தை தீவிரமாக எதிர்த்தார். இதனாலேயே முறைகேடாக நிலம்பெற்றுள்ள மற்ற கல்லூரிகளை எல்லாம், குறிப்பாக வீரமணி கல்லூரியையும் விட்டுவிட்டு இக்கல்லூரி மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ளார், கருணாநிதி" என்று அ.தி.மு.க. கட்சிக்காரர்கள் குரல் எழுப்பி, சுவரொட்டி ஒட்டி, பொதுக்கூட்டம் நடத்தியும் எதிர்ப்பு தெரிவித்தனர். துக்ளக், தராசு முதலான பத்திரிக்கைகளோ நேர்மையான - சரியான கல்லூரி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையென திரித்து பூதாகரப்படுத்தி இப்பிரச்சினையை தமது பத்திரிக்கை வியாபாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டன.

கருணாநிதியின் பழிவாங்கும் படலத்தில் ஒன்றுதான் வேலூர் கல்லூரி மீதான நடவடிக்கை; இதை நாம் மறுக்கவில்லை. அதேசமயம், விசுவநாதன் சுயநிதிக் கொள்ளையர் கும்பலிலிருந்து - மோசடிப் பேர்வழிகளிலிருந்து எந்தவிதத்திலும் மாறுபட்டவர் இல்லை. எம்.ஜி.ஆர். ஆட்சியில் மற்றவர்களைப் போலவே அதிகார முறைகேடுகளைப் பயன்படுத்தி இக்கல்லூரியைத் தொடங்கினார்.

அதிகார முறைகேடுகளில் திளைப்பதும், பழிவாங்குவதும் ஒட்டுப் பொறுக்கிகளுக்கு ஒன்றும் புதியவையல்ல. இவர்களின் பாரம்பரியம் மிக்க அரசியலே இதுதான். எம்.ஜி.ஆர். ஆட்சியில் ஜி.விசுவநாதன், சாராய உடையார் போன்றவர்கள் செழித்து வாழ்ந்தார்கள்; கருணாநிதி ஆட்சியில் கி.வீ.ரமணி போன்றவர்கள் செழித்து வளர்கிறார்கள் என்பதுதான் வேறுபாடு.

1988 ஜனவரியில் எம்.ஜி.ஆர். அரசு கல்வித்துறை ஆணைமூலம் 'பொதுமக்களிடமிருந்து கல்லூரிகள் நன்கொடை வசூலிக்கக் கூடாது' என தடை விதித்தது. இந்த அரசாணை காகிதத்திலேயே தூங்குகிறது. தி.மு.க. அரசோ, சுயநிதிக் கல்லூரிகளின் செயல்பாடுகளைப் பற்றி ஆராய்வதற்காக சி.குழந்தைசாமி தலைமையில் பல்கலைக்கழக உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்தது. இக்குழு அனைத்து சுயநிதிக் கல்லூரிகளையும் பார்வையிட்டு, மு.தம்பித்துரை, ஏ.சி. சண்முகம், ஜேப்பியார், கி.வீரமணி, முதலானவர்களுடைய பொறியியல் கல்லூரிகள் அடிப்படை வசதியே இல்லாமல் படுமோசமாக இயங்குகின்றன என்று அறிக்கை சமர்ப்பித்தது. "மோசடிக் கல்லூரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சவடால் அடித்த கருணாநிதி, அ.தி.மு.க.வைச் சேர்ந்த தம்பித்துரையின் கல்லூரி மீது மட்டும் நடவடிக்கை எடுத்துவிட்டு பின்னர் ஆய்வுக்குழுவின் பட்டியலில் உள்ள 'அன்

வேலூர் பொறியியற் கல்லூரி விடுதி முன் குவிக்கப்பட்ட போலீசு.
உள்ளே: ஜி.விசு வநாதன்



படிப்பகம்

www.padippakam.com

# தி.க.வீரமணியின் தமிழினத் தொண்டு!

திராவிட கழகத்தினர் தமிழகத்திலே கல்வித்துறையில் செய்துவரும் 'சேவை' அளவிடற்கரியது. தஞ்சை வல்லத்தில் பெண்களுக்கான பாலிடெக்னிக், திருச்சியில் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சி பள்ளி, பார்மசி கல்லூரி மற்றும் லேப் டெக்னீசியன் கோர்ஸ் முதலியவை பெரியார் - மணியம்மை கல்வி தரும அறக்கட்டளையின் கீழ் இயங்கி வருகின்றன. இவை வருடந்தோறும் நன்கொடை என்ற பெயரில் லட்சக்கணக்கில் வசூலிப்பதும், தி.க. பத்திரிக்கையான 'விடுதலை'க்கு ஆண்டு சந்தா - ஆயுள் சந்தா கட்ட வேண்டும் என நிர்பந்திப்பதும் பகிரங்கமானவைதான்.

தி.க. பொதுச் செயலாளர் கி.வீரமணி தொடங்கிய திராவிட நலநிதி திட்டத்திலும் பங்குதாரர் ஆனால்தான் இவர்களது பள்ளி மற்றும் கல்லூரிகளில் 'சீட்' கிடைக்கும் என்பது சமீபகாலமாக இருந்துவரும் புதிய நிபந்தனை. ''திரைப்படம் எடுக்கப் போகிறோம் தொழிற்சாலை தொடங்கப் போகிறோம். அதிலிருந்து வரும் வருமானத்தை வட்டியாக பிரித்து தருகிறோம், எங்கள் திட்டத்தில் பங்குதாரராக சேருங்கள். அதிக வட்டி பெற்று பலனடையுங்கள்'' என்றெல்லாம் விளம்பரப்படுத்தி பொதுமக்களிடமிருந்து கணிசமான தொகை வந்ததும் மாயமாய் மறையும் பல 'பிளேடு' நிறுவனங்களை நாம் அறிவோம். இவ்வகையைச் சேர்ந்தது தான் 'திராவிட நல நிதி திட்டம்': தமது கொள்ளையை இதுபோன்ற தண்டல் முறையில் மட்டுமல்ல, இவர்கள் வேறு ஒரு பாணியிலும் நடத்தி வருகிறார்கள்.

மூப்பனார், வாண்டையார் போன்ற நில முதலைகள், நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான தங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பினாமி பெயரில் வைத்திருக்கிறார்கள். அதுபோல தி.க.வின் பினாமி அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி கல்வி வியாபாரத்தை விஸ்தரிக்கிறார் வீரமணி. தஞ்சை வல்லத்தில் பெரியார் - மணியம்மை பெயரால் பெண்கள் பொறியியல் கல்லூரி ஒன்று தொடங்குவதற்காக எம்.ஜி.ஆர். காலத்திலேயே முயற்சியெடுத்தார் வீரமணி. அன்று இக்கல்லூரிக்கென நிலம் வேண்டி அரசிடம் விண்ணப்பித்த பொழுது 10 ஏக்கர் நிலம் மட்டுமே எம்.ஜி.ஆர். அரசால் கொடுக்கப் பட்டது. தி.மு.க. ஆட்சியை பிடித்ததும் வீரமணி தமது கல்லூரிக்கு நிலம் கேட்டு நிற்கவே, கருணாநிதியும் தனது 'இனமான அன்புத் தம்பி'க்கு உதவ முன்வந்தார். ஆனால், ''தனியார் அறக்கட்டளைக்கு அரசு நிலத்தைக் கொடுக்க முடியாது; சட்டப்படி பொது நிறுவனத்திற்குத்தான் கொடுக்க முடியும்'' என பிரச்சினை எழவே அதிகாரிகள் பொது நிறுவனமாக மாற்றி பதிவு செய்வதற்குரிய ஆலோசனை வழங்கினார்கள்.

பிறகு பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரிக்கான பெரியார் - மணியம்மை கல்வி வளர்ச்சி அறக்கட்டளை என்கிற 'பொது' நிறுவனம் உருவானது. இந்த அறக்கட்டளைக்கு தமது கட்சிக்காரரான ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி பி.வேணுகோபாலை தலைவராகவும், ஓய்வு பெற்ற வருமான வரி அதிகாரி ராஜரத்தினத்தை பொருளாளராகவும் நியமித்து தம்மை செயலாளராக போட்டுக் கொண்டார் வீரமணி. இது பொது அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட்டு இதற்கு 90 ஏக்கர் மேய்ச்சல் நிலம், ஆட்சிக்கு வந்த 2 மாதங்களிலேயே தி.மு.க. அரசால் வழங்கப்பட்டது. சில உள்ளூர் பஞ்சாயத்து தலைவர்களும், வருவாய்த்துறை அதிகாரிகளும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். இருந்தும் தனது விசுவாசமான தம்பிக்கு அரசு நிலத்தை தாரை வார்த்துக் கொடுத்தார் கருணாநிதி.

தி.க.வின் வருமானத்தை பெருக்க பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் மற்றும் பெரியார் - மணியம்மை கல்வி தரும அறக்கட்டளை என்கிற இரண்டோடு இந்த பினாமி அறக்கட்டளையையும் வீரமணி சேர்த்திருக்கிறார்.

...புத்தம்பி' வீரமணி நினைவு வரவே முடமாகி விட்டார்.

ஆட்சிக்கு வந்த இரண்டே மாதங்களில் 90 ஏக்கர் அரசு நிலத்தை 'இனமானத் தம்பி' வீரமணிக்கு தாரை வார்த்துக் கொடுத்த கருணாநிதி, எம்.ஜி.ஆரால் அ.தி.மு.க.வினருக்கு தாரைவார்த்து கொடுக்கப்பட்ட அரசு சொத்துக்களை மீட்பதாக நடவடிக்கையை தொடர்ந்தார். முதலாவதாக எம்.ஜி.ஆருக்கு வேண்டிய அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர். பெரியசாமிக்கு தாரை வார்க்கப்பட்ட நிலத்தை கைப்பற்றினார். பின் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை கைப்பற்றினார். காங்கிரசு செல்வாக்கைப் பயன்படுத்தி மோசடி செய்த 'ஸ்பிக்' நிறுவனத் தலைவர் மீதும் நடவடிக்கை எடுத்தார். மறைமலை நகர் ரயில்நிலைய விவகாரத்தில் காங்கிரசு கட்சி ரயில் மறியல் போராட்டம் நடத்தியபொழுது அதன் தலைவர் வாழப்பாடியை சேலம் பல்லவா அறக்கட்டளை மோசடியின் கீழ் கைது செய்தார். இதைத் தொடர்ந்தே இன்று அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஜி.விஸ்வநாதனின் வேலூர் பொறியியல் கல்லூரியின் மோசடி நிலத்தை கைப்பற்ற போர் தொடுத்தார் கருணாநிதி.

ஆட்சியாளர்கள் ஓட்டுப பொறுக்குவதற்காக, கண் துடைப்பிற்காக இது போன்று மோசடிக் கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுத்து நாடகமாடுவதும், தமது அணியினரை தட்டிக் கொடுத்து எதிர்க்கட்சி அணியினரை மட்டம்தட்டி பழிவாங்குவதும் இவர்களது வாடிக்கையான நடவடிக்கையே.

வளர்ந்து வரும விஞ்ஞான தேவைக்கு ஏற்ப நமது தொழில்துறை வளர்ச்சியடையவில்லை. மாறாக, அதற்கான தொழில்நுட்ப பட்டப்படிப்பின் விலை மட்டும் வருடந்தோறும் ஏறிக் கொண்டிருக்கிறது. கட்டிடவியல் பட்டப்படிப்புக்கு 50 ஆயிரமும், இயந்திரவியல் மற்றும் எலெக்ட்ரிக்கல் பட்டப்படிப்புக்கு 60 ஆயிரம் முதல் 70 ஆயிரம் வரையும், கணிப்பொறியியல் மற்றும் மின்னணுவியல் பட்டப்படிப்புக்கு ஒரு லட்சம் முதல் ஒன்றரை லட்சம் வரையும் சில சுயநிதிக் கல்லூரிகளால் மாணவர்களிடமிருந்து நடப்பாண்டில் வசூலிக்கப்படுகின்றன. மேலும் பருவகால கட்டணம், உணவு விடுதிக் கட்டணம் போன்றவைகள் மூலம் கல்லூரியை விட்டு மாணவர்கள் வெளிவரும் வரை தொடர்ந்து கொள்ளையடிக்கிறார்கள்.



இச்சுயநிதிக் கல்லூரிகளின் கல்வித்தரம் பற்றி சொல்லவே தேவையில்லை. அரசின் அனுமதியோடு புறம்போக்கு நிலத்தை அல்லது மேய்ச்சல நிலத்தை ஆக்கிரமித்து கீற்று கொட்டகை போட்டு, போகப்போக அபிவிருத்தி செய்து கொள்வதாகக் கூறி கல்லூரியைத் தொடங்குகிறார்கள். போதுமான கட்டிட வசதி, நூலக வசதி, சோதனைக்கூடம் மற்றும் உபகரணங்கள் வசதியில்லாமலும், தகுதிவாய்ந்த போதுமான ஆசிரியர்கள் - பயிற்சியாளர்கள் இல்லாமலும் கல்லூரியைத் தொடங்குபவர்கள் அதிகாரிகளை சரிகட்டி தொடர்ந்து அதையே நிரந்தரமாக வைத்திருக்கிறார்கள்.

புதிய கலைக்கல்லூரிகள், தொழில்நுட்ப - மருத்துவ - விவசாய கல்லூரிகளை நவீனமுறை விஞ்ஞான வசதிகளுடன் அரசே திறக்க வேண்டும். ஆனால், அரசோ அதிகார வர்க்கம் - போலீச - ராணுவத்தையே மேலும் மேலும் ஊட்டி வளர்க்கிறது. இவ்வாண்டு இந்திய அரசு பட்ஜெட்டில் மொத்த தொகையில் ராணுவத்திற்கு 18% ஒதுக்கிய ஆட்சியாளர்கள் கல்விக்கென 6% தேவையென அதிகாரிகள் கூறியும் 4% மட்டுமே ஒதுக்கியுள்ளார்கள். கல்வித் துறையை அரசு புறக்கணித்து வருவதால் தொழில்நுட்பக் கல்வித் துறையில் தனியார்கள் நுழைகிறார்கள். அதுவும் அரசியல்வாதிகளும், கிரிமினல்களும் நுழைந்து கல்வியின் தரத்தை - முன்னேற்றத்தை சீரழிக்கிறார்கள். மாணவர்களின் எதிர்காலத்தை பாழடிக்கிறார்கள்.

● ராசு.

படிப்பகம்

www.padippakam.com

### ஈழம்: மீண்டும் போர்

# ஈழத் தமிழருக்குத் தீர்வு எப்போது?

**மீ**ண்டும் தமிழீழத்தில் முழு யுத்த நிலைமை உருவாகிவிட்டது! ஓராண்டு உறவுக்குப் பிறகு விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் சிங்கள அரசிற்கும் கடும் சண்டை நடக்கிறது.

'89 ஆம் ஆண்டு மே மாதம் புலிகளுக்கும் சிங்கள அரசிற்கும் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி வடக்கு - கிழக்கு மாகாணங்களின் முகாம்களில் இருக்கும் சிங்கள ராணுவம், புலிகளின் அனுமதி பெற்றுத்தான் வெளியில் வரவேண்டும் என்பதை சிங்கள ராணுவம் மீறிவிட்டதாக குற்றம் சாட்டுகிறது புலிகள் அமைப்பு.

ஜூன் 7ந் தேதி இவ்வாறு கல்முனை முகாமிலிருந்து சிங்கள ராணுவம் வெளி வந்தது. எங்கள் எச்சரிக்கைக்கு கீழ்ப்படிய மறுத்து துப்பாக்கி சூடு நடத்தியது. எனவே, ராணுவத்தின் மீது தாக்குதல் தொடுத்தோம் என்கிறது புலிகள் அமைப்பு.

தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்கிக்கொண்டு வழக்கம் போல முகாம்களுக்கு திரும்பிய ராணுவத்தின் மீது புலிகள்தான் அடாவடித்தனமாக தாக்குதல் தொடுத்து 20க்கும் மேற்பட்ட பாதுகாப்பு படையினரை படுகொலையை செய்தனர் என்கிறது. சிங்கள அரசு!

ஜூன் 7ந் தேதியும் 11ந் தேதியும் நடந்த இவ்வாறான இரு மோதல்களை அடுத்து, முதலில் கிழக்கு மாகாணத்தின் சிங்கள போலீசு நிலையங்களை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர், புலிகள். 2 தவணைகளில் 600க்கும் மேற்பட்ட சிங்கள போலீசை யுத்தக் கைதிகளாக பிடித்தனர்.

அதில் 200க்கும் மேற்பட்டவர்களை புலிகள் படுகொலை செய்துவிட்டதாக சிங்கள அரசு கூறுகிறது. கிழக்கு மாகாணம் முழுக்க ராணுவத்திற்கும் புலிகளுக்கும் பெரும் சண்டை மூண்டது. வவுனியா, மட்டக்களப்பு, அக்கரைப்பட்டு, எராவூர், வாலாசன்னி, செம்மந்துரை ராணுவ முகாம்கள் மீது புலிகள் அதிரடி தாக்குதல் தொடுத்தனர். சண்டையில் சிக்கிய தமிழ், முஸ்லீம், சிங்கள சிவிலியன்கள் அருகிலுள்ள தங்கள் கோயில்களில் தஞ்சம் புகுந்தனர். நூற்றுக்கணக்கான சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். சிங்கள அரசுக்கும் புலிகளுக்கும் அடுத்தடுத்து நடந்த போர் நிறுத்த பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்தன. இரண்டு முறை போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு சிலமணி நேரங்களிலேயே ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிக்கொண்டு சண்டையைத் தொடர்ந்தனர்.

போர்நிறுத்த ஒப்பந்த கால அவகாசத்தின் மூலம் சிங்கள அரசு ராணுவத்தை ஒன்று குவிப்பதிலும், கிழக்கு மாகாணத்தை நோக்கி நகர்த்துவதிலும் முனைந்தது. புதிதாக 3000 ராணுவத்தினரையும் சிறப்பு பயிற்சி பெற்ற அதிரடிப் படையினரையும் தொழில் முறை கிரிமினல்களை கொண்ட கொலைகாரப் படையையும் புலிகள் மீது ஏவியது.

தமிழர் பகுதிகளில் ராணுவம் முன்னேறுவதற்கு விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மூலம் குண்டுகள் வீசியது. வீடுகளும் விளைநிலங்களும் பற்றி எரிந்தன.

மட்டக்களப்பு, கிரன், வாடிச்சேனை, கலுவாஞ்சிக்குடி, கல்லாடி ஆகிய ராணுவ முகாம்கள் மீதும், அம்பாறையில் அக்கரைபட்டு, பனாமா, பொத்துவில்; வடபகுதி வ்வுனியாவில் மான்குளம், யாழ் முகாமையும் புலிகள் உக்கிரமாக தாக்கினர். மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வாஞ்சிக்குடி பிரதான பாலத்தை தகர்த்தனர். கிரான் ராணுவ முகாமை முற்றுகையிட்டு ராணுவத்தினரை ஒடுக்கினர்.

15 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்த இந்த உச்சக்கட்ட போரில் கிழக்கு மாகாணத்தின் கேந்திரமான இடங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டதாக கூறியது சிங்கள அரசு. பி.பி.சி. போன்ற தனியார் சர்வதேச செய்தி நிறுவனங்கள் பிரேமதாசாவின் பொய் பிரச்சாரத்தை மறுத்தன. கிழக்கு மாகாணத்தின் பெரும்பான்மையான பகுதிகளை தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக உறுதி செய்தன.

யாழ்ப்பாணம் பலாலிக் கோட்டையிலுள்ள ராணுவ முகாமை முற்றுகையிட்டு பீரங்கிகளால் தாக்கி வருகின்றனர், புலிகள். முற்றுகையை தகர்ப்பதற்காக யாழ் நகர் மீது நாபாம் - தீக்குண்டுகள் வீசுகிறது, சிங்களப் படை.

இந்த யுத்தத்தில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளானார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் என்று அதிகாரப் பூர்வமற்ற தகவல்கள் கூறுகின்றன. சிங்கள ராணுவத்தினர் 100 பேரும் புலிகள் 250 பேரும் கொல்லப்பட்டதாக அரசு கூறுகிறது. பேடித்தனமாக, பழி தீர்க்க கொழும்பு நகரில் 20க்கும் மேறபட்ட தமிழக இளைஞர்களை சிங்கள ராணுவம் உயிரோடு எரித்தது. அங்கு நூற்றுக்கணக்கான தமிழர்களை கைது செய்து ராணுவ முகாம்களுக்கு இழுத்துச் சென்றது. தமிழ் சிங்கள, முஸ்லீம்களை வெட்டிப்போட்டு இனக்கலவரங்களை உசுப்பிவிட்டது. இதனால் பீதியில் தமிழீழ அகதிகள் தமிழகத்தை நோக்கி பெருவாரியாக வந்து கொண்டிருக்கின்றனர்.

இனி போர் நிறுத்தமே இல்லை. கிரிமினல் கும்பலை (புலிகள்) அழிக்கும் வரை ஓய மாட்டோம் என்று இலங்கை நாடாளுமன்றத்தில் சர்வக்கட்சி உறுப்பினர்களின் கைத்தட்டலுக்கிடையே முழங்கினார், ராணுவ மந்திரி ரஞ்சன் விஜயரத்னே. மேற்கு ஐரோப்பிய நாடுகளிடமும் பாகிஸ்தான் இஸ்ரேலிடமும் ராணுவ உதவி கேட்டுள்ளார் பிரேமதாசா.

● ○ ●

7 ஆண்டுக்கும் மேலாக துப்பாக்கி குண்டுகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் வாழ்நிலையோ சின்னாபின்னமாகிக் கிடக்கிறது '83-ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து எதற்காக அவர்கள் தங்கள் உயிரையும் உடமையையும் இழந்து போரிடுகிறார்களோ அதற்கான பாதையிலிருந்து மீண்டும் மீண்டும் பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள்.

தமிழீழ விடுதலையை சாதிக்கப் போவதாக ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் ஆதிக்கத்தின் சின்னங்களாகவோ துரோகிகளாகவோ மாறின. அவ்வியக்கங்கள் சகல சக்திகளையும் தங்களது போராட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்வது என்ற சந்தர்ப்பவாத சகதியில் இந்திய அரசின் பாசிச கும்பலிடமும் தமிழகப் பிழைப்புவாதிகளான திராவிடக் கட்சிகளிடமும் கைக்கோர்த்துக் கொண்டன.

இந்திய பாசிச கும்பலுக்கு விசுவாசமாக இருந்து மாற்று இயக்கங்களையும், ஜனநாயக சக்திகளையும் குரூரமாக அழித்தன. இயக்கங்களுக்குள்ளே ஜனநாயகம் கோருபவர்களையும் தலைமைக்கு எதிராக புகார் கூறுபவர்களையும் படுகொலை செய்தன. அனைத்து இயக்கங்களுக்கு மத்தியில் விடுதலை புலிகள் சர்வாதிகார முறையில் தனது தலைமையை திணித்து தக்கவைத்துக் கொண்டது. ஜனநாயக மறுப்பை நிறுவனமயமாக்கியது. இதன் விளைவாய் மிக விரைவில் சந்தர்ப்பவாத தலைமையாகவும் பாசிசத்தையும் அராஜகத்தையும் வழிமுறையாகக் கொண்ட அமைப்பாக மாறியது.

இந்திய ஆக்கிரமிப்பாளர்கள், துரோகிகள் தயவில் வளர்ந்தது: பாசிச ராஜீவ் கும்பலிடம் ரகசிய பேரங்களையும், பாசிச எம்.ஜி.ஆரிடம் ரகசிய உதவிகளையும் பெற்றது. இந்திய உளவுபடை 'ரா'விடம் பயிற்சியும் ஆலோசனையும் பெற்று சொந்த மக்களையே கொன்று பீதியூட்டியது. இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்தை எதிர்த்து யுத்தம் புரிந்தபோது கூட தானே தமிழீழத்தின் ஏகபோக குத்தகைதாரனாக இருந்து மற்ற இயக்கங்களை ஒடுக்கியது.

இதனால், இந்திய ராணுவம் மிகப் பெரும் அளவில் தமிழீழ மக்களை படுகொலை செய்யவும் ஒடுக்கவும் மறைமுகமாக பாதை அமைத்துக் கொடுத்தது. இந்திய ராணுவம் வெளியேறிய பிறகும் ஆகப் பெரும்பான்மையான தமிழீழ உழைக்கும் மக்களின் நல்வாழ்வில் கவனம் செலுத்தவில்லை, புலிகள் தலைமை. அதேசமயம் சிங்கள அரசுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் போட்டுக் கொண்டு துரோக அமைப்புகளுக்கு எதிராக தாக்குதலுக்கு தயாராவதாக கூறியது.

இப்படி தனது அதிகாரத்தை பாதுகாக்கும் விழிப்புணர்வில் 10-ல் ஒரு பங்கு கூட மக்களின் புனர்நிர்மாண வேலையிலோ, பொருளாதார மேம்பாட்டிலோ அக்கறை

படிப்பகம்

www.padippakam.com

கொள்ளவில்லை. பதுக்கல், கந்துவட்டி வர்த்தக சூதாடிகள், உள்ளூர் நிலப்பிரபுக்கள், ஆதிக்க சக்திகள் மக்களை ஒடுக்கி சுரண்டுவதை புலிகள் கண்டுகொள்ளவேயில்லை.

மாறாக அவர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களின் சுரண்டலுக்கேற்ப அவர்களிடம் வரி வசூலித்து தனது கஜானாவை நிரப்பிக் கொண்டது. சிறு பெட்டிக்கடை வியாபாரிகளிடம் மாதம் ஒன்றுக்கு ரூ.600 பெரிய நிறுவனங்களிடம் மாதம் ரூ.15,000 பேருந்து ஒன்றுக்கு பேருந்து முதலாளிகளிடம் மாதம் ரூ.15,000, சிறு விவசாயிகளாக இருந்தால்கூட போகத்திற்கு 1000 ரூ. என்று வசூலிக்கின்றனர். இப்படியாக சாராயத்திலிருந்து சிகரெட் வரை வரி பெற்றனர்.

சொந்த மக்களை ஒடுக்கும் அரசை எதிர்த்து போராடும் அமைப்புகள் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வரி வசூலிப்பது தவிர்க்க முடியாததும் தேவையானதும் ஆகும். ஆனால் ஒடுக்குமுறைக்குள்ளான தமது சொந்த மக்களின் வேதனைகளைக் குறைப்பதில் அக்கறையோடும் கவனமாகவும் பரிவோடும் கவனித்து போராடும் அமைப்புகள் செயல்பட வேண்டும்.

''மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ அல்லது ஒரு துண்டு நூலையோ எடுக்காதீர்கள்'' என்று தமது தோழர்களுக்கு அறிவுறுத்தி நடைமுறைப்படுத்தியது மாவோ தலைமையிலான சீன செஞ்சேனை. ''மக்கள் திரளின் நல்வாழ்வில் - நிலப்பிரச்சினை, உழைப்புப் பிரச்சினை முதல் விறகு, அரிசி, சமையல் எண்ணெய், உப்பு வரையில் நாம் ஆழ்ந்த அக்கறை செலுத்த வேண்டும்.... மக்களின் நல்வாழ்வு சம்பந்தமான இப்பிரச்சினைகள் எல்லாம் நமது நிகழ்ச்சிநிரலில் வைக்கப்பட வேண்டும்...'' என்பதை உறுதியாகப் பற்றி நிற்க வேண்டும். கட்டுப்பாடு, சிக்கனம், நாணயம், நேர்மை இவற்றில் முன்னுதாரணமாகத் திகழ்ந்து வரி வசூலிப்பது முதல் மக்களின் அனைத்து சுமைகளையும் குறைப்பதற்கு விடுதலைக்கான அமைப்புகள் தொடர்ந்து பாடுபட வேண்டும்.

ஆனால் புலிகள் அமைப்போ, தமது மக்களை சொல்லொணா துன்பத்தில் உழலும் போது, இயக்கத்தேவைக்கு மட்டுமல்ல; தங்கள் சொந்த தேவை அனைத்திற்கும் இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன ஆடம்பரத்தையே நாடுகிறது. தலைவர்கள் அணிந்து கொள்ளும் ஜீன்ஸ் உடையிலிருந்து தங்கும் ஐந்து நட்சத்திர குடில்வரை ஊதாரித்தனம் மினுக்கிறது! டப்பியில் அடைக்கப்பட்ட விலையுயர்ந்த குளிர்பானங்கள், பால், இறைச்சி, சாக்லெட், சிகரெட் என்றும் இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன மாடல் கார்களிலும் அவர்கள் பயணம் செய்கிறார்கள்.

40 ஆண்டுக்கு மேலாக தோளில் துப்பாக்கியேந்தி போராடிய வியட்நாம் கம்யூனிஸ்டுகள் செருப்புகூட இல்லாமல் மரப்பட்டைகளை அணிந்து, கிழிந்த ஒட்டுப் போட்ட உடைகளுடன் போரிட்டார்கள். அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிக் கொண்டே மறுபுறம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கு மாடாக உழைத்தார்கள்.

தங்கள் வசமிருந்த விடுதலைப் பிரதேசங்கள் மீது எதிரி பலமுறை தாக்கிய போதும் நிலச்சீர்திருத்தங்களை தொடர்ந்து அமுல்படுத்தினார்கள். கைப்பற்றிய பிரதேசங்களின் உள்ளூர் அதிகாரத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கமிட்டிகளிடமும் விவசாயிகள் கமிட்டிகளிடமும் உடனடியாக ஒப்படைத்தனர்.

ஆனால், 'சோசலிச' தமிழீழம் என்பதே தங்கள் இறுதி லட்சியம் என்று கூறிய புலிகள் தலைமையோ தங்கள் கட்டுப்பாட்டிலிருக்கும் தமிழீழ பகுதிகளில் உழைக்கும் மக்களுக்கு சாதகமான பொருளாதாரத் திட்டத்தை அமுல்படுத்தவில்லை. நில விநியோகம், மக்கள் கமிட்டிகளிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது மருந்துக்கும் நடைபெறவில்லை. மாறாக, உள்ளூர் ஆதிக்க கும்பலிடமும் வர்த்தக சூதாடிகளிடமும் மக்கள் விரோதிகளிடமும் நெருக்கமானார்கள். அவர்களின் ஒடுக்குமுறை, சுரண்டல், மக்கள் விரோதச் செயல்களை அங்கீகரித்தனர். அவர்களைப் பாதுகாத்து பங்கும் வாங்கியது புலிகள் தலைமை. தமிழீழ மக்களிடமல்ல ஆயுதம் தாங்கிய விசுவாசிகளிடம் தான் அதிகாரத்தை ஒப்படைத்தது. துரோகிகளிடம் மட்டுமல்ல; துப்பாக்கி முனையில் மக்களிடமிருந்தும் அதிகாரத்தை பறித்தது. தீராத உள்நாட்டு யுத்தத்தைக் காரணம் காட்டி சிங்கள அரசு போலவே தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள தமிழீழ பகுதகளில் ஜனநாயக மறுப்பை நிறுவன மயமாக்கியது.

இவையெல்லாம் நாம் புலிகள் மீது இட்டுகட்டும் அவதூறு அல்ல. தமிழீழத்தில் யுத்தத்தில் ரத்தம் சிந்திக் கொண்டிருக்கும் புலிகளை இப்போது விமர்சிப்பதா? என்னும் கூலிப் பிரச்சாரகர்களின் முதலைக் கண்ணீர் வெறும் பிழைப்புவாதம்தான்! புலிகளின் ஜனநாயக விரோத தன்மையையும் அவர்களுடைய குட்டி முதலாளித்துவ பண்புகளையும் சுட்டிக்காட்டி விமர்சிக்க நமக்கு முழு உரிமையும் அருகதையும் உண்டு.

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதிலும், தோள் கொடுப்பதிலும் நாம் எவருக்கும் சளைத்தவரல்ல. தமிழீழத்தின் விடுதலையை சாதிக்கப் போவதாக ஆயுதம் தாங்கிய அமைப்புகள் துரோகிகளாகவும் ஆதிக்கத்தின் சின்னங்களாக மாறுவதும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கம் என்பதை எச்சரிப்பது போராடும் தமிழீழ மக்களுக்கு நாம் செய்யும் கடமையாகும். தமிழீழ மக்கள் தொடர்ந்து ரத்தம் சிந்துவதும், உயிர் தியாகம் செய்வதும் இன ஒடுக்குமுறையிலிருந்து மீள்வதற்குத் தானேயன்றி மீண்டும் ஆதிக்க தளையில் வீழ்வதற்கல்ல!

இன்று சிங்கள அரசு ராணுவ ரீதியில் கைமேலோங்கி தமிழீழ மக்களைக் கொன்று குவிப்பதற்கு அதன் ராணுவ பலம் மட்டும் காரணம் அல்ல; புலிகள் தலைமை பின்பற்றிய ஜனநாயக மறுப்பும், நிறுவன மயமாக்கலும் முக்கிய காரணம். இன்று இளம் சிறுவர்களை புலிகள் தமிழீழ போராட்டத்திற்கு முன்னணிப் படையாகப் பயன்படுத்தும் நெருக்கடிக்கு காரணம் சிங்கள, இந்திய ராணுவங்கள் தமிழீழப் போராளிகளை கொன்று குவித்தது மட்டுமல்ல; புலிகள் தலைமையும் தம் பங்குக்கு ஜனநாயக இயக்கங்களையும் அதன் போராளிகளையும் வேரறுத்ததும் ஒரு காரணம்.

மறுபுறம் சகோதர ஆதரவளித்த தமிழக மக்களைச் சார்ந்து நிற்காமல், பிழைப்புவாத தமிழகத் தலைவர்களிடம் கைகோர்த்து கொண்டனர். இன்று தமிழக மக்களின் புலிகள் எதிர்ப்புக்கும், தமிழீழ போராட்டத்தைப் பற்றியான மௌனத்திற்கும், முக்கிய காரணம் பிழைப்புவாத தலைவர்கள் தங்கள் தேவைக்கேற்ப ஈழப் போராட்டத்தை அணுகுவதுதான். எனவே, தமிழீழ மக்கள் ரத்தத்தின் மூலம் பெறப்பட்ட இந்த அனுபவத்தை படிப்பினையாகக் கொள்ள வேண்டும். அவர்கள் சிங்கள அரசின் ஆதிக்க வெறியை எதிர்த்து போராடுவதன் கூடவே, அதற்கு சற்றும் குறைவில்லாமல் புலிகளின் சந்தர்ப்பவாதத்தையும், பாசிச, அராஜக வழிமுறைகளையும் எதிர்த்து போராட வேண்டும். தமிழீழ ஜனநாயக சக்திகளின் வளர்ச்சிக்கும் போராட்டத்திற்கும் தோள் கொடுக்க வேண்டும். இந்த வளர்ச்சியில்தான், இந்த பாதையில் தான் தமிழீழ மட்கள் சிங்கள அரசின் இன ஒடுக்குமுறைக்கும் ஆதிக்கத்திற்கும் முடிவு கட்ட முடியும்.

● குணசேகரன்.

**சிங்கள ராணுவத்தை எதிர்த்து ஈழ தமிழ் சிறுவர்கள்!**



படிப்பகம்

www.padippakam.com

ரஷிய மாற்றங்கள் பற்றி 'மார்க்சிஸ்டு'களின் நிலைப்பாடு

# மீனுக்குத் தலை! பாம்புக்கு வால்!

ரஷியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி கடந்த மே மாத இறுதியில் மத்தியக் கமிட்டி கூட்டத்தை நடத்தி 'மார்க்சிஸ்டுகள்' தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர். அத்தீர்மானம் ஜூன் 16, 17, 18 தேதிகளில் தீக்கதிர் நாளேட்டில் வெளிவந்துள்ளது.

இந்நாடுகளின் நிகழ்ச்சிப் போக்கு குறித்து இதர வெளிநாட்டு 'கம்யூனிஸ்ட்' கட்சிகளுடன் விவாதித்து, ஆழமான ஆய்வை மேற்கொண்டு இத்தீர்மானத்தை வெளியிட்டுள்ளதாக அவர்கள் பெருமைப் பட்டுக் கொள்கிறாகள். ஆனால் இந்நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கான அரசியல், பொருளாதார, சமூக அடிப்படைகளைப் பற்றி வாயே திறக்காமல், ஆழமான ஆய்வு எதுவுமே இல்லாமல், வழக்கம் போலவே சந்தர்ப்பவாத முடிவுகளையே எடுத்துள்ளனர்.

1960களில் குருச்சேவ் தலைமையிலான ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சி நவீனத் திரிபுவாதமாகி விட்டது என்று இந்த 'மார்க்சிஸ்டுகள்' போட்ட தீர்மானத்தைத்தான் மீண்டும் நிறைவேற்றியுள்ளனர்.

வெளிநாடுகளுக்கு நேரில் சென்று உண்மை ஆதாரங்களுடன் ஆய்வு நடத்தியதாக அணிகளை ஏய்ப்பது, தாங்கள் எப்போதுமே சரியான நிலைப்பாடு எடுத்து வந்துள்ளாதாக காட்டிக் கொள்வது, மார்க்சிய சொற்றொடர்களைப் போட்டு நீண்ட நெடிய கட்டுரை எழுதி அணிகளை பிரமிக்க வைப்பது, அரசியல் - சித்தாந்த ரீதியாக கறாராக எந்த முடிவும் இல்லாமல் இதுவும் சரி; அதுவும் சரி என்ற மழுப்பல்களையே முடிவாக்குவது என்கிற தமது பாரம்பரிய சந்தர்ப்பவாத நிலையிலிருந்து சிறிதும் மாறாமல் இத்தீர்மானத்தை வெளியிட்டுள்ளனர்.

முதலாவதாக, "சோசலிச நாடுகளின் நிகழ்ச்சிப் போக்குகள்" என்று தலைப்பிட்டு வெளியாகியுள்ள இத்தீர்மானத்தில் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள 'சோசலிச' நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றிய ஆய்வு எதுவுமே இல்லை. நடைபெறவுள்ள ரஷிய 'கம்யூனிஸ்ட்' கட்சியின் 28வது காங்கிரசின் நகல் அறிக்கையை எடுத்துக் கொண்டு அதன் மீதான கருத்துக்கள் - விமர்சனங்களாகவே இத்தீர்மானம் உள்ளது.

இரண்டாவதாக, ரஷிய கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களை எதிர்த்து சாடிவரும் கியூபாவைப் பற்றியும், சீன மாற்றங்கள் பற்றியும் இத்தீர்மானம் கருத்து எதுவும் கூறவில்லை அதேபோல அல்பேனியா, வட கொரியா பற்றியும் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அது ஒருபுறமிருக்கட்டும். கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் பற்றி அவர்களின் நிலைப்பாடு என்ன? "கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தற்போது நடந்து வரும் நிகழ்ச்சிப் போக்குகள் உலக சோசலிசத்திற்கு மிகப் பெரும் பின்னடைவாக அமைந்துள்ளன. சோவியத் யூனியனில் நடந்து வரும் நிகழ்ச்சிப் போக்குகளை - கம்யூனிஸ்டுகள் மற்றும் சோசலிசத்தின் ஆதரவாளர்கள் அனைவருக்குமே ஆழ்ந்த கவலையையும் தீவிர அக்கறையையும் உருவாக்கக்கூடிய ஒன்றாக அமைந்துள்ளன" என்பதையே திரும்பத் திரும்ப குறிப்பிடுகிறார்களே தவிர, இந்த மாற்றங்கள் முதலாளித்துவப் பாதைக்கானதா, இல்லையா? இந்த நாடுகள் இன்னமும் சோசலிச நாடுகள்தானா? என்று தெளிவாக எங்குமே குறிப்பிடவில்லை.

அவர்களின் கூற்றுப்படியே "சோவியத் யூனியனில் ஜனநாயகத்தையும், அரசியல் சீர்திருத்தங்களையும் விரிவுபடுத்துவது என்ற பெயரில் சோசலிசத்தின் கடந்த காலத்தைக் கண்டனம் செய்வது, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை சிறுமைப்படுத்துவது மற்றும் முதலாளித்துவ ஜனநாயகத்தைப் பெருமைப்படுத்துவது போன்ற ஆழமாக வேர்விட்டிருக்கும் போக்குகள் வளர்ந்துள்ளன... சோசலிஸ்ட் புரட்சி சாதித்த சாதனைகளையே பகிரங்கமாக இழிவுபடுத்தும் வகையிலே சோவியத் யூனியனில் எழுதப்படுகிறது. கிளாஸ்னாஸ்த் என்ற பெயரில் சோசலிச எதிர்ப்பு மற்றும் மார்க்சிய எதிர்ப்புப் பிரச்சாரம் தழைத்தோங்கி வருகிறது. கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயே பல்வேறு மேடைகள் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. சந்தைப் பொருளாதாரம் ஆதிக்கமடைந்து வருகிறது. தனியுடைமை சமூக உடைமையுடன் சம அந்தஸ்தில் போட்டியிடுகிறது."

ஆனாலும் ரஷியாவும், இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சோசலிச நாடுகள் தான், அவற்றிலே அளவுரீதியாக சில விலகல் போக்குகள், தவறுகள் நடந்துள்ளன என்கின்றனர். "இத்தகைய தோல்விகளையும் பின்னடைவுகளையும் முறையாகப் புரிந்து கொண்டு சரியான படிப்பினை பெறவேண்டும்; திரிபுகளுக்கும் சிதைவுகளுக்கும் எதிராக மார்க்சிய - லெனினிய பதாகையை உயர்த்திப் பிடிக்க வேண்டும்" என்று தமது சகோதர கட்சிகளுக்கு ஆலோசனை கூறுகிறார்கள்.

சரி; தவறுகளும் விலகல்களும் ஏன் ஏற்பட்டன? யார் காலத்தில் இவை நடந்தன? இதற்கு யார் பொறுப்பு? என்று தீர்க்கமான எந்த முடிவுமின்றி "இந்நாடுகளில் ஏற்பட்ட முடக்கு நிலையை நீக்க சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்று பொத்தாம் பொதுவாகக் கூறிவிட்டு நழுவிக் கொண்டுள்ளனர்.

ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு ரஷ்யாவில் கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றிய குருச்சேவ் கும்பல் 1960களில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தைப் பிளவுபடுத்தியது. அப்போது குருச்சேவின் கொள்கைகள் நவீனத் திரிபுவாதக் கட்சியாகி விட்டது என்றும் இந்த 'மார்க்சிஸ்டு'கள் கட்சி தீர்மானம் போட்டது ஆனால் மார்க்சிய - லெனினியக் கடசி தோன்றிய பிறகு, ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போது இந்த 'மார்க்சிஸ்டுகள்' தமது பழைய தீர்மானத்தை சத்தமின்றி மாற்றிக் கொண்டு ரஷ்யக் கட்சி திரிபுவாதக் கட்சி அல்ல, புரட்சிக் கட்சி என்று 'தோழமை' உறவு பூண்டது.

லெனினும் ஸ்டாலினும் கட்டியமைத்த சோசலிசக் கட்டமைப்பை துரோகி குருச்சேவும் பிரேஷ்னேவும் உடைத்தெறிந்து முதலாளித்துவ மீட்சியை துவக்கி வைத்தபோது அதை சோசலிச வளர்ச்சிக்கான நடவடிக்கையாக இப்போலிகள் சித்தரித்தனர். இன்று பிரஷ்னேவின் கொள்கைகளை பகிரங்கமாக எதிர்த்து'முதலாளித்துவத்தைஅம்மணமாக அரங்கேற்றிவரும் கோர்பியின் கொள்கைகளையும் சோசலிசம் என்று நியாயப்படுத்துகின்றனர். அவர்களுக்கு ஸ்டாலினும் தோழர்! ஸ்டாலினை எதிர்த்து மூர்க்கமாக வசைபாடும் கோர்பச்சேவும் தோழர்!

இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகளைப் பொருத்தவரை அவர்களது ரஷிய குருபீடத்தில் என்ன மாற்றம் நடந்தாலும் எல்லாமே சோசலிசம் என்பதுதான் ஒரே நிலைப்பாடு.




படிப்பகம்

www.padippakam.com

இதிலே 'மார்க்சிஸ்டுகள்' மட்டும் தாம் ஏதோ வேறுபட்ட சரியான நிலைப்பாடு வைத்திருப்பதாக காட்டிக் கொண்டு மற்றவர்களை விமர்சிப்பது வாடிக்கை. அதே பாணியில்தான் இப்போதும் நிலைப்பாடு எடுத்துள்ளார்கள். அதாவது கோர்பி கொண்டு வந்துள்ள அரசியல் பொருளாதார சீர்திருத்தங்கள் மிகச் சரியானவை; அவசியமானவை. ஆனால் 'அதைக் கடைபிடிக்கும் முறையில் தவறுகள் உள்ளன. சோசலிச அமைப்புக்கு தீங்கு விளைவிக்குமோ என்ற அச்சம் எழுந்துள்ளது' என்ற அடிப்படையில் கோர்பியின் முதலாளித்துவ மீட்சிக்கான கொள்கைகளை அப்படியே ஆதரித்துவிட்டு. அதை எதிர்த்து விமர்சிப்பது போல நாடகமாடுகின்றனர்.

மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் இத்தகைய கடைகோடி சந்தர்ப்பவாத நிலைப்பாடு அவர்களுக்கு இன்னொரு வகையில் அவசியமாக உள்ளது. முதலாளித்துவ மீட்சிக்கான வேகமான நிகழ்ச்சிப் போக்குகளின் விளைவாக நாளை ரஷியாவிலேயே 'கம்யூனிஸ்ட்' கட்சி கலைக்கப்படலாம். நடைபெறவுள்ள ரஷிய கட்சியின் 28வது காங்கிரசை ஒட்டி மார்க்சிய - லெனினியத்தை வழிகாட்டும் கோட்பாடாக ஏற்பதா. வேண்டாமா என்று நகல் தீர்மானத்தில் மீது சூடேறிய விவாதங்கள் ரஷிய 'கம்யூனிஸ்டு'களிடையே நடக்கின்றன. அப்படி ஏதாவது 'விபரீதம்' நடந்துவிட்டால் என்ன செய்வது? நேற்றுவரை ரஷியாவை சோசலிச நாடு என்று ஏய்த்தீர்களே என அணிகளும் மக்களும் காறி உமிழ்ந்தால் என்ன செய்வது என்ற பீதியில், தொலைநோக்குப் பார்வையுடன் பச்சோந்தித் தனத்தையே தமது நிலைப்பாடாக அறிவித்துள்ளனர்.

ரஷியாவில் கோர்பி கும்பலின ஆட்சி தொடர்ந்து நீடித்தால், நாங்கள் அன்றே அவரது சரியான கொள்கைகளை ஆதரித்தோம் என்று காட்டமுடியும். கோர்பி ஆட்சி கவிழ்ந்து முதலாளித்துவவாதிகள் வெற்றி பெற்றால், நாங்கள் அன்றே கோர்பியின் கொள்கையில் உள்ள கோளாறுகளைச் சுட்டிக்காட்டினோம் என்றும் கூறமுடியும். இத்தகைய 'டு-இன்-ஒன்' கொள்கையின் மூலம், தாங்கள் எப்போதும் சரியான நிலைப்பாடு எடுத்துள்ளதாக அணிகளையும் மக்களையும் ஏய்க்க முடியும்.

இதே போலத்தான் ருமேனியாவில் போலி சோசலிச சர்வாதிகாரி சியெசெஸ்கூ ஆட்சி கவிழும் வரை அதை சோசலிச நாடாக சித்தரித்தனர். ருமேனிய 'கம்யூனிஸ்ட்' கட்சி மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பிய 'மார்க்சிஸ்டு' பிரதிநிதிகள் அங்கே சோசலிசம் பூத்துக் குலுங்குவதாக புகழ் பாடினர். சியெசெஸ்கூ தூக்கியெறியப்பட்டதும், கூட்டத்தோடு சேர்ந்து கோவிந்தா போட்டுக் கொண்டு நாங்கள் அன்றே சொன்னோம்; ருமேனிய கட்சியிலும் ஆட்சியிலும், சோசலிச விலகல் போக்குகள் உள்ளதென்று அன்றே தீர்மானம் போட்டோம் என்றனர். அதே உத்தியோடுதான் இப்போதைய தீர்மானமும் சந்தர்ப்பவாதமாக உள்ளது. அதில் மருந்துக்குக்கூட மார்க்சிய லெனினியக் கண்ணோட்டம் இல்லை.

● மனோகரன்

## ஈசன் குரூப் நிறுவனம்

# 14 வருட அடக்குமுறை! தொடரும் போராட்டம்!

"ஆசியாவிலேயே சிறந்த நிர்வாகம் கொண்டது ஈசன் நிறுவனம். அவசர நிலை காலத்தில் தொழிலாளர்கள் அரிசி கிடைக்காமல் அவதியுற்ற பொழுது ஆந்திராவிலிருந்து அரிசியை தருவித்து தொழிலாளர்களுக்கு வழங்கியது கருணையுள்ளம் படைத்த ஈசன் நிறுவனம்'' என தொழிசங்க பிழைப்புவாதியும், ஈசன் நிர்வாகத்தின் விசுவாசியும் நெருங்கிய நண்பருமான குசேலர், ஈசன் நிர்வாகத்தையும் அதன் முதலாளியையும் வானளாவ புகழ்ந்தார். 1976ல் அவசர நிலை காலத்தில் இதே ஈசன் நிர்வாகம் தான் தனது கிளை நிறுவனம் ஒன்றை இழுத்து மூடி 83 தொழிலாளர்களை வீதிக்கு விரட்டியது. அன்றிலிருந்து இன்றுவரை அதற்கு எதிராக போராடும் தொழிலாளர்களை நயவஞ்சகமாக ஒடுக்கி வருகிறது 'கருணையுள்ளம் படைத்த' ஈசன் நிர்வாகம்.

பலகோடி ரூபாய் பெறுமான மின்சார டிரான்ஸ்பார்மர்களை உற்பத்தி செய்து மத்திய - மாநில அரசுகளுக்கும் தனியார்களுக்கும் சப்ளை செய்துவரும் நிறுவனம் சென்னை திருவொற்றியூரில் உள்ள ஆக்பிரிட்ஜ் எவிட்டிக் அண்டு ஈசன் நிறுவனம்.

1966ல் இந்நிறுவனம் தனது கிளை நிறுவனம் ஒன்றை திருவொற்றியூரில் தொடங்கியது. பத்தாண்டுகளுக்குள் அவசரநிலை காலத்தை பயன்படுத்தி இந்நிறுவனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி தனது கிளை நிறுவனத்தை இழுத்து மூடியது. இதன் விளைவு, நிரந்தரமாக வேலை செய்த 83 தொழிலாளர்களும் வேலையிழந்து வீதிக்கு வீசப்பட்டனர்.

அவசரநிலை காலத்திலும் ஈசன் நிர்வாகத்தின் அநியாயமான வேலை நீக்கத்திற்கு எதிராக, தாய் நிறுவனத்தில் வேலை செய்த தொழிலாளர்கள் அனைவரும் தமது சக தொழிலாளர்களுக்கு ஆதரவாக வர்க்க உணர்வோடு ஒன்றுபட்டு குரல் கொடுத்தனர். குசேலர் தலைமையிலான தொழிற்சங்கத்தின் கீழ் அணிதிரண்டு நிர்வாகத்தின் செயலைக் கண்டித்து வேலை நிறுத்தம் செய்தனர். ஊர்வலம், தர்ணா என போராட்டம் தொடங்கி, தொடர்ந்து எதிர்ப்பு குரல் கொடுத்தனர்.



தொழிலாளர்களில் கருங்காலிகளைப் பயன்படுத்தி சதிச் செயலில் இறங்கியது நிர்வாகம். கருங்காலிகளைக் கொண்டு சக தொழிலாளர்களின் குடும்பங்களை மிரட்டி நிர்வாகத்திற்கு ஆதரவாக ஆள் சேர்த்தது. பத்து, இருபது பேரை வைத்து நிர்வாகத்தை - ஆலையை இயக்கியது. ஆனாலும், நிர்வாகத்தின் சதியை முறியடித்து தொழிலாளர்களின் போராட்டம் தொடர்ந்தது. இருந்தும் பிழைப்புவாதி குசேலர் தலைமையினால் தொழிலாளர்களின் போராட்ட உணர்வு சட்டவாத - பொருளாதாரவாத சகதிக்குள்ளேயே முடக்கப்பட்டது. சரியான அரசியல் தலைமையில்லாத காரணத்தினால் போராட்டத்தை இழுத்தடித்து பிசுபிசுக்கச் செய்யும் நிர்வாகத்தின் நோக்கம் நிறைவேறியது. தொடர்ந்து 6 மாத காலமாக போராடியும் எந்த முடிவுமில்லாமல் போராட்டம் நீண்டு கொண்டே சென்றதால் தொழிலாளர்கள் உறுதியிழந்து படிப்படியாக வேலைக்கு திரும்ப ஆரம்பித்தனர். எனவே போராடி வந்த சுமார் 120 தொழிலாளர்களும் தொழிற்சங்க பொதுக்குழுவை 'கூட்டி போராட்டத்தைக் கைவிடுவது என முடிவெடுத்து நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தினர்.

வேலை நிறுத்தத்திற்குப் பிறகு வேலைக்குச் சென்ற தொழிலாளர்களை தினம் பத்து பேராக தேர்ந்தெடுத்து வேலைக்கு சேர்த்துக் கொண்டது நிர்வாகம். பழைய, புதிய தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் போராடிய முன்னோடிகளான 22 பேரை மட்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள மறுத்து சட்டவிரோதமாக வேலை நீக்கம் செய்து பழிவாங்கியது. இவர்களில் 5 பேரை விலைக்கு வாங்கி இவர்களிடம் 'தாங்களே வேலையை விட்டு விலகி விட்டதாக' எழுதி பெற்றுக்கொண்டு கணக்கு முடித்தது.

ஆனாலும், எஞ்சியுள்ள 17 தொழிலாளர்களும் உறுதியோடு தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்தனர்: 1983 ஆம் ஆண்டு இவர்கள் நிர்வாகத்திற்கு எதிராக வழக்கு தொடுத்தனர். இவர்களுக்கு எதிராக நிர்வாகமே வழக்கை உச்ச நீதிமன்றம் வரை கொண்டு சென்றும் தோல்வியையே தழுவியது; தொழிலாளர்கள் வெற்றியடைந்தனர். 'தொழிலாளர்கள் 17 பேரையும் தொடர்ச்சி

படிப்பகம்

www.padippakam.com

யான சர்வீசுடன் வேலைக்கு எடுக்க வேண்டும். வேலை நிறுத்த காலத்திற்கும் சேர்த்து மொத்தமாக சம்பளம் தரவேண்டும். தொழிலாளர்களுக்குரிய வசதிகள், சலுகைகள் அனைத்தும் வழங்கவேண்டும்' என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இன்றுவரை நீதிமன்ற தீர்ப்பு அமுல்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் இவர்களில் 2 பேர் வறுமையின் காரணமாக இறந்துவிட்டனர். இரண்டு பேர் பணிக்காலம் முடிந்து ஓய்வு பெற்றதாக நிர்வாகம் கூறிவிட்டது. இதே போல் 1976ல் வெளியேற்றப்பட்ட 83 தொழிலாளர்களில் பலரும் அவர்களது குடும்பத்தினரும் கடன் தொல்லையில் - வறுமையில் வாடுகின்றனர். 14 வருட காலமாக இந்நிலை இவர்களுக்கு தொடர்ந்தும் எந்த தொழிற்சங்கத் தலைமையும் நிர்வாகத்திற்கு எதிராக வாய்கூட திறக்கவில்லை.

ஈசன் நிர்வாகம் தற்போது தொழிற்சங்கங்கள் எதையும் அங்கீகரிக்கவில்லை. தி.மு.க.வைச் சேர்ந்த தொழிலாளர்கள் 5 பேர் கொண்ட குழுதான் (வேலை நிறுத்த போராட்டத்திற்குப்பின் வேலைக்கு எடுக்க மறுத்த 22 பேரில் நிர்வாகத்திடம் விலை போன கைக்கூலிகள்) 'அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கமாக' அனைத்தையும் தீர்மானிக்கிறது. 1976-லிருந்து இன்றுவரை நிர்வாகம், தொழிலாளர்களுடன் எவ்வித ஒப்பந்தமும் போட்டதில்லை; போனஸ் - கூலி உயர்வு என்று எதுவுமில்லை. அவ்வப்பொழுது நிர்வாகம் பிச்சை போடுவது போல ஐந்தோ, பத்தோ சம்பளம் உயர்த்தி கொடுத்து தொடர்ந்து ஏய்த்து வருகிறது.

பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிரானவாகள் என்று மார்தட்டிக் கொள்ளும் கருணாநிதியின் 'சூத்திர' அரசோ; ஈசன் மற்றும் டி.வி.எஸ் போன்ற பார்ப்பன முதலாளி குடும்பங்களுடன் கைகோர்த்துக் கொண்டு தொழிலாளர்களின் போராட்டத்தை ஒடுக்கி வருகிறது.

தற்பொழுது 14 வருட காலமாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கடந்த ஏப்ரல் மாதம் முதல் மீண்டும் போராட தொடங்கியுள்ளனர். ஏப்ரல் 6 அன்று சென்னை சிதம்பரம் ஸ்டேடியம் அருகில் தர்ணா போராட்டம் நடத்தினர். மே 12ந் தேதி அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகளுக்கும் ஆதரவு கோரி அழைப்பு விடுத்து பொதுக்கூட்டம் நடத்தினர்.

கடந்த பல ஆண்டுகளாக ஓட்டுக் கட்சிகளின் துரோகத் தொழிற்சங்கங்களின் கீழோ, பிழைப்புவாத தொழிற்சங்கங்களின் கீழோ அணிதிரண்டு போராடி தொடர்ந்து மாறி மாறி தோல்வியையே சந்தித்த தொழிலாளர்கள் விரக்தி அடைந்திருக்கின்றனர். மீண்டும் இத்தொர்ழிற் சங்கங்களில் இருந்து எந்தவிதத்திலும் மாறுபடாத அரசியலற்ற தொழிற்சங்கங்கள் மற்றும் டிராஸ்ட்கியவாதிகள், தன்னார்வ குழுக்களின் தலைமையை நம்பி மோசம் போகாமல் புரட்சிகர தலைமையின் கீழ் அணிதிரண்டு போராட வேண்டும். ஈசன் நிறுவனத்தின் தொழிலாளர்கள் அனைவரது ஆதரவையும் நாடி புரட்சிகர தொழிற்சங்கம் அமைக்க வேண்டும். ஏனெவில் நிர்வாகம் மற்றும் அரசின் கூட்டுத் தாக்குதல்களை - சதிகளை முறியடிக்கும் வல்லமை புரட்சிகர சக்திகளிடம் மட்டுமே உள்ளது.

---

உழுபவர்களுக்கே நிலம்!
உழைப்பவர்களுக்கே அதிகாரம்!

**விவசாயிகள் விடுதலை முன்னணியின்**
**திருவண்ணாமலை வட்டார முதல் மாநாடு!**

23.6.90 அன்று திருவண்ணாமலை அருகே மங்கலம் கிராமத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வரும் 7.7.90 அன்று காலை 9 மணிக்கு சங்கராபுரத்தில்

**விவசாயிகள் விடுதலை முன்னணியின்**
**கள்ளக்குறிச்சி வட்டார முதல் மாநாடு**

அடுத்து, வரும் 28.7.90 அன்று பட்டுக்கோட்டையில்

**விவசாயிகள் விடுதலை முன்னணியின்**
**பட்டுக்கோட்டை வட்டார முதல் மாநாடு**

அனைவரும் வருக!

ஆதரவு தருக!

இவண்
மாநாட்டு வரவேற்புக் குழு.

---

# தரகு அதிகார முதலாளி ஈசன் குரூப்

ஈசுவர அய்யர் என்ற பார்ப்பன தரகு அதிகார வர்க்க முதலாளியால் 1956-ல் தொடங்கப்பட்ட நிறுவனம்தான் ஆக்பிரிட்ஜ் எட்விக் அண்ட் ஈசன் லிமிடெட். இது ஹெச்.ஹெச்.இ. மின்சார டிரான்ஸ்பார்மர்களையும், குழாய் உருமாற்றியையும் உற்பத்தி செய்து வருகிறது. ஈசுவர அய்யரின் மகன்கள் மற்றும் உறவினர்களை முதலாளிகளாகக் கொண்ட ஈசுவரன் அண்ட் சன்ஸ் இன்ஜினியரிங் லிமிடெட், ஈசன் ரேய்ரோல் ரிலேய்ஸ் அண்ட் டிவைசஸ் லிமிடெட், ஈசன் இன்ஜினியரிங் கோ லிமிடெட் முதலிய பல கிளை நிறுவனங்கள் உருவாகின.

இதில் ஈசன் இன்ஜினியரிங் கோ லிமிடெட், பல வெளிநாட்டு கம்பெனிகளிடமிருந்து மின்கட்டுப்பாடு கேபிள்ஸ், மெஷின் டாட்ஸ் மற்றும் அதன் துணையான உபகரணங்களை வாங்கி இந்திய கம்பெனிகளுக்கு சப்ளை செய்துவரும் ஒரு இடைத்தரகு கம்பெனி. தமது தரகு தொழிலுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, மேற்கு ஜெர்மனி போன்ற பல நாடுகளிலுள்ள பெரிய கம்பெனிகளுடன் தொடர்பு வைத்துள்ளது இந்நிறுவனம்.

- WMW எக்ஸ்போர்ட் அண்ட் இம்போர்ட், பிலிப்ஸ் செய்தி தொடர்பு நிறுவனம் - மேற்கு ஜெர்மனி.
- சுனன் புரடெக்ட்ஸ் கம்பெனி, ஒபெர் டோர்ஃபர், அல்லிஸ் சால்மர்ஸ் கார்ப்பரேசன் - அமெரிக்கா.
- பெர்த்தோல்டு ஹெர்ம்லே கம்பெனி, மார்ச்சினென் ஃபேபரிக் ஃபோர்டி கம்பெனி - பிரான்சு.
- வெல்டிங் ஹவுஸ் எலெக்ட்ரிக், மெசூர்மெண்ட் டெக்னாலாஜி லிமிடெட் - இங்கிலாந்து.
- பொலி எஸ்.பி.ஏ. நிறுவனம், மாக்ரினி கலிலியோ எஸ்.பி.ஏ. நிறுவனம் - இத்தாலி.

— முதலிய வெளிநாட்டு கம்பெனிகளுக்கு தரகர்களாக செயல்படுகிறது ஈசன் முதலாளி குடும்பம்.

ஈசன் முதலாளிக் குடும்பம் தமது வருமானத்திற்கு பிரதானமாக தரகுத் தொழிலேயே சார்ந்து உள்ளது. நாளை ஈசன் நிறுவனத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அது ஈசன் முதலாளி குடும்பத்தை எந்த விதத்திலும் பாதிக்காது என்கிற நிலை உருவாக்கியிருக்கிறது. ஏன் இதையே (ஆலை மூடலை) அவர்கள், தொழிலாளர்கள் போராடும் சமயத்தில் நடைமுறைப்படுத்தி தொழிலாளர்களை அச்சுறுத்துவதற்கும் - பழிவாங்குவதற்கும் உரிய ஒரு கருவியாகவே கையாளத் தயங்காதவர்கள்.

எனவேதான், பொருளாதாரப் போராட்டங்களும், அரசியலற்ற போராட்டங்களும் தொழிலாளர் வர்க்கத்திற்கு விடிவைத் தேடித் தராது. விரிந்த பார்வையுடன் அரசியல் மாற்றத்திற்கான போராட்டங்களையும் முன்னெடுத்துச் செல்லும் போது மட்டுமே தொழிலாளர்கள் தங்கள் விடுதலையை பெற முடியும் என்கிறார்கள் மார்க்சிய - லெனினிய புரட்சியாளர்கள். ஆனால், சி.பி.ஐ. - சி.பி.எம். போலிக் கம்யூனிஸ்டுகளோ இம்முதலாளிகளை தேசிய முதலாளிகள், தேசிய பொருளாதாரத்தைக் கட்டியமைப்பவர்கள் என்றும் இவர்களை தரகு அதிகார வர்க்க முதலாளிகள் என வரையறுக்கும் மா-லெ புரட்சியாளர்களை அமெரிக்காவின் கைக்கூலிகள் என்றும் கூறி வருகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



### தேவாரம் மீனாட்சிபுரம்

# மக்கள் மீது போலீசின் வெறித்தாக்குதல்!

ஜூன் 2ந் தேதியன்று உத்தமபாளைய வட்டத்தைச் சேர்ந்த தேவாரம் மீனாட்சிபுரம் கிராமத்திற்குள் ஒரு பெரிய போலீசு பட்டாளம் நுழைந்தது. கண்ணில் கண்டவர்களை எல்லாம் காட்டு மிரண்டித்தனமாக அடித்தது. பெண்களை ஆபாசமாகத் திட்டியும், சிலரை தாக்கியும் வெறியாட்டம் போட்டது. ஆடு,மாடு, கோழி - உடைமைகள் - பணம் என்று அனைத்தையும் நாசப்படுத்தியது. போலீசின் வெறித்தாக்குதலில் இருந்து தம்மை காத்துக் கொள்ள மக்கள் அங்குமிங்கும் ஓடினார்கள். ஆடு,மாடு, கோழிகள் அலைக்கழிக்கப்பட்டன. ஓடிய ஒரு இளைஞர் தவறி கிணற்றில் விழுந்து பலத்த காயத்துடன் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எதற்காக போலீசின் இந்த வெறியாட்டம்?

முதல் நாள் இக்கிராமத்தைச் சேர்ந்த ஒருவரது தோட்டத்திலுள்ள கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் மோட்டாரை தூக்கிச் சென்றது, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் நடராஜ் தலைமையிலான போலீசு கும்பல். இதை பார்த்தவர்களில் சிலர் போலீசிடம் காரணத்தை கேட்டனர். அதற்கு அவர்கள், ''செல்லதுரை என்பவர் தனது தோட்டத்திலிருந்த மோட்டார் காணாமல் போய்விட்டதாக எங்களிடம் புகார் கொடுத்திருக்கிறார். அவரது மோட்டார் இந்த ஊரில் இந்த தோட்டத்தில் உள்ளதாக தகவல் வரவே இதை எடுத்துச் செல்கிறோம்'' என்று கூறினார்கள்.

ஆனால், திருட்டுப் போன மோட்டார் இதுவல்ல. இது 7 குதிரை இழுதிறன் கொண்ட மோட்டார் வகையைச் சேர்ந்தது. திருட்டுப் போன மோட்டாரோ 5 குதிரை இழுதிறன் கொண்ட மோட்டார் வகை. இந்த விவரம் தெரிந்திருந்த பாஸ்கரன், பெருமாள் ஆகியோர் திருட்டுப்போன மோட்டார் இதுவல்ல எனக் கூறி மோட்டாரை கொண்டு செல்ல அனுமதிக்க மாட்டோம் என தடுத்தனர். ஆத்திரமடைந்த போலீஸ் கும்பல் இருவரையும் தாக்கி போலீஸ் வேனில் ஏற்ற முயன்றது. இருவரும் தாங்கள் வர முடியாது என மறுத்து தம்மை விடுவித்துக் கொள்ள, எத்தனிக்க கைகலப்பாக மாறியிருக்கிறது. இதனால் மேலும் வெறியோடு இருவரையும் நடக்கக்கூட முடியாத நிலையில் கோரமாக தாக்கியது போலீசு கும்பல். செய்தியறிந்து வந்த தோட்டக்காரர் போலீசாரிடம் ''என்னுடைய உழைப்பால் கஷ்டப்பட்டு வாங்கிய மோட்டார் இது. எடுத்துப் போகாதீர்'' என்று மன்றாடினார். போலீஸ் வேனுக்கு முன்னே படுத்துக் கொண்டு ''எடுத்துப் போக விட மாட்டேன்'' என தடுத்தார்.

ஊருக்கு சற்று ஒதுக்குபுறமாக உள்ள இடத்தில் இச்சம்பவம் நடந்ததால் கொஞ்சம் கொஞ்சமாக செய்தி எட்ட, ஊர்மக்கள் வந்து கூடிக் கொண்டிருந்தனர். பெருவாரியான மக்கள் கூடிடவே இதற்கு மேலும் ஏதாவது செய்தால் விபரீதமாகிவிடும் என்பதை உணர்ந்து பாஸ்கரன் மற்றும் பெருமாளையும், மோட்டாரையும் விட்டுவிட்டு போய் விட்டனர்.

தன்னுடைய ஆற்றாமையையும், ஆத்திரத்தையும் போக்கிக் கொள்ள முடியாத போலீசு கும்பல் அதற்கு வடிகாலாக அடுத்த நாள் மக்கள் மீது வெறித்தாக்குதல் நடத்தினர். அப்பாவி மக்களை தாக்கி வெறியாட்டம் போட்டு 8 பேரை பலமாக தாக்கி, மருத்துவமனையில் சேர்த்து பின்னர் அவர்களை கைது செய்துள்ளது போலீசு. இச்சம்பவத்தால் பலர் பீதிக்குள்ளாகி கிராமத்தை விட்டு காலிசெய்து பாதுகாப்பு தேடி பக்கத்து கிராமங்களில் தங்கி உள்ளனர். சுற்றுவட்டார கிராமங்களுக்கும் போய் ''யாரும் மீனாட்சிபுரத்துக்காரர்களை தங்க விடக்கூடாது'' என மிரட்டி வருகிறது போலீசு.

இத்தனையும் செய்துகொண்டே, 'போலீசாரைத் தாக்க ரௌடிக்கும்பல் முயற்சி, 8 சமூகவிரோதிகள் கைது' என்ற தலைப்பில் பத்திரிக்கைகளுக்கு போலீசு செய்தி கொடுக்கவே இதை அப்படியே அனைத்து நாளேடுகளும் வாந்தி எடுத்தன.

தேவாரம், போடி சாதிக்கலவரம் சம்பவம் நடந்த தினத்திலிருந்தே இக்கிராமத்தில் போலீசு நடத்திவரும் அக்கிரமங்களுக்கு எதிராக வெகுண்டெழுந்த சில இளைஞர்கள் போலீசாரை 'பழிக்குப் பழி வாங்கியே தீருவோம்' என ஆவேசப்பட்டார்கள். செயலில் இறங்கவும் தயாரானார்கள். போலீசை தாக்குவது என்பது இன்றைக்கு நமது சக்திக்கு மீறிய செயல். நமது சக்திக்கு தகுந்த வண்ணம் எதிர்ப்பு தெரிவித்து போராடுவது தான் சரியானது என்று அதற்காக அணிதிரளும்படி அழைப்பு விடுத்து உத்தமபாளைய வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி பிரச்சாரம் மேற்கொண்டது. போலீசின் வெறித்தாக்குதலை கண்டித்து பேருந்துகளில் போஸ்டர் ஒட்டியது. போலீசார் அனுமதி மறுத்த போதிலும் அதை மீறி 20-6-90 அன்று காலை 11.30 மணி அளவில் போலீசின் வெறித்தாக்குதலைக் கண்டித்து தோழர் மகாலிங்கம் தலைமையில் கிராமச்சாவடி என்ற இடத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு உத்தமபாளையம் தாலுகா அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் எழுச்சிகரமாக நடத்தப்பட்டது. 50 பேர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கிராமத்துப் பெண்கள் தமது குழந்தைகளுடன் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது.

போலீசின் இந்த தாக்குதல் தொடர்பாக ஊர்மக்கள் 200 பேர் கையொப்பமிட்ட மனு ஒன்றை கொடுத்த பொழுது தாசில்தார் அலட்சியமாக வாங்கிக் கொண்டு 'பார்ப்போம்' என்றார். போலீசின் தாக்குதல் - அட்டூழியம் இனி நடக்காது என்பதற்கு மக்கள் மத்தியில் வந்து உறுதி கொடுங்கள் என வி.வி.மு. உறுதியாக நிற்கவே, வேறு வழியின்றி தாசில்தார் அவ்வாறே செய்தார். போலீசுக்கு எதிராக குரல் கொடுக்காமல் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் மௌனம் சாதிக்கின்ற வேளையில் சரியான வழிகாட்டியாக செயல்படும் வி.வி.மு. அமைப்பை மக்கள் பெரிதும் வரவேற்றனா.

போலீசு, இன்றும் குற்றவாளி பட்டியல் ஒன்று தயாரித்துக் கொண்டு கைது செய்வதற்காக ஊருக்குள் வந்து பீதியூட்டிக் கொண்டிருக்கிறது. இந்தப் பட்டியலில் வி.வி.மு. தோழர் ஒருவரையும் இணைத்துக் கொண்டு கைது செய்ய முயற்சி எடுத்து வருகிறது. தோழரை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் நடராஜ் இழுத்துப்போக முயற்சித்திருக்கிறார். ''நாங்கள் சமூக விரோதிகள் அல்ல. ரௌடிகளைப் போல் எங்களிடம் அணுகுவது தவறு. தனி நபர் பயங்கரவாத - மக்கள் விரோத செயல்களில் எங்களுக்கு நம்பிக்கை கிடையாது என்பது பற்றி தங்களிடம் பேச விரும்புகிறோம்'' என வி.வி.மு.வினர் போலீசு நிலையத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இதற்கு போலீசாரிடமிருந்து எவ்வித பதிலும் இல்லை.

போலீசுகளின் அடக்குமுறை புரட்சியாளர்களுக்கு புதியவை அல்ல. அதனை முறியடித்து முன்னேறி வருகிறார்கள்.

வி.வி.மு: உத்தம பாளையம்


படியுங்கள்!

இந்தியாவின் 'காஷ்மீர் யுத்தம்'

(எக்னாமிக் அண்டு பொலிடிக்கல் வீக்லி ஏட்டிலிருந்து)

பிரபல பத்திரிக்கையாளர்களும் மனித உரிமைக் கழகத்தினரும் காஷ்மீருக்கு நேரில் சென்று யதார்த்த நிலைமைகளைத் தொகுத்தளிக்கும் அறிக்கை.

'புதிய ஜனநாயகம்' வெளியீடு

விலை ரூ.3.50 124 பக்கங்கள்

நூலை அஞ்சலில் பெற விரும்புவோர் கட்டண உயர்வு காரணமாக ரூ.4.50 மதிப்புடைய அஞ்சல் தலைகளை அனுப்புக.


படிப்பகம்

www.padippakam.com

R.N. 42648/85

Regd.No.TN/MS(S) 344



துணை பிரதமர் தேவிலால், குளுகுளு பெங்களூரில் காங்கிரசு தலைவர் குண்டுராவுடன் கை குலுக்கிறார். பெங்களூரிலிருந்து பூனா செல்லும் நெடுஞ்சாலையில் ஜிண்டால் மருத்துவமனை உள்ளது. இயற்கை வைத்தியங்களின் மூலம் நோயை குணப்படுத்தும் இவ்விடத்திற்கு ஜூன் மாதம் மத்தியில் வந்தார். தேவிலால். ''உடம்பில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக எந்த நோயும் இல்லை. ஓய்வெடுத்து உடம்பை சோதித்துக் கொள்வதற்காக'' சகல ஐந்து நட்சத்திர வசதிகளுடன் அதிகார படையுடன் பொழுதை கழித்தார். காங்கிரசு, ஜனதா இப்படி எதிர்க்கட்சி தலைவர்களே தேவிலாலை ''நலம் விசாரிப்பதற்காக'' குவிந்தனர். முன்னாள் காங்கிரசு முதன் மந்திரி குண்டுராவ், தற்போதைய காங்கிரசு மந்திரி பங்காரப்பா, ஜனதாக் கட்சி தலைவரும் காங்கிரசு ஏஜெண்டுமான சுப்பிரமணிய சாமி, மற்றும் தேவகௌடா, டில்லியிலிருந்து வந்திறங்கிய 'நண்பர்' சந்திரசேகர் இவர்களுடன் அடிக்கடி அரசியல் ஆலோசனை நடத்தினார். தன் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், தனது எதிரியுமான ஹெக்டேவை, 'தேசீய' அரசியலிலிருந்தும், தேசீய திட்டக் கமிஷன் துணை தலைவர் பதவியிலிருந்தும் விரட்ட சதி செய்தார். கர்நாடக மாநிலத்தில் நடக்கவிருக்கும் ஜனதா தளக் கட்சி மாநில தலைவர் பதவிக்கு தனது விசுவாசியைக் கொண்டு வந்து ஹெக்டேவை முதல் சுற்று சண்டையிலேயே வீழ்த்த முயற்சிக்கிறார்.

இது பீகார் தலைநகர் பாட்னா அரசு பொது மருத்துவமனை! கிராமங்களில் தயிர் பானையை தூக்கில் மாட்டியிருப்பது போல, விபத்துக்களுக்குள்ளான சிறுவர்களின் உடைந்த கை, கால்களை கல்லுக் கட்டி தொங்கவிட்டிருக்கிறது. மருத்துவ நிர்வாகம்! அதற்கு தகுந்த மருத்துவ உபகரணங்கள் கூட இல்லை. பாழடைந்த மண்டபம் போல் இருக்கும் இந்த மருத்துவமனையிலிருந்து பிறந்த பச்சை குழந்தைகளை, நாயும் பெருச்சாளியும் தூக்கி சென்று கொன்று போட்டது பலமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனைக்கு வாங்கிய லட்சக்கணக்கான மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை மருத்துவ அதிகாரிகள் சொந்த மருத்துவமனையில் வைத்திருக்கின்றனர். புதிதாக கட்டிய மருத்துவ படுக்கை பிரிவுகளை அப்பகுதி கிரிமினல்கள் ஓய்வு விடுதியாக பயன்படுத்துகின்றனர்.

அரசியல் சதி நடத்துவதற்கு கூட அரசு செலவில் மந்திரிகள் அமைதியான ஐந்து நட்சத்திர மருத்துவமனைகளில் வாசம்! உயிருக்கு போராடும் மக்களுக்கோ நான்காம் தர மருத்துவம்! இந்த அநியாயத்தை இன்னும் எவ்வளவு நாள் நாம் தாங்கிக்கொள்வது?

# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்